மாத இதழ் - February 2012

# வண்ண வானவில்

30/-

பருவம் 02 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 16

## "இலங்கைத் தமிழன் விற்பனைக்கு அல்ல"

கருணாஸ் சீற்றம்

## சூர்யா Album

## காதலின் பரிமாணங்கள்

## Valentine Special



S.Krishkanthan @ ANCL 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIP Suriya Album





தம்பியுடன்...





அம்மம்மாவுடன்...




பொன்மனச் செம்மலின் கரங்களில்
அப்பா அப்பம்மாவுடன்...









| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | சரவணன் |
| பிறப்பு | - | 23 ஜுலை 1975 சென்னை, தமிழ் நாடு |
| கல்வி | - | B.Com (Loyola College) சென்னை |
| முதல் படம் | - | நேருக்கு நேர் (1996) |
| உயரம் | - | 5 அடி 6 அங்குலம் |
| எடை | - | 75 கிலோ |
| பட எண்ணிக்கை | - | 32 (இதுவரை) |
| அப்பா | - | சிவகுமார் என்ற பழனிச்சாமி |
| அம்மா | - | லஷ்மி |
| சகோதரர் | - | கார்த்தி (நடிகர்) |
| சகோதரி | - | பிருந்தா |
| மனைவி | - | ஜோதிகா |
| திருமண நாள் | - | 11 செப்டம்பர் 2006 |
| பிள்ளைகள் | - | தியா (10 ஆகஸ்ட் 2007) |
| | | தேவ் ( 7 ஜுன் 2010) |

பட உதவி: S.M.றிஸ்வான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளசுகள் முதல் காதல் பிரவேசம் செய்யும் தினமா

# காதலர் தினம்!




## ஒரு காட்டமான பார்வை

இப்போதெல்லாம் வருடந்தோறும் ஒவ்வொரு சிறப்புத் தினங்கள் வந்துபோகின்றன. அவையெல்லாம் தனியொரு நாட்டுக்கு என சொந்தமில்லாமல்-சர்வதேச ரீதியாக கொண்டாடப்படுவதால் முக்கியத்துவம் பெற்றுத் திகழுகின்றன என்று சொல்லலாம். மகளிர் தினம் அன்னையர் தினம், தந்தையர் தினம் என்று பலவகையாகக் குறிப்பிட்டுள்ள பட்டியலைப் பார்க்கும் போது, அதில் ஒன்றாக வருகிறது காதலர் தினம். ஏனைய சிறப்புத் தினங்களை அறியாதவர்கள்கூட, குறிப்பாக இளைஞர் யுவதிகளுக்கு, நன்கு அறிந்த தினமாக பெப்ரவரி 14ஆம் திகதி விளங்குகிறது. ஏனெனில் அன்றுதான் ''வலன்ரைன் டே'' (Valentine Day) என்று சொல்லப்படும் காதலர் தினம் வருகிறது.

காதல் என்பது புனிதமானது, தனித்துவமானது, தெய்வீகமானது, இயற்கையோடு இணைந்தது. காலங் காலமாக தொடருகிறது. ஆனால் அதைப் பிரயோகிக்கும் தன்மைதான் வெவ்வேறானது, அல்லது மாறுபட்டுள்ளது. இதனை அறிஞர்களது கருத்துக்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. தெய்வீகக் காதல், இலக்கியக் காதல், சரித்திரக்காதல் என பல வகை பற்றி நூல்களில் படித்திருக்கிறோம். அம்பிகாபதி-அமராவதி காதல், அனார்க்கலி-சலீம் காதல், சாஜகான்-மும்தாஜ் காதல், சகுந்தலை-துஷ்யந்தன் காதல், என பலவகையான கதைகள் பேசுகின்றன. சாஜகான்-மும்தாஜ் காதலுக்கு 'தாஜ்மகால்' ஒரு நினைவுச் சின்னமாக அமைந்திருக்கும் அளவுக்கு காதலின் மகத்துவம் உயர்ந்து நிற்கிறது என்றால் பாருங்களேன்! இங்கிலாந்து தேசத்தில் அரச பதவிக்கு வரவேண்டிய ஒரு இளவரசர் காதலுக்காகவே அரச வாழ்க்கையைத் துறந்தார் என்பதும் வரலாற்றுப் பதிவு.

முருகப்பெருமான், வள்ளி அம்மையாரை காதலித்து மணம் செய்து கொண்டதாக சொல்லும் புராணக்கதை தெய்வீகக் காதலின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது. சுந்தரமூர்த்திநாயனார் பரவையார் மீது கொண்ட காதலும் சமய வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

**அ. கனகசூரியர்**

இந்தக் காதல் நோயானது காலையிலே அரும்பாகி, பகற்பொழுதிலே பேரரும்பாக முதிர்ந்து, மாலைப்பொழுதில் மலர்ந்து காட்சியளிக்கிறது என்கிறது திருக்குறள். திருவள்ளுவர் பெருமான் காதலி இருவரது உணர்வலைகளை திருக்குறளிலே எடுத்துச் சொல்கிறார். ஒருவர் காதலரை கனவிலே கண்டவர். மற்றவர் காதலரை கனவிலும் காணாதவர். காதலனை கனவில் கண்டவள், 'காதலனிடமிருந்து தூதுகொண்டு வந்த கனவுக்கு, நான் என்ன விருந்து கொடுத்து உபசரிப்பேன்'' என மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறாள். 'காதலர் தூதொடு வந்த கனவினுக்கு யாதுசெய்வேன் கொல்விருந்து' என்கிறது திருக்குறள். 'காதலனை கனவினில்தான் காணவில்லை. என்றாலும் நேரில் வந்தும் சந்திக்கவில்லையே' என்று வருந்துகிறாள் மற்றப் பெண்.

> காதல் புத்திசாலித்தனத்தையும், கற்பனையையும் எப்போது மிஞ்சுகிறதோ அப்போது தான் அது நடக்கும்.

'நானவினால் நல்காரை நோவர் கனவினால் காதலர்க் காணாதவர்' என்பது திருக்குறள்.

திருவள்ளுவர் போற்றும் இத்தகைய மகத்துவம் வாய்ந்த காதலை கேவலமாக மதிப்பிடுவதும் இருக்கத்தான் செய்கிறது. வருடத்தில் ஒருநாள் காதலர் தினம் எனப் போற்றப்படுவதன் உண்மை அர்த்தம் என்ன?

கிறிஸ்து பிறப்பிற்கு 250 வருடங்களுக்கு பிற்பட்ட காலம் அது. இத்தாலியிலுள்ள ரோம் நகரில் வாழ்ந்தவர் வலன்ரைன் பாதிரியார். அப்போது ரோம் நகரை ஆட்சிபுரிந்து கொண்டிருந்த மன்னன் கிளாடியஸ் என்பவனாவான். இவன், தனது படைவீரர்கள் எவருமே திருமணம் செய்யக்கூடாது என்று ஒரு கட்டளை பிறப்பித்திருந்தான். இத்தடையானது படைவீரர்களுக்கு பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும் எவராலும் மன்னனின் கட்டளையை மீறமுடியவில்லை. இதேவேளையில் ஏதோவொரு குற்றத்திற்காக வலன்ரைன் பாதிரியாரும் சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார். இவர் காதலைப்பற்றி அறிந்தவராகவும், காதலின்பத்தை உணர்ந்தவராகவும் இருந்ததுடன், தனது மதப் போதனைகளின் ஊடாக காதலின் தனித்துவத்தை போற்றி மதித்து, திருமணம் மூலமான இல்வாழ்க்கையை ஆதரித்தும் வந்தவர்.

சிறையில் இருந்த காலத்தில் கிளாடியஸ் மன்னனின் படையிலிருந்த இளம் வீரர்களுக்கு திருமணமும் செய்து வைத்துள்ளார். அதேவேளையில் கண்பார்வையற்றிருந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவரின் மகளுக்காக ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்து பார்வை பெற்றுக்கொடுத்திருந்தார். இதனால் அந்தப் பெண்ணுக்கு பாதிரியார்மீது காதல் ஏற்பட்டது. அந்தச் சந்தப்பத்தில் பாதிரியார் இளம்படை வீரர்களுக்கு திருமணம் செய்து வைத்ததகவலை அறிந்து கொண்ட மன்னன், பாதிரியாருக்கு மரணதண்டனை விதித்து விட்டான். பெப்ரவரி 14ஆம் திகதியன்றே தண்டனை நிறைவேற்றப்பட்டது. அன்றுமுதலாக இதே தினம் காதலுக்கு உரிய நாளாக-காதலர் தினமாக வருடந்தோறும் சர்வதேச ரீதியில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்தினத்தன்று மலர்ச்செண்டுகளையும், பரிசுப் பொருட்களையும், வாழ்த்து மடல்களையும் பரிமாறிக் கொள்வதே இதன் சிறப்பாக இருக்கிறது. நீண்டகாலமாக இத்தினம் பலராலும் அறிப்படாமலிருந்தது. அண்மைக்காலத்தில் தான் சர்வதேச ஊடகங்கள் வர்த்தகமயப்படுத்தும் நோக்கம் கருதி இத்தினத்தை பிரபல்யமடைய வைத்து வருகின்றன. இன்னொரு வகையில் சொன்னால், மேலைத்தேய கலாசார நாகரிகத்தின் இறக்குமதியாகவே இது இலங்கை, இந்திய நாடுகளுக்கும் இப்போது வந்துவிட்டது என்பதே பொதுவான கருத்து.

இன்றைய இளம் காதலர்களும் காதலர் தினத்தின் உண்மை நிலையை அறியாமல் தங்கள் காதலுக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கும் ஒரு நாளாகவோ அல்லது நீண்டநாள் காதலை மிகவும் நெருக்கமடையச் செய்யும் ஒருநாளாகவோ நினைத்து, அவர்கள் மேற்கொள்ளும் நெருங்கிய உறவானது, பின்னர் நெருக்கடி நிலைக்கு தள்ளிவிடுகிறது என்பது பலராலும் கண்டறியப்பட்டுள்ளது.

இன்றைய காதல் செயற்பாடுகளுக்கு வடபகுதியும் விலக்காகவில்லை. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்று சொல்லப்படுவதற்கும் மேலாக, காதலர் இருவர் கருத்தொருமித்ததாலோ என்னவோ இளவயதிலேயே கர்ப்பம் தரித்துள்ள சம்பவங்கள் பல வடபகுதியில் அண்மைக்காலத்தில் நடந்தேறியுள்ளன. யாழ் அரச அதிபரும், மருத்துவ அதிகாரியும் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியிருந்த தகவல்களின் அடிப்படையில், பிரதேச ரீதியாக சம்பந்தப்பட்டவர்களது எண்ணிக்கை அண்மையில் ஊடகங்களில் வெளியாகியிருந்தது பலருக்கும் நினைவிருக்கலாம்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவரைச் சந்தித்து காதலர் தினம் சம்பந்தமாக உரையாடினோம். காதலர் தினத்தை எந்தவகையில் மதிக்கிறீர்கள் என குடும்பப் பெண்மணியொருவரிடம் கேட்டோம். ''எனக்கு இதில் நம்பிக்கை இல்லை. இல்லற வாழ்வுக்கு ஆரம்பமாக அமைந்த எங்களது திருமணநாளை மட்டுமே வாழ்வில் வருடந்தோறும் கொண்டாடிவருகிறோம். காதல் என்றாலே அன்புதானே! குதூகலமான இல்வாழ்க்கைக்கு இனிமை சேர்ப்பது அன்பு. எனது கணவரும் நானும் பரஸ்பரம் அன்பை பரிமாறிக்கொள்வது போலவே, இரு பிள்ளைகளும் எங்கள்மீது காதல் கொண்டு அன்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். இதுவே எங்களுக்குப் போதுமானது'' என்கிறார் அவர்.

> உங்கள் காதலி உங்கள் மேல் வைத்திருக்கும் காதலின் அளவு நீங்கள் அவள் மேல் வைத்திருக்கும் காதலின் அளவுக்கு எதிர் விகிதத்தில் இருக்கும்.

காதலர் தினம் கொண்டாடப்படுவது சமகால இளம் சமுதாயத்தினருக்குப் பொருத்தமானதாக இருக்கிறதா? என நடுத்தர வயது குடும்பத் தலைவர் ஒருவரிடம் கேட்டோம்.

(31ஆம் பக்கம் பார்க்க)




வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு
– பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

அட்டையை அலங்கரிப்பவர்
இலங்கை அழகி
ஜெக்கலைன் பெர்னான்டஸ்

மார்ச் மாத வானவில் 10ம் திகதி முதல் கடைகளில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழனை விற்று வயிறு வளர்ப்பவன் நான் அல்ல!

## கொந்தளிக்கிறார் கருணாஸ்

உரையாடல்: மணி ஸ்ரீகாந்தன்



திண்டுக்கல்சாரதி, அம்பா சமுத்திரம் அம்பானி என அடுத்தடுத்து இரண்டு ஹிட் படங்களை கொடுத்த நடிகர் கருணாஸ். மனோகரனின் இயக்கத்தில் அடுத்து நடிக்கவுள்ள 'ரகளைபுரம்' படத்தின் வேலைகளில் பரபரப்பாக ஈடுபட்டுக்கொண்டிருந்த போது சென்னை சாலிகிராமத்திலுள்ள கென்மீடியா (Ken Media) அலுவலகத்தினுள் நுழைந்தோம். இயக்குனர் மனோகரனுடன் அமர்ந்து தனக்கு ஜோடியாகப் போகும் அறிமுக நாயகி அங்கனாவின் போட்டோக்களை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

''எப்படி இந்த ஜோடி நமக்கு பொருந்துமா பாருங்க என்றார் எம்மிடம். ''நல்லா இருக்கு சார். முகத்தில் குடும்ப கலை தெரியுது'' என்றோம். உண்மையைத் தான் சொன்னோம். அங்கனா அழகு மயிலாகத் தான் இருந்தாங்க.

தமிழ்த் திரையுலகில் ஒரு நடிகன் கதாநாயகனாக நடித்து விட்டால் மீண்டும் பழைய நிலைக்குச் சென்று நகைச்சுவை அல்லது வில்லன் பாத்திரங்களில் நடிப்பது கிடையாது. தொடர்ந்தும், நாயகனாகவே நடிக்க முயற்சிப்பார்கள். இது 'பிரஸ்டிஜ்' விடயமாகிவிட்டது. ஆனால் கருணாஸ் அப்படியல்ல. கதாநாயகனாகவும், வில்லனாகவும் ஒரே சமயத்தில் நடித்துக் கொண்டிருக்கும் பிஸியான நடிகர். மரபுகளைத் தாண்டிச் செல்ல விரும்புகிறவர்.

''நான் நாயகனாக நடித்த பிறகு எனக்கு வாய்ப்பு கொஞ்சம் குறைந்து விட்டது. அவர் ஹீரோவாகிவிட்டார். இனி நகைச்சுவைக்கு வேற ஆளைத்தான் தேடனும் என்று சிலர் நினைத்துக் கொள்கிறார்கள். இது தவறு. நகைச்சுவை பாத்திரங்களில் நடிக்க நான் தயார். தமிழில் இருக்கும் இந்த 'ஹீரோ' பிரச்சினை மலையாளத்தில் இல்லை. இயக்குநர் சீனிவாசன் மலையாளத்தில் மிகச் சிறந்த இயக்குனர். அவர் நினைத்தால் நடிப்பார், இயக்குவார், நகைச்சுவை பாத்திரங்களிலும் தோன்றுவார். எந்த வேடத்திலும் நடிப்பார்.

அவரின் படங்களான குசேலன், வெள்ளித்திரை, சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி ஆகிய படங்கள் மலையாளத்திலிருந்து தமிழுக்கு 'ரீமேக்' செய்யப்பட்டன. ஆனால் அவை வெற்றிபெறவில்லை. நான் நாயகனாக நடித்த அவரது படமான திண்டுக்கல் சாரதி மட்டுமே தமிழில் வெற்றிப் பெற்றது. அம்பா சமுத்திரம் அம்பானிக்கு பிறகு நான் நடிப்புக்கு கொஞ்சம் இடைவெளி விட்டேன். இப்படியே நடிக்காமல் இருந்தால் உங்களை மக்கள் மறந்து விடுவார்கள் என்று சொல்கிறார்கள். என்.எஸ். கிருஸ்ணனையே இன்னமும் ஞாபகத்தில் வைத்திருக்கும் மக்கள் இந்த கருணாஸையா மறந்து விடப்போகிறார்கள்? மக்கள் அறிவாளிகள். எந்த வேடத்தை சிறப்பாகச் செய்தாலும் ரசிப்பார்கள். அதற்காக பறந்து பறந்து சண்டை போடுவதும், மெஷின் துப்பாக்கியால் சுடுறதும் நமக்கு சரிபட்டு வராது. காட்சிக்கு சண்டை வேண்டுமானால் வைக்கலாம். அதற்காக எனக்கு மூன்று பைட் சீன் வையுங்கள் என்று கேட்டு வாங்குறது கிடையாது. இப்போ உதாரணத்துக்கு ஒன்று சொல்றேன்.

பொண்டாட்டியோட ரோட்டில் போறேன் அப்போ ஒருத்தன் என் பொண்டாட்டி கையப் பிடித்து இழுத்தா அதை பார்த்துக்கிட்டு நான் சும்மா இருக்க முடியுமா? அப்படி இருந்தா நான் ஆம்பளையே இல்லையே!'' என்கிறார் கருணாஸ்.

2003, தொடக்கம் 2005 வரையான காலப்பகுதிகளில் அதிகளவில் படங்களில் நடித்திருக்கும் கருணாஸ், வடிவேல், விவேக்கிற்கு பிறகு வந்த முன்னணி நகைச்சுவை நடிகர்களில் ஒருவர். ஆனால் அன்மைக்காலங்களில் இவரின் படங்களின் வருகை மிகவும் குறைந்து விட்டது. என்ன காரணம்? என்று கருணாஸைக் கேட்டோம்.

''அப்போது போட்டி இல்லீங்க.. வடிவேலு, விவேக், கருணாஸ் இந்த மூன்று பேரை விட்டா ஆளில்லை. ஆனா இப்போ அப்படி இல்லை. கஞ்சா கருப்பு, சந்தானம் என்று புதுசு புதுசா நிறைய பேர் வந்திருக்காங்க.

ஆனாலும் ஒரு விசயம் சொல்லனும். நான் ஒரு சமயத்தில் வருடத்திற்கு பதினைந்து படங்கள் செய்திருக்கிறேன். அவற்றை இப்போ கணக்கு பண்ணிப் பார்த்தா நான் ஒரு வருடத்தில் நடித்த படங்களில் ஒரு சில தான் வெற்றி பெற்றிருக்கும். மற்றவை ஏனோ தானோ என்று ஓடியிருக்கும், ஆனால் இப்போ நடிப்பது குறைவாக இருப்பதால் கதைகளை தேர்வு செய்து நடிப்பதற்கு அவகாசமும் இருக்கிறது. நிறைவாகவும் இருக்கிறது. ஏனென்றால் என்னைப் பொறுத்தவரையில் இதுதான் எனக்கு வரலாறு. நான் இறந்த பிறகு ஒரு பத்து பேராவது கருணாஸ் ஒரு நல்ல நடிகன், நல்லா செய்திருக்கான் என்று சொல்லனும்.''

கருணாஸின் இரண்டு படங்கள் அடுத்தடுத்து வெற்றி பெற்றதற்கு அவர் கதைகளைத் தேர்வு செய்து நடித்தது தான் காரணம். ''இப்போ ஆர்னல்ட் ஸ்வெட்ஷனாகர் பண்ற வேடத்தை நான் பண்ண முடியுங்களா? நமக்கு முடிந்ததை நாம் செய்யனும். பாலா அண்ணன்தான் என்னை நந்தா படத்தில லொடுக்கு பாண்டி என்ற பாத்திரத்தில் அறிமுகம் செய்தார். அன்றிலிருந்து இன்று வரை நகைச்சுவைக்கு தான் முக்கியத்துவம் கொடுக்கிறேன். நகைச்சுவை கலந்த நாயகன் வேடம் தான் நமக்கு பொருந்தும். அதோடு கதையில் முக்கியமாக நம்பகத் தன்மை இருக்க வேண்டும், மக்கள் நம்பக் கூடிய மாதிரி இருப்பது தான் நம்ம படத்திற்கு அழகு'' என்று சொல்லும் கருணாஸின் சொந்த ஊர் புதுக்கோட்டை அறந்தாங்கி. இது தமிழ்நாட்டின் கரையோர பகுதி என்பதால் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தெளிவாக கேட்கும். இன்று கூட கே.எஸ்.ராஜா பேசுவது போல, 'நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது.... இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தமிழ்ச்சேவை அம்மம்மா...அப்பப்பா.... என்று மறக்காமல் அப்படியோ கருணாஸ் பேசியும் காட்டுகிறார்.

இலங்கை வரவிரும்பும் கலைஞர்களுக்கு தடைபோடும் தென்னிந்திய குழுக்களைப் பற்றி கேட்டோம். உடனே உணர்ச்சி வசப்பட்டுப் போனார் கருணாஸ்.

''ஈழத்தமிழன் மீது எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. ஆனால் ஒரு சிலர் தாங்கள் மட்டும் தான் ஈழத்தமிழ் அனுதாபிகள் என்று காட்டிக் கொள்வது தான் எனக்குப் பிடிக்கவில்லை. தமிழனுடைய மானமும் தமிழனுடைய அவமானமும், தமிழனுடைய துயரங்களும் உனக்கு வியாபாரமா? கதிர்காம கந்தனுக்கு நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காக நான் இலங்கை வரத் தயாரான போது என்னை போக விடாமல் தடுத்தார்கள். நான் இலங்கை ஜனாதிபதியிடம் பணம் வாங்கிக் கொண்டு கொழும்பு செல்வதாக பொய் பிரச்சாரம் செய்தார்கள். தனிப்பட்ட மனிதனுடைய உரிமையில் தலையிட எவனுக்கும் உரிமை கிடையாது. தமிழன் மீது உன்னை விட எனக்கு அதிகமான அக்கறை இருக்கிறது. நான் மனிதன். நீ வியாபாரி. என்னைப் பற்றி பொய்யான செய்திகளை இவர்கள் பரப்பும் போது அந்த செய்தி உண்மை தானா?'' என்று விசாரித்து செய்திகளை வெளியிடுவதுதான் ஊடக தர்மம். ஆனால் இங்கே நேர்மாறாக அல்லவா நடக்கிறது! ஒரு பிரபலமான மனிதனை விபசாரத்தில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்கிறார்கள். அவன் ஒரு சினிமா கலைஞனாகவோ, அல்லது மக்களுக்குத் தெரிந்த முகமாகவோ இருக்கும் பட்சத்தில் அந்த நபரின் படத்தை அட்டையில் போட்டு முன்பக்க செய்தியாக்கி விடுகிறார்கள். அதே நேரத்தில் அவன் நிரபராதி என்று விடுதலையாகி வரும் போது அந்த நபர் பற்றிய செய்தியை கடைசிப் பக்கத்தில் சின்னதாகப் போடுகிறார்கள். இது என்னங்க தர்மம்?

''இவர்களின் தடையை மீறி இலங்கை சென்றால் நமது திரைப்படங்களை புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் புறக்கணிப்பார்கள் என்றும் ஒரு கதையை பரப்பி விடுகிறார்கள். உனக்கு உண்மையானவனை அடையாளம் காணத் தெரியா விட்டால் எவன் நல்லவன் எவன் கெட்டவன் என்று புரிந்து கொள்ள முடியாவிட்டால் நீ படத்தை பார்த்தால் என்ன பார்க்காட்டி என்ன! நான் இதுவரைக்கு எந்த நாட்டுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தியது கிடையாது. ஈழத் தமிழனுக்கு கஷ்டம் வந்து விட்டதே என்பதற்காக இங்குள்ளவன் சாப்பிடாமலும் தூங்காமலும் இருக்கானா? சட்டைப்போடாமலும், கல்யாணம் செய்யாமலும் இருக்கானா? குழந்தை பெத்துக்காமலும் சொத்து சேர்க்காமலும் இருக்காங்களா? அப்போ யாரடா ஏமாத்துறீங்க? எதுக்காகடா இந்தப் பிரசாரம்?

இங்கே உண்மையான தமிழ் ஆர்வலர்கள் இருக்கிறார்கள். உலகத்தமிழர்கள் அறிவாளிகள். உண்மையை புரிந்து கொள்வார்கள். தமிழனுக்கு பாரம்பரியமாக சில குணாதிசயங்கள் இருக்கின்றன. இது மற்ற இனங்களிடம் இல்லை. ஏனென்றால் இவன்தான் ஆதிமனிதன். இவனுக்கு நிறைய விசயம் தெரியும்.'' என்று கொந்தளித்து அடங்குகிறார் கருணாஸ்.

கருணாஸ் நம்நாட்டு கலைஞர்களுடன் நெருக்கமான நட்பு வைத்திருக்கும் ஒரு நடிகர். நடிகன் என்பதற்கு அப்பால் மனிதநேயம் கொண்ட மனிதனாகவும் வாழ்பவர். விளம்பரம் எதுவும் இல்லாமல் இலங்கை அகதி மாணவர்களை தமது சொந்த பணத்தில் கல்லூரியில் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார். 36 பிள்ளைகளுடன் ஆரம்பித்த பிள்ளைகளைப் படிப்பிக்கும் கருணாசின் கருணை முயற்சி இன்று 46 எண்ணிக்கையையும் தாண்டிவிட்டது.

''ஈழம்நேரு என்பவர்தான் ஒரு நாள் என்னைச் சந்தித்து இலங்கை அகதி பிள்ளைகளை கல்லூரியில் படிக்க வைக்க உதவி கேட்டார். இலங்கை அகதி பிள்ளைகளின் படிப்பை பாடசாலையோடு மட்டும் நிறுத்தி விட வேண்டும் என்று மத்திய அரசில் ஒரு நிபந்தனை இருக்கிறது என்ற விடயமே அவர் சொல்லித்தான் எனக்குத் தெரியும். 'அவர்களின் படிப்பை கல்லூரி வரை கொண்டு செல்ல வேண்டுமானால் முகாமிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவர வேண்டும். பின்னர் அவர்களைக் கல்லூரிகளில் படிப்பைத் தொடரச் செய்ய வேண்டும். இதுதான் நாங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை' என்று அவர் சொன்னபோது நான் நொறுங்கி போனேன். என் மக்களை அகதி என்று அழைப்பது எனக்கு உடன்பாடான விஷயமல்ல. உங்களிடம் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்பது தான் என் முதல் கேள்வியாக இருந்தது அவர்கள் எல்லோரையும் அனுப்புங்கள் நான் படிக்க வைக்கிறேன் என்று கூறி இதை ஆரம்பித்தேன். இது வரை இந்த பிள்ளைகளைக் காட்டி நான் யாரிடமும் நன்கொடை வாங்கியதில்லை. நான் இப்படியொரு காரியம் செய்கிறேன் என்பது உலகத் தமிழனுக்குத் தெரியுமா என்பது கூட எனக்குத் தெரியாது நான் வியாபாரியாக இருந்திருந்தால். இந்த இலங்கை பிள்ளைகளை பிச்சைக்காரர்கள் போல உட்கார வைத்து மீடியாக்களுக்கு பேட்டி கொடுத்திருக்கலாம். ஆனால் அப்படியொரு ஈனத்தனமான ஆள் இந்த கருணாஸ் கிடையாது.'' என்று உணர்ச்சி பொங்க கருணாஸ் பேசி முடித்தார்.

அவரை வாழ்த்தி விடை பெற்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழ் திரையுலகம்

தம்பி ஐயா தேவதாஸ்

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவைபடப் பதிவு செய்கிறார்.*



# DVDயில் வெளிவந்திருக்கும் 40 வருடங்களுக்கு முன் தயாரான குத்துவிளக்கு

இலங்கையில் இதுவரை 35க்கு மேற்பட்ட தமிழ்ப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும் 1983 ஆம் ஆண்டுக்கு பின்பு தயாரிக்கப்பட்ட சில படங்களே இப்பொழுது இருக்கின்றன. 83ஆம் ஆண்டுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட பல தமிழ்ப்படங்கள் இப்பொழுது எமக்குப் பார்க்கக் கிடைப்பதில்லை. அவை அழிந்துவிட்டன. அழிக்கப்பட்டுவிட்டன.

இலங்கையில் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களில் சில இலங்கை மண் வாசம் வீசியதை அவதானிக்க முடிந்தது. அவை இலங்கையுடன் தொடர்புடைய கதை அமைப்பைக் கொண்டிருந்தன. 'குத்துவிளக்கு', 'வாடைக்காற்று', 'பொன்மணி', புதியகாற்று' போன்ற சில படங்களே இலங்கைத் தனிமை கொண்டிருந்ததாக விமர்சகர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். இவற்றிலே ஒரு படத்தைத் தவிர மற்றவை அனைத்தையும் பார்க்கமுடியாது ஏனெனில் அவை அழிந்து விட்டன.



பாடல் ஒலிப்பதிவின்போது வி.எஸ்.துரைராஜா, கதை வசனகர்த்தா ஈழத்து ரெத்தினம், ஒளிப்பதிவாளர் சாரங்கராஜா மற்றும் இயக்குநர் எஸ்.மகேந்திரன்

தப்பித்துவிட்ட ஒரேயொரு படம் 'குத்துவிளக்கு' ஆகும். 1990 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'குத்துவிளக்கு' அதன் தயாரிப்பாளரான அமரர் வி.எஸ்.துரைராஜாவின் முயற்சியால் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. அத்திரைப்படம் எஸ்.பாலேந்திரனின் முயற்சியால் இறுவெட்டு (டிவிடி) வடிவில் உருவாக்கப்பட்டது. இப்பொழுது 'குத்துவிளக்கு' திரைப்படம் டிவிடி வடிவில் எம்மில் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. கலைகள் 'காலத்தின் கண்ணாடி' என்பார்கள். இந்தச் சினிமாக்கலை கூட காலத்தின் கண்ணாடிதான். அந்தவகையில் 'குத்துவிளக்கு' திரைப்படமும் அக்காலத்தை அதாவது 40 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தை எங்களுக்கு எடுத்துக் காட்டுகிறது.

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் உருவாகிய இத் திரைப்படத்தில் அக்கால கிராமியப் பண்பாட்டுச் சின்னங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பரந்து கிடக்கும் வயல்வெளிகள், அவற்றினிடையே எழுந்து நிற்கும் பழங்காலக் கோயில்கள். மாட்டு வண்டிச் சவாரிகள், கிணறுகளில் இருந்து தண்ணீர் இறைக்கும் துலாக்கள், கிராமத்தவர்கள் மது பருகும் கள்ளுக்கொட்டில்கள், எருதுகளை கலப்பையில் பூட்டி வயல் உழும்காட்சி, அக்கால சங்கானைச் சந்தைக் காட்சி என்று பல்வேறு பழைய காட்சிகளை படத்தில் காணமுடிகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய கால கட்டிடங்களையும் காணமுடிகிறது. அந்தக்கால நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாக் காட்சிகள், செல்வச்சந்நிதி முருகன் கோவில் தேர்த்திருவிழாக் காட்சிகள் இப்பொழுது அழிந்து போய்விட்ட யாழ்ப்பாணக் கோட்டை, மற்றும் பழைய யாழ்ப்பாண நூலகம், பருத்தித்துறை வெளிச்ச வீடு என்று பல இடங்களையும் பொருள்களையும் மீண்டும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

இந்தக்கால சிறுவர்களுக்கு தண்ணீர் இறைக்கும் துலாவைத் தெரியாது. வயல் உழும் கலப்பையைத் தெரியாது கிராமத்தவர்கள் கள் பருகும் 'பிளா' என்னும் பனையோலையால் செய்யப்பட்ட பாத்திரத்தை தெரியாது. எருதுகள் பூட்டி சூடடிக்கும் காட்சிகள் தெரியாது ஆனால் இத்திரைப்படத்தில் அவை எல்லாம் எடுத்தாளப்படுகின்றன.



யோகாதில்லைநாதனும் சசி நாகேந்திரனும்

இப்படியான பயன்மிக்க படத்தைத் தயாரித்தவர் கட்டிடக் கலைஞர் வி.எஸ்.துரைராஜா. அவர்களே ஆவார்.

வி.எஸ்.துரைராஜா பல்வேறு பணிகளில் ஈடுபட்டவர். பல்வேறு கட்டிடங்களை அமைத்துக் கொடுக்கும் கட்டிடக் கலைஞர். அவர் சினிமா ஆர்வலர் மட்டுமன்றி தமிழ் உணர்வாளரும் கூட. அனைத்து உலக தமிழாராய்ச்சி மகாநாடுகளின் இலங்கைக் கிளையின் செயலாளராக இருந்து பல்வேறு பணிகளில் ஈடுபட்டவர். அவரால் வடிவமைக்கப்பட்ட பல கட்டிடங்கள் இலங்கையிலும் அவுஸ்திரேலியாவிலும் உயர்ந்து நிற்கின்றன. யாழ் நவீன சந்தைக் கட்டடம், யாழ் நூலகம், தந்தை செல்வா நினைவுத்தூபி, கொழும்பு தமிழ்ச் சங்க கட்டடம் எல்லாம் இவராலேயே வடிவமைக்கப்பட்டன. இவரே குத்து விளக்கைத் தயாரித்தார்.

'குத்துவிளக்கு' திரைப்படம் யாழ்ப்பாணத்துக்கே உரிய கதை அமைப்பைக் கொண்டிருந்தது. யாழ்ப்பாண உரையாடலே 'குத்துவிளக்கு' திரைப் படத்தின் கதைக்கரு. விவசாயம் பொய்ப்பதால் ஏற்படும் பிரச்சனைகள், கிராமப் பெண்ணுக்கு ஏற்படும் உண்மையான காதல், நகர இளைஞர்களிடையே ஏற்படும் பொய்க் காதல், பணக்கார வாலிபர்களின் பொழுதுபோக்குக் காதல். சீதனப் பிரச்சனை போன்ற பல விடயங்களைச் சுற்றிச் சுழல்கிறது கதை.

விவரணையும் கதையும் சார்ந்த ஒரு படைப்பாக குத்துவிளக்கு திகழ்ந்தது. யாழ்ப்பாணப் பண்பாடுகளை எடுத்துக்காட்டும் விவரணமாகவும் யாழ்ப்பாணத்துக்கே உரிய கதை கொண்ட கலைப்படைப்பாகவும் 'குத்துவிளக்கு' திரைப்படம் திகழ்வதை அவதானிக்கலாம்.

இத்திரைப்படத்தை உருவாக்கிய தொழில்நுட்பக் கலைஞர்கள் பலர் இப்பொழுது உயிருடன் இல்லை. தயாரிப்பாளர் வி.எஸ்.துரைராஜா 14.12.2011 இல் காலமானார். படத்தின் இயக்குனர் எஸ்.மகேந்திரன் 2010 இல் காலமானார். கதை, வசனகர்த்தா ஈழத்து ரெத்தினமும் இசையமைப்பாளர் ஆர்.முத்துசாமியும் பல வருடங்களுக்கு முன்பே காலமாகி விட்டார்கள். கதாநாயகன் ஆனந்தன் சவூதி அரேபியாவில் தொழில் பார்க்கிறார். கதாநாயகி லீலா நாராயணன் இந்தியாவில் வசிக்கிறார். யோகாதில்லை நாதன் இங்கிலாந்தில் வசித்து வருகிறார். சசி.நாகேந்திரன் அவுஸ்திரேலியா வாசி.



ஆனந்தனும் சாந்தியும்

இப்படி குத்துவிளக்கின் கலைஞர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து வாழ்கிறார்கள்.

கல்யாணத்தரகராகத் தோன்றிய எம்.எஸ்.ரத்னம், தந்தையாராக தோன்றிய சாந்திலேகா ஆகியோரும் மறைந்து விட்டனர். மரிக்கார் ராமதாஸ் இப்போது தமிழகத்தில் வசித்து வருகிறார். குடும்பத்தில் மூத்த மகனாக நடித்தவரின் நடிப்புத்திறமை அக்காலத்திலேயே கடுமையான விமர்சனத்துக்குள்ளானது. அவரது பாத்திரத்துக்கு வேறு யாராவது நடிகரை சேர்த்திருக்கலாம் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அதே சமயம் ஆனந்தன் - லீலா நடிப்பைப் பலரும் பாராட்டினர். 'குத்துவிளக்கு' திரைப்படத்தில் இனிமை யான மூன்று பாடல்கள் இடம் பெற்றிருந்தன. 'ஈழத்திரு நாடே என்னருமைத் தாயகமே இருகரம் கூப்புகிறோம் வணக்கமம்மா' என்ற பாடல் ஆரம்பமாகும் பொழுது ரசிகர்கள் மெய்சிலிர்த்துப் போவார்கள். அமரர் எம்.பி.குலசீல நாதன் உணர்வு பொங்க அப்பாடலைப் பாடியிருந்தார்.

இப்படத்தின் பாடல்களுக்கு இசையமைத்த ஆர்.முத்துசாமியும் ஒரு பாடலைப் பாடியுள்ளார். அது ஒரு இனிமையான பக்திப் பாடலைப் போல ஒலித்தது. நல்லூர் கந்தசாமி கோவில், செல்வச்சந்நதி முருகன் ஆலயம் ஆகியவற்றின் திருவிழாக் காட்சிகள் படத்தில் இடம்பெறும் பொழுது இப்பாடல் ஒலித்தது பொருத்தமாக இருந்தது. அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய இலங்கை வானொலியின் மெல்லிசைப் பாடகியான மீனா மகாதேவனும் இனிமையான பாடலொன்றைப் பாடியிருக்கிறார்.

'வாழ்க்கையின் பிரதிபலிப்பை கலை' என்பார்கள். 'குத்துவிளக்கு' என்னும் இந்தக் கலைப்படைப்பும் அந்தக் காலத்தை எடுத்துக் காட்டும் கலைப்படைப்பாக விளங்குகிறது. 40 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது? அங்குள்ள மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்களது பொழுது போக்குகள் என்ன? அவர்களது கவலைகள் எல்லாம் என்ன? போன்ற இன்னோரன்ன கேள்விகளுக்கு 'குத்துவிளக்கு' பதில் சொல்லுகிறது. 'குத்துவிளக்கு' இறுவெட்டில் இன்னுமொரு விசேடமும் உண்டு. அந்தப்படத்தை தயாரித்த வி.எஸ்.துரைராஜாவின் பேட்டியும் இடம் பெற்றிருப்பது தான் அந்த விசேடம். படம் 1971 ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. அந்தப் பேட்டி 1985 இல் எடுக்கப்பட்டது.

40 வருடப் பழமையான 'குத்துவிளக்கு' திரைப்படத்தையும் 25 வருடகால பழமையான பேட்டியையும் இந்த இறுவெட்டில் காணமுடிகிறது. இந்தப்படத்தை தான் ஏன் தயாரித்தார்? கலைஞர்கள் எல்லோரும் எப்படி நடந்து கொண்டனர்? என்ற கேள்விகளுக்கு இப்பேட்டி விடை சொல்கிறது.

இந்த இறுவெட்டில் காணப்படும் குறைதான், படத்துக்கு ஆங்கில சப்டைட்டில் இல்லாதது. படத்தில் நடித்த, பங்கேற்ற கலைஞர்களில் பலர் மறைந்துவிட்டனர். அவர்களை ஆங்கிலத்தில் அறிமுகம் செய்திருக்கலாம். இதன் மூலம் தமிழ் தெரியாதவர்களுக்கு 40 வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட படத்தை, அதன் சிறப்பை அறிமுகம் செய்திருக்கலாம். இது ஒரு பெரிய குறைதான்.

இலங்கையில் 'குத்துவிளக்கு' போன்ற படங்கள் தொடர்ந்து தயாரிக்கப்பட்டிருந்தால், 1983 இனக் கலவரம் வராமல் இருந்திருந்தால், இலங்கை தமிழ்த் திரை உலகம் எவ்வளவோ உயர்ந்திருக்கும். எனினும் குத்துவிளக்கு டிவிடியை பார்ப்பதன் மூலம் இன்றைய ரசிகர்கள் தவறிப்போன அந்தப் பொற்காலத்தை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். பார்க்கத் தவறியவர்களுக்கும் இது ஒரு வாய்ப்பு. அந்த வகையில் இத்திரைப்படத்தை 'டிவிடி' வடிவில் வெளியிட்டவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இந்த குத்து விளக்கு டிவிடிக்கு ரசிகர்கள் ஆதரவு தந்தால் கைவசம் இருக்கும் இலங்கைத் திரைப்படங்கள் மற்றும் பாடல்கள், பதிவுகள் என்பனவற்றையும் டிவிடி உருவில கொண்டு வரக்கூடியதாக இருக்கும்.

'குத்துவிளக்கு' திரைப்படத்தின் 'டிவிடி' இறுவட்டுகளை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள பூபாலசிங்கம் புத்தகக்கடையில் பெற்றுக்கொள்ளலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்ட பொம்மன் வாரிசுகளுக்கு மானியம் தருகிறார்கள்: எங்களுக்கு ஏன் மறுக்கிறார்கள்?

## கோபப்படும் ராஜசிங்கன் வாரிசுகள்

**வேலூரிலிருந்து மணி ஸ்ரீகாந்தன்**

கண்டி ராஜ்ஜியத்தை இழந்த ராஜசிங்கன் கைதியாகி தமிழ்நாட்டுக்கு நாடு கடத்தப்பட்ட போது அவரின் உறவினர்கள் உள்ளிட்ட அறுபது பேர் அந்தக் கப்பலில் பயணித்தார்கள். ஏழு வயது சிறுவனாகவிருந்த தனது மகன் கண்ணுசாமியை கண்டிக்கு அழைத்து வந்த கப்பம்மாளும் வயது முதிர்ந்த நிலையில் மன்னரோடு கப்பலில் பயணித்தாள். அவரோடு சாவித்திரிதேவி என்கிற வெங்கடரங்க ராஜம்மாள், வேங்கடம்மாள், முத்துக்கண்ணம்மா, உபேந்திரம்மாள் உள்ளிட்ட மன்னரின் நான்கு மனைவியரும் உடன் சென்றனர். மன்னர் குடும்பத்தோடு அவர்களுக்கு பாதுகாப்பாக ஆங்கிலேய அதிகாரியான வில்லியம் கிரான்ட்வின் அக்கப்பலில் பயணித்தார். கப்பல் சென்னை துறைமுகத்தை நெருங்கிய போது பட்டத்து ராணி சாவித்திரிதேவி இறந்து விட்டார். அவரின் பிரேதத்தை சென்னை கடற்கரையிலேயே தகனம் செய்த அரச குடும்பம், பிறகு சாவித்திரி தேவியின் அஸ்தியுடன் வேலூருக்கு சென்றது. வேலூர் பாலாற்றங் கரையின் ஓரத்தில் ராணியின் அஸ்தியை வைத்து கண்டி அரச குடும்பத்தின் முதல் கல்லறை இந்திய மண்ணில் கட்டப்பட்டது. மன்னரும் அரசியரும் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். மன்னரின் இரத்த உறவினர்களுக்கு ஆங்கிலேய அரசு வேலூர் தோட்டப் பாளையத்தில் காணி ஒதுக்கி வீடுகள் அமைத்துத் தந்தது மேலும் மாதம் தோறும் அரச மானியமும் கிடைத்திருக்கிறது.

அந்த காலத்தில் வேலூரில் அரசுக்கு வரி கட்டிய குடும்பம் இந்த மன்னர் குடும்பம்தானாம். மன்னர் சிறையில் இருந்தாலும் அங்கேயும் ராஜபோகத்துடன் தான் அவர் வாழ்ந்திருக்கிறார். மன்னர் குடும்பத்தின் செலவுப்பட்டியலின் படி மன்னரின் சயன அறை வாசனைத் திரவியங்களுக்காக 1847ல் மூன்றாவது ராணி பட்ட கடன்களை கட்ட இலங்கை அரசு எட்டாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது.

பதினெட்டு ஆண்டுகால சிறைவாசத்தின் பின் மன்னர் ராஜ சிங்கன் தனது 52வது வயதில் 1833ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதி மரணமடைந்தார். அவரின் அஸ்தியை பாலாற்றில் கரைத்த மன்னர் குடும்பம், மன்னருக்கும் அங்கேயே கல்லறை எழுப்பியது. பின்னர் உயிருடன் இருந்த மூன்று அரசியரையும் பிரிட்டிஷ் அரசு விடுதலை செய்தது. இப்போது கண்டி மன்னர் கல்லறைக்கு அருகிலேயே அவரின் நான்கு மனைவியரின் கல்லறைகளும் காணப்படுகின்றன. தாய் கப்பம்மாள், மகன் ரங்கராஜன் ஆகியோரின் கல்லறைகளும் காட்சியளிக்கின்றன. மன்னரின் மகன் ரங்கராஜன் மன்னர் சிறையில் இருக்கும் போதே இறந்து போனார். பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக பிரசாரம் செய்கிறார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆங்கிலேயர்களால் ரங்கராஜனுக்கு விஷம் கொடுக்கப்பட்டு அவர் பரிதாபமாக இறந்தார். என்று கூறப்படுகிறது.

மன்னரின் வாரிசுகளுக்கு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் சில வருடங்களாக மானியத்தொகை முறையாக அனுப்பி வைக்கப்பட்டு வந்திருக்கிறது. பின்னர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரச பதவியில் இருந்த காலத்தில் மானியம் நிறுத்தப்பட்டது. பணக் கஷ்டமின்றி வாழ்ந்து வந்த அரச குடும்பத்தவர்கள், மானியம் நிறுத்தப்பட்ட பின்னர் வருமானமின்றி வறுமையில் வாடத் தொடங்கினர்.

''எங்களுக்கு தஞ்சாவூரில் ஒரு பெரிய அரண்மனை இருந்தது. 'கண்டி ராஜா அரண்மனை' என்பது தான் அதன் பெயர். இன்றும் அதே பெயரில் தான் இருக்கிறது. ஆனால் அது இன்று எங்களுக்கு சொந்தமானதாக இல்லை. அந்தக் காலத்தில் எங்கள் உறவினர்கள் அரண்மனையை 500 ரூபாய்க்கு அடகு வைத்திருக்கிறார்கள். பிறகு அதை மீட்க முடியாமல் போக இன்று அதை யாரோ வாடகைக்கு விட்டு பிழைத்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறார், மன்னரின் பரம்பரையில் வந்த கொள்ளுப் பேரன் செல்வராஜன். இவர் வேலூரில் வசித்து வருகிறார்.

''ஆங்கிலேயர்கள் எங்களை இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு நாடு கடத்தியிருந்தாலும், அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார்கள். வேலூரில் தோட்டப்பாளையத்தில் ஒன்பது ஏக்கர் காணியும், கொணவட்டத்தில் 11 ஏக்கர் காணியையும் கொடுத்திருந்தார்கள். ஆனால் எங்கள் உறவினர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் இன்னும் அரச வாழ்க்கை வாழ்வதாக நினைத்துக் கொண்டு ஆடம்பரத்தில் மூழ்கினர். மது, மாது ஆட்டம் போட்டனர். இவை எல்லாம் சேர்ந்து எங்கள் அடித்தளத்தையே அழித்துவிட்டது''. இன்று எங்களுக்கென்று எதுவுமே இல்லை'' என்று பெருமூச்சு விடுகிறார் செல்வராஜன்.

கண்டி மன்னர் காலத்துக்கும் பிறகு மன்னர் பரம்பரையைச் சேர்ந்த இரத்த உறவுகள் யாரும் கண்டிக்கு வரக்கூடாது என்று ஆங்கிலேய அரசு தடைவிதித்திருந்தது. ஆனால் மன்னரின் மரணத்தின் பின்னர் அந்தத் தடையை அரசு விலக்கி கொண்டது. ஆனால் மன்னரின் வாரிசுகள் வெறும் சும்மா ஒரு சுற்றுலா என்ற பெயரிலும் கூட கண்டிக்கு வரவில்லை.

1953ம் ஆண்டில் இலங்கை பிரதமராகவிருந்த சேர் ஜோன் கொத்தலாவலை இந்தியா சென்றிருந்த போது கண்டி மன்னர் பரம்பரையைச் சேர்ந்த துரைசாமி ராஜா, கஸ்தூரிராஜா, ஆகிய இருவரையும் கொழும்புக்கு அழைத்து வந்தார். இதில் துரைசாமிக்கு இலங்கை மத்திய வங்கியின் உயர் பதவி கிடைத்தது. கஸ்தூரிராஜா லேக்ஹவுஸ் தினகரன் நாளிதழில் பத்திரிகையாளராக சில காலம் கடமையாற்றினார். மதுவுக்கு அடிமையான துரைசாமிராஜா ஒரு முறை கல்கிசை கடலில் குளிக்கப்போய் கடலில் மூழ்கி தற்கொலைக்கு முயற்சி செய்தாராம். இதை அவதானித்த அவரது நண்பர்கள் அவரைக் காப்பாற்றினார். பின்னர் சென்னைக்குச் சென்ற அவர் அங்கே மெரீனா கடற்கரையில் நீராடச் சென்று கடலில் மூழ்கி இறந்து போனார். அவர் மனதில் தற்கொலைக்கான விருப்பு இருந்திருக்கலாம்.

தினகரனில் பணியாற்றி வந்த கஸ்தூரிராஜாவும் கொஞ்ச காலத்தின் பின்னர் தமிழகம் திரும்பினார். 1990களின் முற்பகுதியில் இறந்து போனார்.

மன்னரின் வாரிசுகள் இன்று வேலூர், சென்னை, தஞ்சாவூர், மைசூர், ஆந்திரா உள்ளிட்ட பல பகுதிகளில் வசித்து வருகிறார்கள். இவர்களில் ஜெயக்குமார் சன் குழுமம் நிறுவனத்திலிருந்து வெளியாகும் 'தினகரன்' நாளேட்டில் செய்தியாள ராகவும் படப்பிடிப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.

அண்மையில் கூட கண்டி மன்னரின் நினைவு தினத்தை முன்னிட்டு வேலூரில் நடந்த நிகழ்ச்சியில் இலங்கையைச் சேர்ந்த ஓவியர் நிர்மல்குமாரின் கைவண்ணத்தில் உருவான மன்னரின் திருவுருவப்படம் மாவட்ட கலெக்டரினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. சென்னை தினகரன் செய்தியாளரும் மன்னரின் வாரிசுமான ஜெயக்குமார் குடும்பத்தாருக்கு மாவட்ட ஆட்சியரினால் நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மன்னரின் வாரிசுகளில் முக்கியமானவர்களில் பிரிதிவிராஜனும் ஒருவர். இவர் கண்டி மன்னரின் பேரனான ராஜாதிராஜ சிங்கனின் மகன். இவர் தற்போது வேலூர் சத்துவாச்சேரியில் உள்ள ஸ்ரீநிவாசா தியேட்டரில் டிக்கட் கிழித்துக் கொண்டிருக்கிறார்.


''கட்டபொம்மனின் வாரிசுகளுக்கும், ஆற்காட்டு நவாபின் வாரிசுகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. நாங்களும் இந்த நாட்டைச் சேர்ந்த மன்னர் பரம்பரையில் வந்தவர்கள் தான். எங்களுக்கு மட்டும் எதுவுமே கிடையாது! நானும் கலைஞருக்கும், அம்மாவுக்கும் எங்களின் நிலையை சொல்லி எத்தனையோ கடிதங்கள் எழுதிவிட்டேன். சாதகமாக ஒரு பதிலும் வரவில்லை. தங்க சிம்மாசனத்தில் உட்கார்ந்து ஆள், அம்பு, அந்தப்புரம் என்று ராஜ போகமாக வாழ்ந்திருக்க வேண்டிய ராஜகுடும்பத்தவர் நாங்கள். இன்று யார் யாருக்கோ கை கட்டி சேவகம் செய்துக் கொண்டிருக்கிறோம்'' என்று விரக்தியுடன் பேசுகிறார், பிரிதிவிராஜன். ''மன்னரின் பரம்பரை பற்றிய தகவல்கள் எல்லாம் எனக்குத்தான் தெரியும். தமிழகத்தின் ஆனந்தவிகடன், குமுதம், இந்து உள்ளிட்ட அனைத்து பத்திரிகைகளும் என்னைத்தான் பேட்டி கண்டு பிரசுரித்திருக்கிறார்கள் நீங்களும் முதலில் என்னைதான் சந்தித்திருக்க வேண்டும்'' என்றார். பிரிதிவி, நாங்கள் மன்னரின் மற்ற வாரிசுகளை முதலில் சந்தித்தது பிரிதிவிராஜனுக்கு ஏனோ பிடிக்க வில்லை. இராஜ குடும்பங்களுக்கே உரிய ஆதிக்க போட்டி இன்னும் இவர்களின் குடும்பங்களில் தொடர்வதை யூகிக்க முடிந்தது.

(முற்றும்)



மன்னரின் நான்காவது ராணியின் வாரிசுகளில் மூத்தவரான ராமமூர்த்திராஜா [illegible] வேலூர் மாவட்ட கலெக்டர் ராஜேந்திரன் விருது வழங்கி கௌரவிப்பதையும். அருகில் மன்னரின் வாரிசுகளுடன் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

### கண்டி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட கண்டி இராச்சிய பிரமுகர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்து சில நிமிடங்கள் தான் ஆகியிருக்கும். சூரியக் கதிர்கள் அடர்ந்த மரங்களுக்குள் நுழைந்து பூமியைத் தொட சில நிமிடங்களிலேயே எப்பாவல பகுதியில் இருந்த கடிகாவ கிராமத்தில் ஒரு சிலர் ஓரிடத்தில் கூடி பேயறைந்தவர்களைப் போல் மேலே பார்த்துக்கொண்டிருந்தனர்.

அவர்கள் அத்தனை பேரினதும் பார்வை ஒரே இடத்தில் நிலை பெற்றிருந்தது. அங்கு...

நீண்டு உயர்ந்திருந்த வேப்பமரமொன்றில் இரண்டு பெண்களும் ஒரு ஆணும் தூக்கில் தொங்கியவாறு....

# கள்ளக் காதல் தறிகெட்டுப் போனால்....



ஜயம்பதி ஜயசிங்க

தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த ஆணின் நாக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. பெண்களின் முகங்களும் பார்ப்பதற்கு பயங்கரமானதாக இருந்தன.

தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த பெண்கள் இருவரும் தனது மகள்மார்கள் என்று காவம்மா என்ற பெண் கூறினார். இவர்களுடன் தூக்கில் தொங்கிய ஆண் தான் தனது மகள் மார்களை கொலை செய்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

டிசம்பர் 10ஆம் திகதி காலை வேலைக்கு செல்லுமுன் தனது இளைய மகளைத் தேடியதாகவும் ஆனால் அவரை எங்கும் காணாததால் பக்கத்திலுள்ள தோட்டப்பக்கம் சென்று தேடியபோதே மகள்மார் இருவரும் ஒரு ஆணும் தூக்கில் தொங்கியதை கண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடிகாவ கிராமம் சாதாரணமாகவே அமைதியானது. எனவே இந்த சம்பவம் அக்கிராமத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. விடயத்தை கேள்விப்பட்ட கிராம மக்கள் சம்பவ இடத்தில் பெருமளவில் குழுமினர்.

அந்த வேப்பமரத்தின் உயரக்கிளை ஒன்றில் ஆணின் உடலும் கீழே இருந்த மற்றொரு கிளையில் இரு பெண்களின் உடல்களும் தொங்கின.

நடந்த கதையை காவம்மா அங்கு குழுமி இருந்தவர்களுக்கு விளக்கினார்.

காவம்மாவுக்கு 42 வயது. கணவர் ஏழு வருடங்களுக்கு முன் இறந்து விட்டார். மூன்று பிள்ளைகள். மூத்த இருவரும் பெண்கள். மூன்றாவது மகன். அந்த பிரதேசத்தில் இருந்த அரிசி ஆலையில் கூலியாளாக வேலை செய்தே காவம்மா தனது குடும்பத்தை காப்பாற்றி வந்தார். மூன்று பிள்ளைகளும் பாடசாலை சென்று வந்தனர்.

காவம்மாவின் மகள்மார் தில்ஷானி (17 வயது), கங்கானி (15வயது) மற்றும் ருவன் பிரேம ஜயந்தா (27) வயது ஆகிய மூவரே தூக்கில் தொங்கியவர்கள்.

ருவன் இராணுவத்தில் இருந்து தப்பி வந்தவர். அடுத்த கிராமத்தில் வசித்து வந்தார்.

இந்த இளைஞருக்கும் காவம்மாவுக்கும் தொடர்பு இருந்திருக்கிறது. சில காலத்தின் பின்னர் இவருக்கும் காவம்மாவின் மூத்த மகளுக்கும் இடையே காதல் அரும்பியிருக்கிறது. இந்தக் காதல் சூடு பிடிக்கவே இருவரும் காவம்மாவுக்கு தெரியாமல் ஓடிப்போனார்கள்.

தனது 15 வயது மகள் வன்புணர்ச்சிக்கு ஆளாகியிருப்பதாக காவம்மா பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் ருவனை கைது செய்தனர்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ருவன் சிறிது காலத்தில் பிணையில் விடுதலையானார்.

இதனையடுத்து காவம்மாவின் வீட்டுக்கு திரும்பி வந்த ருவன், தில்ஷானியுடன் குடும்பம் நடத்த ஆரம்பித்தார். இச்சமயத்தில் ருவன தில்ஷானியுடன் அடிக்கடி சச்சரவில் ஈடுபட்டார். அது மட்டுமன்றி தில்ஷானியின் உறவினர்களுடனும் ருவனுக்கு அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. அவர்கள் அனைவரையும் கொலை செய்யப் போவதாக இவர் பல முறை அச்சுறுத்தியிருந்தார்.

ருவன் தன்னை கொலை செய்யப் போவதாக காவம்மா கடந்த டிசம்பர் 7ம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாட்டையடுத்து தில்ஷானி அவரது தாயாருடன் முரண்பட்டார். ருவனை அழைத்துக் கொண்டு தில்ஷானி வேறு இடத்துக்கு தனிக்குடித்தனம் சென்றார். காவம்மாவின் இளைய மகள் கங்கானியும் தாயை விட்டு விட்டு அக்காவுடன் சென்றார்.

ருவனின் உடலை பொலிஸார் கீழே இறக்கி சோதனையிட்ட போது அவரது காற்சட்டை பையில் இருந்து பல கடிதங்கள் கிடைத்தன. இவற்றை பரிசோதித்த போது ருவன் தில்ஷானியுடன் மட்டுமன்றி அவரது இளைய சகோதரி கங்கானியுடனும் கள்ளத் தொடர்பு வைத்திருந்தமை தெரிய வந்தது.



விசாரணைகளில் இரு பெண்களும் பரமேறக் கூடியவர்கள் என்றும் மரத்தின் உச்சிக்கு செல்லும் திறமை அவர்களிடம் இருந்ததாகவும் தெரியவந்தது.

இரு சகோதரிகளும் ஒரே ஆளை பகிர்ந்து கொள்ள முடியாது என்பதால் விரக்தியடைந்தே மூவரும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் கருதினர்.

இந்த கருத்தை அடிப்படையாக வைத்தே பொலிஸ் விசாரணை தொடர்ந்தது.

மூவரும் தூக்கில் தொங்குவதற்கான நைலோன் கயிறை கங்கானியே கடையில் வாங்கியிருப்பதற்கான சாட்சியங்கள் கிடைத்தன.

மூவரும் நைலோன் கயிற்றை தத்தமது கழுத்தில் மாட்டிக்கொண்டு மரத்தில் ஏறிய பின் தூக்கில் தொங்கியிருக்கலாம் என பொலிஸார் கூறினர்.

குறிப்பிட்ட அந்த வேப்ப மரத்துக்கு அருகில் மடித்து வைக்கப்பட்ட ஒரு பாய், மூன்று சிலிப்பர்கள், மற்றும் ஒரு கத்தி ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

காவம்மாவுக்கும் ருவனுக்குமிடையே ஏற்பட்ட கள்ளக்காதல் எங்கு போய் முடிந்திருக்கிறது என்று பார்த்தீர்களா?

பருவமடைந்த பெண் பிள்ளைகள் இருக்கும் வீட்டில் பெற்றோர் எவ்வளவு தூரம் கவனமாக இருக்கவேண்டும் என்பது இச் சம்பவம் ஒரு படிப்பினை.

# பாலுணர்வை குறைக்கும் உணவுகள்

ஒரு சராசரி மனிதனுக்கு தேவையான புரதம், கார்போஹைடிரேட், கொழுப்பு, விட்டமின்கள், தாதுப்பொருட்கள் செறிந்த உணவுகளை தேவையான கலோரிகளில் எடுத்துக் கொள்ளவிட்டால், உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி பாலியல் திறனும் சிதைந்து விடும். சர்க்கரை, மதுபானங்கள், கோப்பியில் உள்ள காப்பீன் முதலியவை, ஊட்டச்சத்து உணவை, உடல் உட்கிரகிக்க விடாது. ஆரோக்கியம் குன்றினால் ஆண்மையும் குறையும். எனவே அதீத காதல் உணர்வுகளால் கஷ்டப்படுபவர்கள் இனிப்பு, சோயா நிறைந்த உணவுகளால் இச்சையை ஓரளவாவது கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.



பாலியல் ஆசையை கட்டுப்படுத்த உதவும் உணவுகளில் ஒன்றுதான் சோயாவிலிருந்து தயாரிக்கப்படும் 'டோஃபூ'. சோயா பால் மற்றும் டோஃபூ உடல் தத்த நாகத்தை கிரகிப்பதை தடுக்கிறது. வெள்ளரிக்காய், முள்ளங்கி, முட்டை கோவா போன்றவைகளும் செக்ஸ் ஆசையை குறைக்கின்றன. இந்த உணவுகள் தைரோயிட் செயல்பாடுகளை குறைக்கும். ஏனெனில் இந்தக் காரம்தான் பாலியல் உணவுகளை பரிபாலனம் செய்கிறது.

# மறதிக்கு ஒரு ஐன்ஸ்டைன்



உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டைன் ஒரு முறை ரெயிலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது ஒரு கஷ்டமான கணக்கிற்கு விடை தேடிக் கொண்டு இருந்தார். அப்போது டிக்கெட் பரிசோதகர் வந்தார். அவர் ஒவ்வொருவரிடமும் டிக்கெட் வாங்கி சோதித்து கையெழுத்துப் போட்டார். ஐன்ஸ்டைனிடம் டிக்கெட் கேட்டார். அவர் தான் அணிந்திருந்த கோட்டுப் பைக்குள் கையை விட்டார். டிக்கெட்டைத் தேடினார். அது எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. டிக்கெட் பரிசோதகர் அவரை உற்றுப் பார்த்தார். அவர் அறிவியல் மேதை ஐன்ஸ்டைன் என்பதை அறிந்து கொண்டார். ''பரவாயில்லை.... ஐயா, டிக்கெட்டைத் தேட வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே அடுத்த நபரிடம் டிக்கெட்டை வாங்கி பரிசோதித்தார்.

அப்பொழுதும் தனது சூட்கேசைத் திறந்து ஐன்ஸ்டைன் கவலையாக டிக்கெட்டைத் தேடிக் கொண்டு இருந்தார். அதன் உள்ளே இருந்த புத்தகங்களை எல்லாம் எடுத்து வெளியே போட்டுத் தேடினார். துணிகளிலும் டிக்கெட் இருக்கிறதா என்று ஒவ்வொன்றாக உதறிப் பார்த்தார். அப்போது மீண்டும் டிக்கெட் பரிசோதகர் அந்த வழியாக வந்தார். ''ஐயா, தாங்களோ உலகப் புகழ் பெற்ற பெரும் விஞ்ஞானி. தங்களிடம் டிக்கெட் இல்லாவிட்டால் தான் என்ன? ஏன் வீணாக தேடிக் கொண்டு கஷ்டப்படுகிறீர்கள்? உங்களால் இந்த நாட்டுக்கே பெருமை'' என்று மீண்டும் சமாதானப்படுத்தினார். ஐன்ஸ்டைன் மீண்டும் தேடிக்கொண்டே, ''உங்களுக்குப் பரவாயில்லை. நான் எந்த ஊருக்குப் போக வேண்டும் என்ற விவரம் டிக்கெட்டில் அல்லவா இருக்கிறது? நான் என்ன செய்வது? எனக்கு இப்போது டிக்கெட் வேண்டுமே..!'' என்றார். உடன் இருந்த அனைவரும் இந்த பதிலைக் கேட்டு அதிர்ந்தனர்.

அப்புறமென்ன... டிக்கெட் கிடைக்கவே இல்லை. ரெயில் அடுத்த ஸ்டேஷனுக்கு வந்ததும், பரிசோதகர் ஐன்ஸ்டைனை அழைத்துச் சென்று தொலைபேசியின் மூலம் அவர் மனைவியிடம் தொடர்பு கொள்ளச் செய்தார். ஐன்ஸ்டைன் தன் மனைவியிடம், ''டியர் நான் வீட்டை விட்டுப் போகும் போது எந்த ஊருக்குப் போவதாக உன்னிடம் சொல்லி விட்டு வந்தேன்?'' என்று விசாரித்தார். மனைவி ஊரின் பெயரைச் சொன்னவுடன் அதை டைரியில் குறித்துக் கொண்டு அந்த ஊர் வந்ததும் இறங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் களை கட்டும் வண்டில் சவாரிப் போட்டி



வடபகுதியின் பாரம்பரிய பண்பாடு மற்றும் வாழ்வியலுடன் இணைந்த வகையில் முக்கியத்துவம் பெறுகிறது மாட்டுவண்டிச் சவாரி. இன்றைய நவீன போக்குவரத்துச் சாதனங்கள் அறிமுகமாவதற்கு முன்னர் மக்களது பயணத்தேவைகளுக்கு மாட்டு வண்டிகளே பயன்படுத்தப்பட்டு வந்தன. இவைதான் அன்றைய லொரிகள்.

இதுபற்றி பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா இவ்வாறு சொல்கிறார்.

''முன்னைய காலத்தில் மக்களது பிரயாணத்திற்குரிய போக்குவரத்துச் சாதனமாகவிருந்த மாட்டு வண்டிகளை பலர் தங்கள் குடும்பத் தேவைகளுக்காக சொந்தமாகவே வைத்திருந்தனர். (இன்றைய த்ரீவீலர் மாதிரி) வசதி படைத்தவர்கள் கூடாரம் அமைந்தவகையிலும், உள்ளே இரு பக்கங்களிலும் மெத்தையிலான இருக்கைகள் பொருத்தியதாகவும் வண்டிகளை வைத்திருந்தார்கள். இவைகளும் ஒற்றை, இரட்டை மாட்டு வண்டிகளாகக் காணப்பட்டன. இந்த கூடார வண்டிகள் அந்நாளில் வசதி படைத்தவர்களது சொகுசு வாகனமாகவும் கருதப்பட்டது என்று கூட சொல்லலாம். வீதியில் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் மாட்டுவண்டியொன்றை, பின்னால் வரும் இன்னொரு மாட்டு வண்டி முந்திச் செல்லும் வேளையில், அதனைச் செலுத்துபவர்களது மனதில் தோன்றிய சிந்தனையின் வெளிப்பாடாகவே வண்டிச் சவாரியை ஒரு போட்டியாக மாற்றலாம் என்ற எண்ணம் உதயமானது. பின்னாளில் மாட்டு வண்டிச் சவாரி யாழ்ப்பாணத்தின் தனித்துவமான பொழுது போக்கிற்கும் மகிழ்ச்சிக்கும் உரிய விளையாட்டு நிகழ்வாக மாறிவிட்டது.



சின்னத்தம்பி மகேந்திரம்

வசந்தகாலம் என்று சொல்லப்படும் சித்திரை, வைகாசி மாதங்களில் குறிப்பாக சித்திரைப் புத்தாண்டின் போதும், வைகாசி பூரணை நாளிலும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியை ஏற்பாடு செய்து நடத்துவது வழக்கமாகிவிட்டது. இலங்கையின் புவியியல் அமைப்பில் தரவை என்று சொல்லப்படுகின்ற சவாரி நடத்தக்கூடிய புல்வெளி நிலம் யாழ்குடாநாட்டின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

லேக்ஹவுஸ் நிறுவனம் அறுபதுகளில் யாழ்ப்பாணத்தில் தொடக்கிவைத்த தினகரன் விழாவின் ஊடாகவும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஒரு புத்துணர்ச்சியைப் பெற்றது என்று சொல்வதும் பொருத்தமானது'', என்கிறார் பேராசிரியர் சிவலிங்கராஜா.

நீண்டகாலமாக சவாரிப் போட்டிகளில் ஈடுபட்டு வருவதுடன் பல வெற்றிகளையும் பெற்றிருக்கும் அளவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி மகேந்திரம், மாட்டுவண்டிச் சவாரிப் பயணம், சவாரிப் போட்டியாக மாறுவதற்கு எவ்விதம் வழிவகுத்தது என்ற சுவாரஸ்யமான தகவலை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். தகப்பனாருடன் இணைந்து சவாரிப் போட்டிகளில் பங்கு கொண்ட அவர் ஒரு சிறந்த விவசாயியும் கூட. தகப்பனாரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு இவ்வாறு சொல்கிறார்.

''ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதி என்று சொல்லலாம். அந்நாளில் வடமராட்சி பகுதியிலுள்ள செல்வச்சந்நிதி, வல்லிபுரக்கோவில், நாகர்கோவில் போன்றவற்றின் உற்சவ காலத்தில் வலிகாமம் பகுதியிலிருந்து ஏராளமானோர் தங்கள் குடும்பத்தினருடன் மாட்டு வண்டிகளிலேயே அங்கு சென்று வந்தார்கள். பெரும்பாலும் இரட்டை மாட்டு வண்டிகளே இதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன. மாட்டுவண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகவே தொடர் அணியாக செல்வதுண்டு. இப்படியாக நெடுஞ்சாலையில் வண்டிகள் செல்லும்போது மாடுகளும் மிகவும் வேகமாக ஓடிச்செல்வது வழக்கம். வண்டிகள் ஒன்றையொன்று முந்திச் செல்வதும் உண்டு. பயணம் செய்பவர்களுக்கு இது உற்சாகமான நிலையைத் தோற்றுவித்தது. அவர்கள் ஆடியும், பாடியும், கூச்சலிட்டும் செல்வார்கள். இது பயணக் களைப்பையும் போக்குவிப்பதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைந்திருந்தது.''என்கிறார் மகேந்திரம்.

யாழ் குடாநாட்டின் பல கிராமங்களில் அடிக்கடி சவாரிப் போட்டிகள் நடைபெற்று வந்துள்ளன. சவாரி மாடுகளை வைத்திருப்பவர்கள், அதனது வளர்ப்பில் விசேட அக்கறை கொண்டிருப்பார்கள். தவிடு, தூளாக்கிய அரிசி போன்றவைகளை உணவாகக் கொடுப்பதுடன், அதன் கொம்புகளையும் சீவி, மாதமொருதடவை கடல் அல்லது குளத்து நீரில் நீந்தச் செய்வதும் வழக்கம்'' என்றும் சொல்கிறார் மகேந்திரம்.

தனது தகப்பனாரைத் தொடர்ந்து முப்பத்தைந்து வருடங்களாக சவாரிப் போட்டிகளில் பங்கொண்டுவரும் இவரிடம், இப்போதைய இளம் சந்ததியினர் எதிர்காலத்தில் இப்போட்டியை தொடர்ந்து நடத்துவதில் ஆர்வம் கொண்டிருப்பார்களா என்று கேட்டதற்கு ''இளைஞர்கள் பலரும் இதில் ஆர்வம் கொண்டிருப்பதை காணமுடிகிறது. இவர்களுள் எனது மகனும் ஒருவனாக இருக்கிறான். பாரம்பரிய நிகழ்வாக இடம்பெற்றுவரும் சவாரிப் போட்டி எதிர்காலத்திலும் தொடரும் என்பதில் எனக்கு பெரிதும் நம்பிக்கை இருக்கிறது.'' என்கிறார்.

நீண்டகாலமாக சவாரிப் போட்டிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்த இன்னொருவர் அளவெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மயில்வாகனம். 86 வயதான இவர் இப்போது முதுமை காரணமாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். யாழ் குடாநாட்டின் பல இடங்களிலும் நடைபெற்றுவந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளில் கலந்து கொண்டு பெற்ற வெற்றிகளையும் சாதனைகளையும் மகிழ்ச்சியுடன் சொல்கிறார்.

''யாழ். தினகரன் விளையாட்டு விழாவின் சவாரிப் போட்டியில் பெற்ற வெற்றிகளை மறக்க முடியாத நிகழ்வாகவே கருதுகிறேன். 1978ஆம் ஆண்டில் எழுதுமட்டுவாள் என்ற இடத்தில் நடந்த போட்டியில் தங்கப் பதக்கமும் கிடைத்திருக்கிறது. நான் சவாரிப் போட்டிகளில் தொடர்ச்சியாகப் பங்குபற்றி வந்ததால், அனுபவரீதியாக சவாரிக்குப் பொருத்தமான மாடுகளை இனம் காணக்கூடிய திறமையைப் பெற்றிருந்தேன். இதன் காரணமாக மன்னார், வன்னி போன்ற இடங்களுக்குச் சென்று பொருத்தமான மாடுகளை வாங்கிக் கொடுப்பதில் பலருக்கும் உதவியிருக்கிறேன். ஒரு சோடி மாடு ரூபா எட்டு இலட்சம் வரையும் விலை போயிருக்கிறது.'' என்றவர் தன் கொழும்பு நினைவுகளையும் சொன்னார். 1951ஆம் ஆண்டு என நினைக்கிறேன். கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற கைவினைவிழா ஒன்றில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் நடக்க ஏற்பாடாகியிருந்தது. அப்போது பிரதமராக இருந்த டி.எஸ்.சேனநாயக்காவின் அழைப்பின் பேரில் மாடுகளையும் வண்டிகளையும் புகையிரதத்தில் ஏற்றிக்கொண்டு நானும், வேறு சிலரும் கொழும்பு சென்றிருந்தோம். காலி முகத்திடலில் வண்டிச் சவாரிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தின் தூர அளவு போதுமானதாக இருக்கவில்லை. இதனால் சவாரி நடைபெறவில்லை. ஒதுக்கப்பட்ட தூரம் வரை மாட்டை நடத்திச் சென்று சான்றிதழ் பெற்றுக் கொண்டோம்'' என்கிறார் மயில்வாகனம்.

சவாரிப் போட்டியில் இவரது வாழ்நாள் சாதனைகளை மதித்து, 2006ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழாவின் போது, இவருக்கு விருது வழங்கி, கௌரவம் செய்யப்பட்டிருக்கிறது.

மாட்டுவண்டிச் சவாரியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கும் ''பனங்காட்டி'' என செல்லமாக அழைக்கப்படும் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த இராமநாதன் சிவானந்தம் சவாரிப் போட்டிக்காக மாடுகளையும் வண்டிகளையும் கொடுத்து உதவி வருபவர். சவாரிப் போட்டியை ஆரம்பித்து வைப்பதிலும் பெரும் பங்களிப்புச் செய்து வருகிறார். சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளராகவும், கிராமிய வங்கியின் காசாளராகவும் பணி புரிந்து ஓய்வுபெற்றுள்ள இவர் சொல்வதைப் பார்ப்போம்.

அ. கனகசூரியர்


''மாட்டு வண்டிச் சவாரிக்குரிய வசதியான இடமான தரவை நிலம் யாழ் குடாநாட்டில் நீர்வேலி, புத்தூர், கரவெட்டி, நாரந்தனை, மயிலிட்டி, மட்டுவில், எழுதுமட்டுவாள், விளான், வட்டுக்கோட்டை, மூளாய் போன்ற கிராமங்களில் அமைந்திருந்தன. பெரும்பாலும் இங்குதான் சவாரிப் போட்டிகள் நடைபெற்று வந்தன. யாழ் முற்றவெளி மைதானத்திலும் சவாரிப் போட்டிகள் இடம்பெற்றுள்ளன, பலர் தங்கள் மாடுகளை போட்டிக்கு தயார்படுத்தும் வகையில் ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் பயிற்சிகளில் ஈடுபடுத்திவந்தனர். இப்பயிற்சிகள் அச்செழு, மருதனார்மடம், அளவெட்டி பகுதிகளில் இடம்பெற்றுவந்தன'' என்கிறார் சிவானந்தம்.

சவாரிப் போட்டிக்காக பயன்படுத்தப்படும் மாடுகளை பெரும்பாலானவர்கள் மன்னாரிலிருந்து வாங்கி வருவதாக சொல்லப்படுகிறதே. இதன் காரணம் என்ன என்று இவரிடம் கேட்டதற்கு, மன்னார் பிரதேச மாடுகள் வயதாகும் வரை ஓடக்கூடிய வல்லமை வாய்ந்தவை. அவை மாடுகளின் திறன் சொற்பகாலமே இருக்கும்'' என்கிறார்.

சவாரிப் போட்டி அமைப்பு சம்பந்தமாகவும், இதில் பங்களிப்புச் செய்து வந்தவர்கள் பற்றியும் மேலும் பல தகவல்களை இவரிடமிருந்து பெற முடிந்தது.

''மைதானமொன்றில் சவாரிப் போட்டியை ஆரம்பித்து வைத்தலை கொடியடித்தல் என்பார்கள். நன்கறிந்தவர்களும், நீண்டகாலம் அதனோடு இணைந்திருந்தவர்களும் மட்டுமே இவ்விதமான கொடியடித்தல் கருமத்துக்கு அழைப்பதுண்டு. அதுபோலவே, சவாரிப் போட்டியை கண்காணிக்கும் மத்தியஸ்தர்களும் போட்டி விதிமுறைகளை நன்கறிந்தவர்களாகவும், அநுபவ ரீதியான திறமையுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் சுன்னாகம் இளையதம்பி, உடுவில் செல்லத்துரை (ஜபக்கோன்), அளவெட்டி அருணாசலம் போன்றவர்கள் வண்டி ஓட்டுநர்களாக அல்லாமல், சவாரிப்



வில்லுவண்டி

போட்டியை வளர்த்தெடுப்பதில் தேவையான உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்கி வந்தார்கள். மல்லாகம் பெரியதம்பி, அச்செழு கருளி கந்தையா, கரவெட்டி இளையதம்பி, மாசிங்கூடல் துரைசிங்கம்(புலியர்), சங்குவேலி கந்தையா, சங்குவேலி திருபாலசிங்கம் போன்ற பலர் போட்டிகளின் போது வண்டி ஓட்டிகளாக இருந்து சாதனை செய்தவர்கள் என்று சொல்லலாம்.

''போட்டி நடத்தப்படும் விதிமுறைகளுக்கு அமைய போட்டிக்காக விண்ணப்பிக்கப்பட்ட ஒவ்வொரு சோடி மாடுகளும் ஏ.பி.சி.டி என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. பெரும்பாலும் டி பிரிவு இளம் மாடுகளாகவே இருக்கும். சவாரிப் போட்டியும் மூன்று ஓட்டங்களாகவே நடைபெறுகின்றது. இறுதிப்போட்டியில் பங்குகொள்ளும் நான்கு வண்டிகளுக்கும் ஒன்று முதல் நான்கு வரையிலான தெரிவில் பரிசில்கள் வழங்கப்படுகின்றன'' என்கிறார் சிவானந்தம்.

இப்போது யாழ் குடாநாட்டில் மாட்டு வண்டிசவாரிப் போட்டிகள் மீண்டும் தீவிரமாக நடைபெறத் தொடங்கிவிட்டன. கடந்த தைப்பொங்கல் திருநாளையொட்டி யாழ். மாநகரசபை ஏற்பாடு செய்து நடத்திய பொங்கல் திருவிழாவில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி பண்டத்தரிப்பு விளான் மைதானத்தில் நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் சம்பவங்கள்....



# அட, இவன்தாண்டா நம்ம ஆள்!

சத்யா

“என்னைப் பெண் பார்க்க வருவதாகச் சொன்னார்கள். அவர் எப்படி இருப்பாரோ, இந்த பெண்பார்க்கும் படலம் இத்தோடு முடிந்துவிடுமா? என்ற கவலையும் ஆர்வமுமாய் உடைகளை அணிந்து அலங்கரித்துக் கொண்டேன்.

மாப்பிள்ளை வீட்டார் வந்துவிட்டார்கள். ஆனால், ஏதோ வேலை காரணமாக கொஞ்சம் லேட்டாக வருவதாக மாப்பிள்ளை சொல்லி அனுப்பினாராம். அம்மா வந்து சொல்லி, தயாராக இருக்கும்படிச் சொன்னாள். எனது அறையில் இருந்து பார்த்தால் கேட்தெரியும். திடீரென மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. பாதி மூடியிருந்த கேட்டைத் தள்ளியபடி லாவகமாக சைக்கிளை வளைத்து அந்த இளைஞன் உள்ளே வரப் பார்த்தேன். சட்டென மனதில் வெளிச்சம் பரவியது. நம்ம ஆள் வந்துவிட்டான் என்று தோன்றியது. படலம் முடிந்த பின்னர் மாப்பிள்ளை பிடித்திருக்கிறது என்று சொல்லி விட்டேன்”

‘இவன் என் ஆள்’ என்ற அபிப்பிராயம் திரை விலகியது போல சட்டெனத்தான் வந்து விழும். விழுந்த வேகத்தில் ஆழமாக வேரூன்றி வளர்ந்து நிற்கும். அதன் பின்னர் அதை அசைக்க முடியாது, யாராலும்! அசைக்க முற்படும் எல்லா முயற்சிகளையும் இக்காதலர்கள் எதிர்த்து நிற்பார்கள். முடியாத பட்சத்தில் தற்கொலையையும் ஏற்பார்கள் இவர்கள்.

இன்னொரு உதாரணத்தையும் எடுத்துக் கொள்வோம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த இளைஞன் எடுப்பான தோற்றம் கொண்டவன். பல யுவதிகள் இவனை நாடினார்கள். காதல் பிச்சை கேட்டார்கள். அவர்களுடன் சகஜமாகப் பழகிய இளைஞன் அப் பெண்களை காதலிக்க ஏனோ முன்வரவில்லை. ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது.

ஒரு முறை பெண்கள் பாடசாலை விழா ஒன்றுக்கு அவன் செல்ல நேரிட்டது. பேண்ட் இசை ஆரம்பமானது. அப்போது சீருடை, கையில் பாடசாலைக் கொடியுடன் ஒரு மாணவி எதிரே வந்து அவனைக் கடந்து சென்றாள். அவளைத் திரும்பி பார்த்த மாத்திரத்தில் மூன்றாம் கண் திறந்த மாதிரி அவன் உணர்ந்தான். ‘இவள்தான் நான் தேடிக் கொண்டிருப்பவள். இவள் தான் எனக்கு மனைவியாக வேண்டும்’ என்ற எண்ணம் ஒரு பனித்துளியாக அவனில் இறங்கி மணம் பரப்பியது. காதலின் சுகந்தத்தை சட்டென உணர்ந்தான்.

பின்னர் அவளை விரட்டி விரட்டி காதலித்தான். திருமணமும் செய்து கொண்டான். இன்று குழந்தை குட்டிகளோடு முன்னர் பிரான்சிலும் இப்போது லண்டனிலும் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். அவள் என்ன சொல்கிறாள்?

‘‘அன்று அவனை சில கணங்கள் தான் பார்த்தேன். எனக்கு முழுமையாக அந்த இளைஞனைப் பிடித்திருந்தது. அன்றோடு காணாமல் போய்விடுவானோ என்ற ஏக்கமும் மனதில் எகிறி நின்றது. ஆனால் அவன் திரும்பத் திரும்ப வந்தான். உண்மையான காதலை வெளிப்படுத்தினான். அவனில் நான் விழுந்தேன். எதிர்ப்புகளையும் மீறி திருமணமும் செய்து கொண்டேன்” என்கிறார் இவர்.



திருமண வாழ்க்கையை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று காதலித்து திருமணம் செய்து ஒருவரை ஒருவர் புரிந்து மனமொத்த தம்பதியினராக வாழ்வது. இரண்டாவது நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் முதல் தடவையாக சந்திக்கும் இருவர் திருமணத்தின் பின்னர் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும், புரிந்து கொண்டும் ஒற்றுமையாக வாழ்வதாகும்.

காதல் முதலில் செக்ஸ் கவர்ச்சியுடன்தான் ஆரம்பமாகிறது. இருவரும் மனதளவில் நெருங்கியதும்தான் உள்ளங்களை, இயல்புகளை, அடுத்த பக்கங்களை, வாழ்வின் யதார்த்தங்களை புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறார்கள்.

காதல் பற்றி என்னுடைய இன்னொரு அனுபவம் படு சோகமானது.

முகத்துக்கு பொருத்தமில்லாத கறுப்பு பிரேம் போட்ட கண்ணாடி, கலைந்த தலை, மெல்லிய தேகம் எனக் காட்சி தருவான், என் நண்பன். படங்களை பிரேம் போடும் கடை நடத்தி வந்தான். அங்கே போய் அவனுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பேன். திடீரென கடை பூட்டப்பட்டிருந்தது. சில வாரங்களின் பின்னர் கடையைத் திறந்தான். என்ன விஷயம் என்று கேட்டேன். கண்ணீர் விட்டு அழுதான்.

காரணம், காதல் தோல்வி.

அவன் மனதார காதலித்தவள் அவனை விட்டுப் பிரிந்து சென்று விட்டாள். அவனது கெஞ்சல்களை அவள் பொருட்படுத்தவில்லை. பின்னர் ஊரை விட்டே போய்விட்டாள்.

இன்னொருவனுடன் சுற்றுவதாக அவன் கேள்விப்பட்டிருக்கிறான். என்னிடம் இதைச் சொல்லி அழுதான். கொஞ்ச காலத்தின் பின்னர் கடையில் இரண்டு ஸ்பீக்கர்களை வைத்து எலக்ட்ரிக் கிடார் வாசிக்க ஆரம்பித்தான். கடையில் வாடிக்கையாளர்கள் இல்லாத நேரங்களில் சோகமான சிங்களப் பாடல்களை பாடியபடியே கிடார் வாசிப்பான்.

நானும் அவனது நட்பு வட்டாரத்தினரும், கடையில் கிடார் வாசிப்பதை நிறுத்தும்படி சொன்னோம். ‘கடையை கடையாக நடத்து. கிடாரை வீட்டில் போய் வாசி’ என்று சொன்னதை அவன் பொருட்படுத்தவில்லை. சில சமயம், கன்னத்தில் ரெண்டு வைக்கலாமா என்றிருக்கும். பின்னர், அவள் திருமணம் செய்து கொண்டுவிட்டதாகத் தகவல் வந்தது. மேலும், மனமுடைந்து போனான் அவன். குடிக்கவும் ஆரம்பித்தான். வேதாந்தம் பேசத் தொடங்கினான். கடை அடிக்கடி மூடப்படுவது வாடிக்கையாகி விட்டது.

சில மாதங்களாக நான் கடைப்பக்கமாகப் போகவில்லை. திடீரென ஒரு நாள் நண்பன் ஒருவன், அவன் இறந்து விட்டதாக தகவல் சொன்னான். பதறிப் போன நான், என்ன விஷயம் என்று கேட்டேன்.

காதல் தோல்வியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த அவன் வாழ்க்கை வெறுத்து நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டிருக்கிறான்!

என் மேசையருகே அவன் பிரேம் பண்ணித்தந்த என்னுடைய படம் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கும் போதெல்லாம் காதல் பலி கொண்ட அந்த அப்பாவி இளைஞனின் ஞாபகம் வந்துகொண்டே இருக்கிறது!

காதல் உணர்வு பூர்வமானது. அப்படித்தான் அது இருக்கும். அப்படி இருந்தால்தான் அது சுவைக்கும். ஆனால் அதைக் கையாளும்போது கொஞ்சம் புத்தி பூர்வமாகவும் நடந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையில் காதல் ஒரு சம்பவம். வாழ்க்கையோ மிகப் பெரியது. வாழ்க்கையில் நாம் முயற்சிக்கும் எல்லா விடயங்களிலும் வெற்றி பெறுவதில்லை. கூட்டிக்கழித்துப் பார்த்தால் தோல்விகளே அதிகம். காதல் தோல்விகயையும் இப்படித்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கடைசியாக ஒன்று.

என் மனைவி திருமணத்துக்கு முன் என்னைப் பார்ப்பதற்காக தன் உறவினர் வீட்டுக்கு வருவாள். நான் அங்கே போனதும் அவள் கைபடத் தயாரித்த பட்சணங்களுடன் தேனீர் தருவார்கள். உலர் திராட்சை கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டிருக்கும் ரவை உருண்டையும் அவற்றில் ஒன்று. இது ஒவ்வொரு தடவையும் கட்டாயமாக இடம் பெற்றிருக்கும்.

திருமணத்தின் பின்னர் இந்த ரவை உருண்டையை அடிக்கடி கிண்டலடிப்பேன். இப்போது எங்கள் வீட்டில் ரவை உருண்டை ஒரு தடை செய்யப்பட்ட பட்சணம்!

காதலை விட மோசமான விஷயங்கள் இருக்கின்றன. காதலை விட நல்ல விடயங்களும் இருக்கின்றன. ஆனால் காதலுக்கு சமமாய் எதுவுமே இல்லை.

இப்போது உங்கள் காதலியிடம் எது ஆர்வமூட்டுகிறதோ அதுவே பின்னாளில் எரிச்சலூட்டும்.


பணத்தால் காதலை வாங்க முடியாது தான். ஆனால் அது உங்களை பேரம் பேசும் நிலையில் வைத்திருக்கும்.

காதல் புத்திசாலித்தனத்தையும், கற்பனையையும் எப்போது மிஞ்சுகிறதோ அப்போது தான் அது நடக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணேஷ்

கோவூர்

# மகன் 'தாய்'க்குக் கட்டிய தாலி

சல்காதோ என்ற ஆசிரியருக்கும் அவரிடம் டியூஷன் எடுத்த மாணவி பிரேமாவுக்கும் விமரிசையாக 1955ம் ஆண்டு மார்ச் 18ம் திகதி நீர்கொழும்பில் திருமணம் நடைபெற்றது. சல்காதோ கண்டியைச் சேர்ந்தவர். தந்தை சிறு வயதிலேயே இறந்துவிட, தாயாரினால் செல்லமாக வளர்க்கப்பட்டவர். நீர்கொழும்பைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவரான ஜஸ்டின் பெரேராவின் மகளான பிரேமா, படிப்பில் கெட்டிக்காரி.

திருமணம் நடந்து மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன. இருவரும் மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்தபோதும் குழந்தை பிறக்காதது இரு பக்கக் குடும்பத்தாருக்கும் வேதனையைத் தந்தது. பெரேரா ஒரு ஜோதிடரிடம் சென்று இருவரின் ஜாதகங்களையும் காட்டி பலன் கேட்டார். ஜோதிட குறிப்புகளை ஆராய்ந்த ஜோதிடர், 1959ம் ஆண்டு ஜூலையில் குழந்தை பிறக்கும் என்றும் கவலை வேண்டாம் என்றும் சொல்லி பெரேராவை அனுப்பி வைத்தார். எனினும் 1960 கழிந்த பின்னரும் கூட குழந்தை பிறக்கவில்லை.

பெரேரா சும்மா இருக்கவில்லை. ஒரு குறிசொல்லும் பெண் எம்பிலிப்பிட்டியவில் இருப்பதை அறிந்து அங்கே சென்றார். மை வெளிச்சம் பார்த்த அப்பெண், பெரேராவின் நெருங்கிய உறவினர் ஒருவர் சக்திவாய்ந்த செய்வினை ஒன்றை பெரேராவின் வீட்டு வளவில் புதைத்திருப்பதால்தான் மகளின் குழந்தை பாக்கியம் தள்ளிப் போவதாகவும் சூனியத்தைக் களைத்தால் தான் கருக்கட்டும் என்றும் சொன்னார். பெரேரா ஒப்புக்கொண்டார். பெரேராவின் வீடு வந்த அப் பெண், பூஜைகளின் பின்னர் ஓரிடத்தைத் தோண்டி ஒரு செப்புக்குழாயை எடுத்தார். அதில் எலும்புத் துண்டுகள், தலைமயிர், செப்புக்காசு என்பன இருந்தன. செய்வினை ஒழிந்தது என்று சொல்லிய அப்பெண், 350 ரூபாவை வாங்கிக் கொண்டு போய்விடடார்.

எனினும் குழந்தை பாக்கியம் பிரேமாவுக்கு கிட்டியதாக இல்லை. இந் நிலையில் பிரேமாவின் சின்னம்மா ஒரு முறை பிரேமாவின் வீட்டுக்கு வந்தார். தனிமையில் பிரேமாவுடன் அவர் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்த போது, ஏன் பிரேமா நீ ஒரு பெண் மருத்துவ நிபுணரிடம் செல்லக்கூடாது? என்று கேட்டார்.

பிரேமா வேதனையான ஒரு புன்னகையை உதிர்த்தார். ''என்ன சின்னம்மா நீங்க கதைக்கிறீங்க? புருஷனின் உதவி இல்லாமல் டொக்டரால் மட்டும் பிள்ளைவரம் தர முடியுமா?'' என்று பிரேமா எதிர்க்கேள்வி போட்டதும், அதிர்ந்து போனார் சின்னம்மா.

''உண்மையைச் சொல்லுடி, உங்கள் இருவருக்கும் இடையே என்ன தான் நடக்குது, வெளியே தான் சொல்லேன்!'' என்றதும் தயங்கி சில விஷயங்களைச் சொன்னாள் பிரேமா.

''அவர் ரொம்ப நல்லவர். அவரை நான் ரொம்ப நேசிக்கிறேன். அவர் எனக்கு என்னென்ன தேவையோ, அத்தனையும் பார்த்துப் பார்த்து செய்கிறார். எந்தக் குறையும் வைக்கிறதில்லை. ஆனால் இதுவரை நாங்கள் உறவு வைத்துக் கொண்டதில்லை. படுக்கையில் அவர் என்னைத் தொட்டதில்லை.''

சின்னம்மாவுக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் இவ்வளவு காலமாக புதிராக இருந்த ஒரு ரகசியத்தின் ஒரு நுனி பிடிபட்டதில் நிம்மதியடைந்தார். பெரேராவிடம் விஷயத்தைச் சொன்னார். பெரேராாவுக்கு குழப்பமாகப் போய் விட்டது. பார்ப்பதற்கு நல்லவனாகத் தெரியும் பையன் ஓரினசேர்க்கையாளனா? திருநங்கையா? இல்லையேல் ஆண்மைக் குறைவால் அவதிப்படுபவனா? இதை எப்படித் தெரிந்து கொள்வது? ஒருவர் பெரேராவுக்கு ஆலோசனை சொன்னார்.

''பஸ்யாலவில் ஒரு பௌத்த துறவி இருக்கிறார். அவர் சக்தி வாய்ந்த காதல் எண்ணெய் தயாரிப்பதில் வல்லவர். அந்த காதல் எண்ணெய் பூசிக் கொண்டால் கிழவனும் இளைஞனாகி விடுவான். அங்கே செல்லுங்கள்!'' என்ற ஆலோசனையை நம்பி பஸ்யாலைக்குச் சென்றார் பெரேரா.

அங்கே சென்றதும் ஐம்பது ரூபாவை வாங்கிக் கொண்ட அந்தத் துறவி, ஒரு செப்பு குப்பிக்குள் கொஞ்சம் எண்ணெய் விட்டு அதை அவர் கையில் கொடுத்தார். ''இதை அந்தப் பெண்ணின் கழுத்தில் கட்டி விடுங்கள். ஆனால் இது ரொம்பவும் சக்தி வாய்ந்தது. எனவே அவள் தன் கணவனைத் தவிர வேறு எந்த ஆண் அருகிலும் செல்லக்கூடாது'' என்ற எச்சரிக்கையோடு குப்பியைக் கொடுத்து அனுப்பினார். குப்பி பிரேமாவின் கழுத்தில் கட்டப்பட்டது. இதன் மகிமை அறிந்து கொள்வதற்கு சின்னம்மாவை பெரேரா பிரேமா விடம் அனுப்பி வைத்தார். சின்னம்மா பிரேமாவுடன் பேசிய பின்னர் தலையைத் தொங்கவிட்டபடி திரும்பி வந்தார். நான் இன்னும் கன்னி கழியாதவள் தான் என்று பிரேமா சொன்னதால் இருவருமே உறைந்து போனார்கள். காதல் எண்ணெய் வேலை செய்யவில்லை!

அப்போது தான் ஜஸ்டின் பெரேராவின் நண்பர் ஒருவர், 'இதெல்லாம் சரிபட்டு வராது: நீங்கள் பகுத்தறிவாளர் டாக்டர் கோவூரைப் போய்ச் சந்தியுங்கள்' என்று ஆலோசனை கூறினார். டாக்டர் கோவூர், பேய், பிசாசு, பூதம் எல்லாம் வெறும் கற்பனையே என்று பிரசாரம் செய்து வந்ததோடு மன நோயாளர்களை உளவியல் பகுப்பாய்வு ஊடாகக் குறைப்படுத்தியும் வந்தார்.

பாமன்கடையில் அமைந்திருந்த கோவூரின் வீட்டையடைந்த பெரேரா, முழுக்கதையையும் அவரிடம் சொன்னார். உடனே பிரேமாவைத் தன்னிடம் அழைத்து வருமாறு சொன்னார் கோவூர். பிரேமாவிடம் பேசி விவரங்களை அறிந்து கொண்ட கோவூர், அவரது கணவர் சல்காதோவை தன்னை வந்து சந்திக்குமாறு அழைப்பு விடுத்தார். ஒரு நாள் சல்காதோ கோவூரைச் சந்திக்க வந்தார்.

சல்காதோவின் அப்பா கேகாலையில் ஒரு பிரசித்த பெற்ற வழக்கறிஞர். சல்காதோ பிறந்த இரண்டாவது வருடத்திலேயே அவர் மரணமாகி விட, குழந்தை சல்காதோ அம்மாப் பிள்ளையாக வளர ஆரம்பித்தது.




குழந்தை சல்காதோவை அவர் அம்மா யாரிடமும் தருவதில்லை. தானே வளர்த்தார். வெளியாருடன், குழந்தைகளுடன் சேர விடவும் இல்லை. அவரே பாடசாலைக்கு அழைத்துச் சென்று திரும்ப கூட்டி வந்தார். சிறுவன் சல்காதோவைத் தன்னுடனேயே படுக்கவைத்துக் கொண்டார். தாய்க்கும் மகனுக்கும் இடையிலான இந்த நெருக்கமான உறவு, அவன் பதின்ம பருவத்தை எட்டிய பின்னரும் தொடர்ந்தது. தாய்க்கு மகனே உலகமாக, மகனுக்கு தாயே எல்லாமுமானாள். பேராதனை பல்கலைக்கழகத்தில் படிப்பைத் தொடரும் போதும் தாயே அவனுக்கு உணவு ஊட்டி விட்டாள். ஹொஸ்டலில் தங்கும் நாட்களில் அவனுக்கு உறங்கவே பிடிக்கவில்லை. மகன் பக்கத்தில் இல்லாமல் தாய்க்கும் உறக்கம் கலைந்தது. உண்மையைச் சொன்னால், ஒருவர் இன்றி மற்றவர் வாழ்வது சாத்தியமில்லை என்ற அளவுக்கு தாய்-சேய் உறவு இறுகிப் போனது.

கேகாலையில் வீட்டுக்குப் பக்கத்தில் ஆசிரியராக வேலைசெய்ய வாய்ப்பு கிடைத்ததால் ஆசிரியரானான் சல்காதோ. சம்பளப் பணத்தை அப்படியே அம்மாவிடம் கொடுத்து விடுவான். இந்நிலையில் ஒருநாள் அம்மா இறந்துவிட்டாள். துடித்துப் போனான் சல்காதோ. உலகமே இருண்டு போனது. அவன் பட்ட துன்பம் வார்த்தையால் வர்ணிக்க முடியாதவை.

இதன் பின்னர்தான் அந்த வீட்டில் இருக்கப் பிடிக்காமல் ஒரு இடமாற்றம் பெற்று நீர்கொழும்புக்கு வந்தார் சல்கோதோ மாஸ்டர்.

(31ஆம் பக்கம் பார்க்க)



அறுபது - எழுபதுகளில் கறுப்பு - வெள்ளை மற்றும் வர்ணத் திரைப்படங்களில் அழகுப் பதுமையாகத் தோன்றி மகிழ்வித்த வெண்ணிற ஆடை நிர்மலா அடிப்படையில் ஒரு நடனமணி இப்போது தமிழ் தொலைக்காட்சித் தொடர்களில் தோன்றும் இவர், ஜெய்சங்கருடன் பல படங்களில் கவர்ச்சிக் கதாநாயகியாகத் தோன்றி ரசிகர்களைப் பரவசப்படுத்தினார்.





இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி ஸ்ரீகாந்தன்





நூறு ஆண்டுகளுக்கு முன், கொம்பனி வீதிச் சந்தி இப்படித்தான் காட்சியளித்தது. புதிய படம் அதே கோணத்தில் இன்றைய ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தையிலிருந்து எடுக்கப்பட்டது. உங்களுக்கு எது பிடித்திருக்கிறது?



**மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்**

# பிள்ளையார் பிடிக்கப்போய்...

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

நந்த இளைஞனின் பெயர் ருவன். 20 வயது. கல்விப்பொதுத்தராதர உயர் தர பரீட்சையில் எதிர்பார்த்த அளவு பெறுபேறு அவனுக்குக் கிட்டவில்லை. மீண்டும் பரீட்சைஎழுதி பாஸ் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பொரளையில் உள்ள தனியார் கல்லூரியொன்றில் சேர்ந்தான்.

அவனைப் போன்றே மீண்டும் பரீட்சை எழுதி பாஸ் பண்ணவேண்டும் என்ற ஒரே நோக்கத் துடன் அதே கல்லூரியில் சேர்ந்தாள் மேனகா.

கம்பஹா பகுதியில் உள்ள நடுத்தர குடும் பத்தை சேர்ந்தவள். பார்ப்பதற்கு லட்சணமாக இருப்பாள். கலகலவென்ற பேசும் சுபாவம்.

ருவன் பெண்களைக் கண்டால் காத தூரம் ஓடுபவன். அத்துடன் சங்கோஜ பேர்வழியும் கூட. ஆனால் ஒன்று இரக்கக் குணமுடையவன்.

ஒரு நாள் வகுப்பு முடிந்து கல்லூரியை விட்டு வெளியேறும் போது ஹேண்ட் பேக்கை பார்த்திருக்கிறாள் மேனகா. பஸ்கட்டணத்துக்கு 10 ரூபாய் குறைந்தது. சுற்று முற்றும் பார்த்திருக்கிறாள். கண்ணில் பட்டது ருவன் தான். ''பத்து ரூபாய் இருந்தால் தாருங்கள் நாளை திருப்பித்தந்து விடுகிறேன்'' என்று கேட்டிருக்கிறாள் பரிதாபமாக.

ருவன் இயல்பாகவே இரக்க குணம் கொண்டவன். அத்துடன் கேட்டது ஒரு பெண், அத்துடன் லட்சணமான பெண். எப்போது இந்தக் கிளி தன்னிடம் வாய் திறக்கும் என்றுகாத்திருந்தவனுக்கு வழியே வந்து மடியில் விழுந்தால் கசக்குமா என்ன? டக்கென்று பார்வை திறந்து 20 ரூபாவினை நீட்டினான்.

''நாளை தருகிறேன் நிச்சயமாக தருகிறேன்'' என்று நான்காவது தடவையாக கூறி அதனை வாங்கிக் கொண்டாள் மேனகா.

சமயத்தில் ருவன் அவளுக்குக் கைகொடுத்த விதம் மேனகாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அடுத்த நாள் இருபது ரூபாவுடன் வீட்டில் செய்திருந்த தின் பண்ட பார்சலையும் சேர்த்தே ருவனுக்கு கொடுத்தாள் மேனகா.

பணம் வராவிட்டாலும் பரவாயில்லை என்று இருந்த ருவனுக்கு பணத்துடன் சுவையான தின் பண்டமும் கிடைத்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி. மெய் சிலிர்த்துப் போனான்.

பதிலுக்கு அவன் ஒரு சொக்லெட்...

அதற்கு பதிலாக அவள் கென்டீனில் ஷோர்ட் ஈட்...

மறுபடி அவன் ஒரு கோக்...

பதிலுக்கு அவன் ஒரு ஃபாலுடா...

சிற்றுண்டியும், குளிர்பானமும் இருவர் நட்பையும் வளர்த்தன. இருவரும் அந்த தனியார் கல்லூரியில் சேர்ந்த ஒரு மாதத்துக்குள் அது வந்துவிட்டது.

எது வந்துவிட்டது?

அது தான்!!

எது?

காதலர் தினம், பெப்ரவரி 14.

அன்றைய தினம்...

கொடுத்தது யார்? எடுத்தது யார்? என்று தெரியவில்லை. ஆனால் பற்றிக் கொண்டு விட்டது. ருவனுக்கும் மேனகாவுக்கும் இடையே காதல்!

காதல் என்றால் கடிதங்கள் இல்லாமலா?

மேனகா ருவனுக்கு எழுதிய காதல் கடிதங்களில் ஒன்று ருவனின் தாயிடம் சிக்கிவிட்டது. ருவனின் காற்சட்டையை கழுவுவதற்காக அவனது தாய் எடுத்திருக்கிறாள். பொக்கட்டில் என்ன கிடக்கிறது என்று பார்த்த போதே மேனகாவின் கடிதம் தாயிடம் சிக்கியிருக்கிறது.

அந்தக் கடிதத்தில் மேனகா எழுதியிருந்த ஒரு விடயம் ருவனின் தாய்க்கு மேனகா மீது வெறுப்பை ஏற்படுத்தியது.

மேனகா படித்த பாடசாலையில் இருந்த விளையாட்டு ஆசிரியர் உண்மையிலேயே ஒரு விளையாட்டுப் பேர்வழிதான். மெய்வல்லுன போட்டிகளில் ஈடுபடும் மாணவியருக்கு பயிற்சியளிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மெய்வல்லுன நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் திறமையுள்ள மாணவியருக்கு அவர் விசேட பயிற்சிகள் வழங்குவது வழமை. இதை எவரும் தவறாக எடுக்கவில்லை. இது அந்த ஆசிரியருக்கு சாதகமாக இருந்தது.

மேனகா குறுந்தூரம் ஓடுவதில் திறமைசாலி அவளுக்கு குறுந்தூர ஓட்டத்தின் நுணுக் கங்களை சொல்லிக் கொடுத்து அவர் மேலும் திறமையுள்ளவராக உன்னை நீ மாற்றிக் கொள்ள வேண்டும் என ஆலோசனை சொல்லி யிருக்கிறார். ஏனெனில் கம்பஹா மாவட்டத்தில் குறுந்தூர ஓட்டராணி மேனகாதான்.

மேனாவின் ஓட்டத் திறமையை ஒரு பக்கம் வளர்த்தெடுத்த விளையாட்டு ஆசிரியர் மறு பக்கம் மேனாகாவின் கற்பை கவர்ந்திருக்கிறார்.

இந்த உண்மையை ருவனிடம் கூறியிருந்த மேனகா ருவனுக்கு எழுதிய கடிதமொன்றில் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறாள். அந்த மேனகாவின் ரகசியம் எழுதப்பட்டிருந்த கடிதமே துரதிஷ்டவசமாக ருவனின் தாயின் கையில் கிடைத்திருக்கிறது.

மேனகாவுடனான தொடர்புகளை உடனடியாக நிறுத்திவிட வேண்டும் என்று அந்த இரவே ருவனிடம் கண்டிப்பாக கூறிவிட்டாள் ருவனின் தாய்.

அத்துடன் அவர் நிறுத்தியிருக்கலாம்...

ஆனால் மகனின் நல்வாழ்க்கையை உத்தேசித்திருந்த அந்தத் தாயாரினால் மேனகா ஏற்கனவே கற்பிழந்தவள் என்பதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. எனவே அவள் எக்காரணம் கொண்டும் தனக்கு மருமகளாக வந்து விடக் கூடாது என்ற பயத்தில் கண்ட கண்ட நேரமெல்லாம் மேனகாவுடனான தொடர்பை விட்டுவிடு என்று நச்சரித்துக் கொண்டேயிருந்தாள். இது ருவனுக்கு பெரும் நெருக்கடியாக இருந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

ஒரு நாளைக்கு ஒரு தரம் அட பத்துத் தரம் கூறினாலும் பரவாயில்லை. ஒரு நாளைக்கு 600 தரம் விட்டுவிடு, விட்டுவிடு என்று ஓதிக் கொண்டிருந்தாள். பொறுத்துக் கொண்டிருக்கத் தான் முடியுமா? பொறுக்கவே முடியாத ஒரு தருணத்தில் விஷம் துடித்து விட்டான் ருவன்.

''அன்று ஞாயிற்றுக்கிழமை. மகனுக்கு கல்லூரி லீவு. அதனால் தான் அதிக நேரம் தூங்குகிறான் என்று நினைத்தேன். ஆனால் ருவன் ஒரு நாளும் பத்து மணிக்கு மேல் தூங்கியதில்லை என்னவென்று பார்த்த போது தான் மகன் விஷம் குடித்து தற்கொலை செய் திருந்தது தெரியவந்தது'' என்று மரண விசார ணையின் போது ருவனின் தாய் கூறினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ருவன் எழுதியி ருந்த இறுதிக் கடிதம் தான் அவளது தாய்க்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

'எனது கண்ணுக்கு கண்ணான மேனகா மீது எந்த தவறும் இல்லை. பலவந்தப்படுத்தப்படும் போது பெண்கள் பலவீனமாகியிருகிறார்கள் என்பது பெண்ணான உனக்கே தெரியவில்லையே என்ன செய்வது...

மேனகாவும் நானும் உயிருக்கு உயிராக காதலிக்கிறோம் என்பது உனக்குத் தெரியும். எனது இன்னுயிர்க் காதலி மேனகா இங்கே வந்து எனது உடலுக்கு முத்தம் கொடுத்தால் தான் எனது ஆத்மா சாந்தியடையும் அவ்வாறு மேனகா முத்தம் தராமல் நான் புதைக்கப்பட்டால் உன்னை சும்மா விடமாட்டேன் ஆவிரூபத்தில் வந்து உன்னை கழுத்தை நெரித்துக் கொள்வேன்.

மேனகாவை என்னால் மறக்கமுடியாது. நாம் இருவரும் திருமணம் செய்வதாகத்தான் இருந்தோம், ஆனால் உனது நாளாந்த நச்சரிப்பு காரணமாக உலகத்தின் மீதே எனக்கு வெறுப்பு வந்துவிட்டது. அதனால்தான் விஷம் குடித்து தற்கொலை செய்கிறேன்.

மறந்து விடாதே மேனகாவின் முத்தம் இல்லாவிட்டால் உன் உயிருக்கு என்றுமே ஆபத்துதான். எங்களைப் பிரித்த பாவி நீ! உன்னை நான் சும்மா விடமாட்டேன்.' என்று ருவன் தனது இறுதிக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

இந்தக் கடிதம் சட்ட விசாரணை அதிகாரியி டமும் பொலிஸாரிடமும் சமர்ப்பிக்கப்பட்டது.

ருவனின் மரணம் ஒரு தற்கொலை என்பதற்கு அதுவே சான்றாகியது. ருவனின் இறுதி சடங் குக்கு மேனகா வந்தால் அவளை அடித்துக் கொல்ல ருவனின் உறவினர்கள் காத்திருந்த னர். ஆனால் மேனகா அங்கு வரவேயில்லை.

அதனால் இப்போது கூட ருவனின் தாயார் பக்கத்தில் ஒருவரை துணைக்கு வைத்துக் கொண்டுதான் இரவு நேரத்தில் தூங்குகிறார்.

காரணம்,

ருவன் ஆவிரூபத்தில் வந்து கழுத்தை நெரித்து விடுவான் என்ற பயம்தான்!

**ஏ. மதுரை வீரன்**


வண்ண வானவில்

*விளம்பரக் கட்டணங்கள்*

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

**சாதாரண விளம்பரங்கள்**

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செமீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செமீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செமீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செமீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சியாத்துவின் பலாமரம்

வரிச்சு மண் சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருந்த தேய்ந்த மண்வெட்டியையும்: திண்ணை அரைச்சுவரிலிருந்த வெட்டுக்கத்தியையும் எடுத்துக் கொண்ட சியாத்து, காய்ந்து பாளம் பாளமாக வெடித்துப் போன முற்றத்தைப் பார்த்து பெரு மூச்சு விட்டபடியே வானத்தை வெறித்துப் பார்க்கின்றான்.

''மக தேத்தண்ணி சாயம் ஒரு போத்தலும் கொஞ்சம் வெத்தலையும் தா. இன்னக்கி சரி சேனப்பக்கம் போய் பாப்பம். ஏய் யசோ நீயும் வாரியா சேனக்கி...''

''ஆமா போவோம். வெய்யில்ல சும்மா காஞ்சிட்டு சரி வருவோமே''

''காலையிலேயே இப்படி வெய்யில் கொளுத்துதே. பகலைக்கு உச்சி வெய்யில் எப்படி இருக்குமோ...''

மூன்று மாதங்களாக ஒரு சொட்டு மழை பெய்யவில்லை தரை அக்கினி சட்டியாக சுடுகின்றது. சியாத்து தனது தகப்பன் காலத்தில் உண்டாக்கிய பலா மரங்களின் நிழல் தான் கொஞ்சம் இதமாக இருக்கின்றது. தோட்டக் காணியில் வேலியோரமாக நட்டுவைத்த பலா மரங்கள் கிளை பரப்பி வளர்ந்திருக்கின்றன. நாள் தவறாமல் கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளி ஊற்றியது நினைவுக்கு வருகின்றது. இந்த பலா மரங்களினால் அவன் வாங்கிய அடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. கோடை காலங்களில் தண்ணீர் ஊற்றும் பொறுப்பு சியாத்துவினுடையது.

''பாரு யசோ இந்த மரத்தூரில நிக்கிற நேரம் நெழல் எவ்வளவு சொகமா இருக்கு.'' அடி முதல் நுனி வரை பெருமிதத்தோடு பார்க்கின்றான் சியாத்து.


''இந்த முற நல்லா காச்சிருக்கு.''

''ம்ம்..... சரி வா சுருக்கா சேனக்கி போயிட்டு திரும்பிவரும்.'' யசோ சொல்கிறாள்.

''ஆமா ஒனக்கெல்லாம் இந்த மரங்களோட பெறுமதி தெரியாது. இந்த மரத்து தூருல சும்மா நின்டுக்கிட்டு இருந்தாலே போதும் அங்க பாரு அந்த அணில் பலாப்பழத்த கொறிச்சிதிங்கிற அழக...''

''ம்ம்.... சீவாத்துக அப்படிதான். ஒன்னும் அதிகமா யோசிக்காத...''

கொஞ்ச தூரம் சென்ற பின்னர் ஒற்றையடி பாதையில் இருபுறமும் வளர்ந்திருந்த சூறை முட்செடிகளின் இலைகள் கருகி உதிர்ந்து போன சருகுகள் கால்களில் மிதிபடும் போது சீரானதொரு தாளலயமாக ஒலிக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர் இந்த பாதையோரமிருந்த பசுமை இன்றில்லை.



பெருமழையில் மலையிலிருந்து பெருத்தெடுக்கும் தண்ணீர் இந்த குறுக்குப் பாதையில் தான் வழிந்தோடும் மாதக்கணக்கில். இன்று மலையிலோ ஒரு மரம் கூட இல்லை. முன்பு ஒற்றையடி பாதையில் நடக்கும் போது, களிமண் விரலிடுக்கில் சதசத வென மேலே வருவதை மகிழ்ச்சியுடன் அனுபவித்து நடப்பான். ஆனால் இன்றோ அந்த ஒலிக்குப் பதிலாக காய்ந்து கருகிப்போன கரசர வென்ற சருகுகளின் மரண ஒலி.

''நம்மட கிராமத்துக்கு வந்த கேடை நெனச்சா எனக்கு வயித்த பத்திக்கிட்டு வருது. அந்த மரயாவாரி மிசின கொண்டு வந்து மரங்களயெல்லாம் அறுத்து அநியா யமா ஊர நாசமாக்கிட்டான். பத்துப் பதினைஞ்சி வருசத்துக்கு முன் எவ்வளவு குருவிக் கூடுக இருந்திச்சி. இப்ப பேருக்கு ஒரு மரம் இல்ல''

''அதுனால தானே மழ பேயாம இருக்கு என்னா செய்யிறது. அதோட ஒரு விசயம் சொல்லனும். சொன்னா ஒங்க மனசு நோகுமேன்னு கவலையா இருக்கு. ஆனா சொல்லாமலும் இருக்க முடியாது...''

''அப்படி என்னா விசயம் யசோ?''

''பெரியமகன் பலாமரங்கள விக்கனுமின்னு ஒங்ககிட்ட கேக்க சொன்னான்...''

''என்னா இந்த பலா மரங்களையா?''

''ஆமா அப்பாகிட்ட கேட்டு சொல்லுன்னான் மரமொதலாளி பெருசா காசு தாரேன்னாராம்.''

''நான் செத்ததுக்குப் பொறகு மரங்கள வெட்டச் சொல்லு...''

அவன் தனது காணியிலுள்ள மரங்களையும் அதனடியில் அனுபவித்த சுகத்தையும் நினைத்துக் கொள்கின்றான். கிராமத்தில் கொஞ்சமாவது மரங்கள் மீதமிருப்பது சியாத்துவின் காணியில் மட்டும் தான். பெரிய மகன் கொஞ்சம் கொஞ்சமாக பலா மரங்களை வெட்டி விற்றுவிட்டான். சியாத்து இயற்கை சூழலை தனது உயிரைப் போல நேசிப்பவன்.

''எனக்கு சேனைக்கு போக முடியாது வா வீட்டுக்குப் போவோம்.''

''என்னா நடு வழில இப்படி சொல்ற திடீரின்னு போயி கொஞ்சம் புல்லயாவது செதுக்கிட்டு வருவோம்.''

சியாத்துவின் இதயத்தடிப்பு அதிகரிக்கின்றது. முழு உடம்பும் கொதிக்கின்றது. சுட்டெரிக்கும் வெய்யிலுக்கு மேலாக உடல் தகிக்கின்றது.



ரத்னதாஸ வெதகே

''கொஞ்சம் இப்பிடி இருந்திட்டு போவோம்''

இலைகள் உதிர்ந்து நின்ற மரத்தினடியில் குந்தியவன் மேலே பார்க்கின்றான். மேகங்கள் எதுவுமில்லாத வெள்ளை நிறமாகத் தெரிகின்றது வானம்.

தூரத்தே தவிட்டுப்புறாவின் குரல் ஒலிக்கின்றது. என்னைப் போல பறவைகளுக்கு அதன் பிள்ளைகளிடமிருந்து எந்த தொந்தரவும் இருக்காது. மிகவும் பாசத்தோடு வளர்த்த பெரிய மகனின் சிறுவயதிலிருந்த கீழ்ப்படியாமை குணம் மாறவேயில்லை. சியாத்துவின் உடல் வியர்வையில் தெப்பமாக நனைகின்றது.

''ஏன்னா மேலுக்கு சொகமில்லையா? ஏதும் வருத்தமா?''

''இதெல்லாம் செஞ்சது அந்த மரயாவாரிதான். நம்ம பெரிய பயலையும் சேத்துக்கிட்டு ஊர்ல உள்ள மரங்களையெல்லாம் வெட்டி நாசமாக்கிட்டான்.''

மர முதலாளியைக் கண்ட மாத்திரத்தில் பலா மரங்கள் நடுங்குவதாக ஊரில் உள்ளவர்கள் பேசிக் கொள்வார்கள்.

சியாத்து தனது மனைவியோடு வீட்டுக்கு வரும் வழியில் தான் உண்டாக்கிய பலா மரத்தூரிலுள்ள சிறு கற்பாறையில் உட்கார்ந்தான். ''ஐயோ! எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று உஷ்ணக் காற்றிலாடும் மரக்கிளைகள் அபயகரம் நீட்டுவது போலிருக்கின்றது. தனது கண்களில் திரண்ட கண்ணீரை மனைவிக்குத் தெரியாமல் துடைத்துக் கொள்கின்றான்.

''மேற்குப் பக்கம் காணித்துண்டை பெரிய மகனுக்கு எழுதிக் குடுத்தது தான் பெரிய தவறாப் போச்சி. அவ சின்னமக தான் புடிச்ச புடியா நின்னா அந்தக் காணித்துண்ட பெரியவனுக்கு எழுதி குடுங்கன்னு..? யோசனையில் ஆழ்கின்றான்.

''என்னா பழயபடி நினைப்பு வந்திருச்சா போவமா வீட்டுக்கு''

''இல்ல வா போவம்.''

வீட்டுக்கு வந்து மண்வெட்டியை ஒரு பக்கம் எறிந்துவிட்டு கத்தியை திண்ணை அரைச்சுவரில் வைத்தவன், படங்குக் கட்டிலில் சாய்கிறான்.

''ஏன் அப்பா போனதோட வந்துட்டீங்க? சேனக்கி போகவில்யா?'' மூத்தமகள்.

''இல்லமக.'' சலிப்போடு சொல்கிறான். கட்டிக் கொண்டவள் தாம்பத்தியம் முறிந்து தாய் வீடு திரும்பி வீட்டுக்குப் பாரமாக விருக்கும் மூத்தவளைக் காணும் போதெல்லாம் ஆத்திரம் ஆத்திரமாக வரும்.

''நான் அப்பாவுக்கு கொஞ்சம் சாயத்தண்ணி ஊத்திக்கிட்டு வாரேன்..''

''ம்ம் சரிசரி...'' வெறுப்புடன்.

கூரையை பார்த்தவன் 'நாளைக்கு காலையிலேயே போய் மர முதலாளியை சந்திக்கனும்' - தனக்குள் சொல்லிக் கொள்கிறான். அதிகாலையிலேயே போய் மரமுதலாளியைப் பார்க்கின்றான். மேடாகிப் போன வயலொன்றில் அமைக்கப்பட்டிருந்தது மரக்காலை. ஒருவரும் வேலைக்கு வந்திருக்கவில்லை. மலைமலையாய் குவிக்கப்பட்டிருக்கும் மரத்தூள்களைப் பார்த்துப் பெருமூச்சு விடுகின்றான்.

''இதெல்லாம் எங்க கிராமத்து மரங்களின் தூள்''

இயந்திரங்களின் அருகில் சென்ற அவன் பல்சக்கரத்தைக் கண்டதும், அது தன்னைச் சங்காரம் செய்யக் கோரப் பற்களை நீட்டுவதாக நினைக்கின்றான். மரக்கட்டைகள் மனித சடலங்களாக தோற்றம் காட்டின. எதற்கும் பயனற்றதாக இற்றுப் போன மரக்குவியல்கள் மற்றொரு புறம் மரக்காலைக்கு சற்று தூரத்திலுள்ள மாடி வீட்டிலிருந்து பெரிய நாயொன்று குரைக்கின்றது இவனைப் பார்த்து.

''சிறிது நேரத்தில் ஆஜானபாகுவான தோற்றம் கொண்ட ஒருவர் வருவது தெரிகின்றது. சேர்ட் அணியாமலிருந்த அவரது உடம்பில்-கழுத்தில்-தொங்கிய தங்கமாலை மரம் இழுக்க பயன்படும் கயிற்றின் தடிப்பத்திலிருந்தது.''

''ஆ சியாத்து மாமா, என்னா இப்புடி காலையிலேயே அவுசரமா வந்திருக்கீங்... காசு பூரா மகன் கிட்ட குடுத்திட்டேன். எனக்கு வசதிபடும் போது ஆளனுப்பி மரங்கள வெட்டிக்கிறேன். அவுசரமா காசு ஏதும் தேவயோ?''

''எனக்கு காசு கீசு ஒன்னும் தேவயில்ல. பலா மரங்கள வெட்ட வேணாமின்னு சொல்லத் தான் வந்தேன்...''

''இது நல்ல கதையா இருக்கு அந்த மரமெல்லாம் இப்ப எனக்குச் சொந்தம்..''

''முதலாளி குடுத்த காச நான் எப்புடியாவது திருப்பித் தந்திருவேன். ஒங்களுக்குப் புண்ணிமா போகும். அந்த மரங்கள வெட்டாதீங்க.''

''இது நல்ல வேடிக்கை. அதோட நான் குடுத்திருக்கிற காச திருப்பிக்குடுக்கிறதின்னா ஒங்க காணிய விக்க வேண்டி வரும்.... சரியா, மத்தது ஒங்க மகனும் நீங்களும் ஒங்க பிரச்சனகள பாத்துக்கங்க...''

(31ஆம் பக்கம் பார்க்க)

தமிழில்: மரலன்பன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலிக்கு ஒரு யோசனை

இலங்கை வானொலி ஒரு காலத்தில் பெற்றிருந்த பெயர் சொல்லிமாளாத ஒன்று. அன்று ஆசியாவிலேயே முதல்தரத் தமிழ் வானொலியாகத் திகழ்ந்தது இந்த வானொலியா என்ற வியப்புதான் இப்போது ஏற்படுகிறது. மக்களுக்கு அன்று தியேட்டர்களில் திரைப்படமும், நாடகமும் ரேடியோவும் தான் ஒரே பொழுதுபோக்கு சாதனங்கள். வீடே அனைவரும் வானொலி கேட்டார்கள். அவர்களின் தேவைகளை தீர்க்கும் வகையில் வானொலியும் நன்றாகவே தீனி போட்டது.

எனினும் எப்.எம்.யுகம் ஆரம்பமானதும் அக்கால மாற்றத்துக்கு இலங்கை வானொலியும் ஈடுகொடுத்து தன்னை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். இப்போது கூட இதைச் செய்யலாம்.

சரி, விஷயம் அதுவல்ல. இன்று ஐம்பதைத் தாண்டியவர்களால் மறக்க முடியாத சில விஷயங்கள் உள்ளன. மாலை ஐந்து அல்லது ஐந்தே கால் ஆனதும் இலங்கை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சி ஆரம்பமாகும். அதிலே ஒரு சிறுவர் கதைப் பாடலை ஒலிபரப்புவார்கள். அது, கோவிந்தசாமி பாயாசம் வைத்த கதை.

'பாயாசம் வைக்க வேண்டும் - பானையிலோ அரிசி இல்லை' என்று அந்தக் கதை ஆரம்பமாகும். கோவிந்தசாமி பாயாசத்துக்கான பொருட்களை எப்படிச் சேகரித்து பாயாசம் வைத்தார் என்பதே அந்த நெஞ்சை மறக்காத கதைப்பாடல். இப்போது அதை ஒலிபரப்புவதில்லை, எனினும் எங்களைப் போன்றோருக்கு அதை மீண்டும் கேட்க ஆசையாக இருக்கிறது. இன்றைய சிறுவர்களும் நிச்சயம் இதை ரசிப்பார்கள்.

இதே போல் அன்று ஒலிபரப்பான கோபால் பற்பொடி விளம்பரமும் கேட்க சுவையாக இருக்கும். ஆணும் பெண்ணுமாக இருவர் பாடுவார்கள். அது.

பல்லுவலி வந்திருச்சி - பல்லுவலி வந்திருச்சி
பல்லுவலி வந்திருச்சி - மச்சானே...
என்று பெண் குரல் ஆரம்பிக்கும்.

ஆண் குரல்,

பாரு பாரு சொன்னேனே கேட்டியா...
இந்தப் பல்லுவலிதான் வந்திருச்சி - பாத்தியா என்று எடுத்துக் கொடுக்கும்.
இன்னொரு சிறுவர் பாடலும் ஞாபகத்துக்கு வருகிறது.

கட கட லொட லொட தட தட வண்டி
வண்டி மாடும் சண்டி - ஓ
வண்டிக்காரன் நொண்டி

என்று இப்பாடல் ஆரம்பமாகும்.

கடு கடு கடு கடு
மோட்டரு வண்டி - துருபுடிச்ச வண்டி
சட்டென பாயும் - பாய்ந்தால் குடை சாயும்
என்று இந்தப் பாடல் பயணிக்கும்.

இதையும் திரும்பவும் கேட்க ஆசையாக இருக்கிறது.
எழுபதுகளில் இன்னொரு பாடல் நம்மை ரம்யப்படுத்தியது.
ஞாயிறு மாலை நான்கு மணியளவில் மக்கள் வங்கி தணியாத தாகம் என்ற பெயரில் ஒரு தொடர் நாடகம் ஒலிபரப்பி வந்தது. அது சில்லையூர் செல்வராசன் அளித்த நிகழ்ச்சி. அது ஒரு அருமையான தாலாட்டும் அறிமுகப் பாடலுடன் ஆரம்பமாகும்.

அத்தானே அத்தானே - எந்தன் ஆசை அத்தானே
கேள்வி ஒன்று கேட்கலாமா - உனைத்தானே

என்று பெண் குரலுடன் அது (பாடியது கமலினியா?) ஆரம்பமாகும். இது, காப்புறுதியை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது. இதைக் கேட்டவர்கள் எவருமே இவ்வரிகளை நிச்சயம் மறந்திருக்க மாட்டார்கள்.

இதை மீண்டும் ஒலிபரப்பினால் ரசிப்போம்.

இவை போன்ற இன்னும் பல காலத்தால் அழியாத ஒலிபரப்பான நிகழ்ச்சி நறுக்குகளை இலங்கை வானொலி தென்றல் சேவை அவ்வப்போது ஒரு நிகழ்ச்சியின் ஊடாக ஒலிபரப்பலாம். அவை தொடர்பான நபர்கள் இருப்பார்களானால் அவர்களிடமும் நேரில் பேசி ஒலிபரப்பினால் சுவையாக, நிறைவாக இருக்கும்.

மேலும், அந்தநாள் ஞாபகம் என்ற பெயரில் இத்தகைய நிகழ்ச்சிகளைத் தொகுத்து ஒரு இறுவட்டையும் இலங்கை வானொலி வெளியிடுவது, வரவேற்கத்தக்க ஒரு முயற்சியாக அமையும் என்பதோடு அந்த வானொலிக்கு இது ஒரு வாய்ப்பான விளம்பரமாகவும் இருக்கும்.

ஏதோ, ஒரு சின்ன ஞாபகக்கீற்றுகளுடன் ஒரு யோசனையையும் முன் வைத்தோம். ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவார்களானால் உபயோகமாக இருக்கும்.

**வானொலி பையன்**

## சூரியனின் இசைச்சமர்

சூரியனில் திங்கள் முதல் வெள்ளிவரை காலை 10 முதல் பிப ஒரு மணி வரை நடைபெறும் இசைச்சமர் கேட்பதற்கு இனிமையான ஒரு நிகழ்ச்சி. சூரியனின் ஆரம்பம் தொட்டு இந்த நிகழ்ச்சி இன்றைக்கும் தொய்வில்லாமல் அதே வேகத்துடன் பயணிப்பது பாராட்டக்குரியது. மேனகாவும் சந்துருவும் இதை தமது அனுபவ முதிர்ச்சியுடன் கம்பீரமாகவும், நகைச்சுவை இழையோடும் வகையிலும் நடத்திச் செல்கிறார்கள்.

காலையில் அசத்த தரும் ஐந்து நிமிட தென்னிந்திய கலைஞர்களுடனான பேட்டியும் நம்மை நிமிரச் செய்கிறது. வாழ்த்துக்கள்.

ஆனால் ஒன்று சூரியனுக்கு இன்னும் கொஞ்சம் புதிய, வித்தியாசமான நிகழ்ச்சிகள் தேவை. கவனியுங்கள்.

## லோஷன்! பெண் அறிவிப்பாளர்களைக் கொஞ்சம் கவனியுங்கள்!

வெற்றி எப்.எம். கேட்பதற்கு இனிப்பான ஒரு சேவையாக உள்ளது. குறிப்பாகச் சொல்வதானால் வாமு லோஷன் காலையில் விடியலுக்கு விருந்தாக தரும் ஸ்போர்ட்ஸ் தகவல்கள் தடாலடியாக எக்ஸ்பிரஸ் வேகத்தில் பயணிக்கிறது. விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம் தரும் ஏராளமான தகவல்களை விரல் நுனியில் வைத்தும் பகிரும் லாவகம் எல்லாம் வெற்றியின் சொத்து என்று துணிந்து சொல்லலாம். பிரதி சனிக்கிழமைகளில் ஒலிபரப்பாகி வரும் அரைநேர நிகழ்ச்சியில் எந்தவொரு வானொலியும் இதுவரை செய்திராத வகையில், சென்ற வருடத்திற்கான சிறந்த ஒருநாள், டெஸ்ட், இருபதுக்கு இருபது போட்டிகளுக்கான வீரர்களை உலக மக்களின் வாக்குகளுடன் தெரிவுசெய்து தொகுத்து வழங்கியதும் கடந்த வருடத்தை மகிழ்ச்சிகரமாக விடை கொடுத்து அனுப்பியதும் வரவேற்கத்தக்கதாகும். வெள்ளிக்கிழமையில் வி.போர் வெற்றி வி.போர விளையாட்டு என்ற நிகழ்ச்சியும் சுப்பர்!

வெற்றியின் பிளினஸ் ஸ்டார்கள் என்ற நிகழ்ச்சியும் நேர்த்தியானது. பயனுள்ளது. வர்த்தகர்களை அழைத்து அவர்கள் ஜெயித்த கதையை அலசுகிறார்கள். இது தன்னம்பிக்கையூட்டும் ஒரு நிகழ்ச்சி!

அடுத்ததாக திங்கள் - வியாழன் தினங்களில் இரவு எட்டுமணி முதல் 11 வரை நடைபெறும் நண்பனிடம் சொல்லுங்கள் என்ற கவி சிவத்துடனான நிகழ்ச்சி, யார் வேண்டுமானாலும் கேட்டுப் பயன்பெற வேண்டிய ஒன்று. மன அமைதியுடன் உறங்கச் செல்லலாம். இதை நடத்தும் ஷியாம் பாராட்டுக்குரியவர்.

எனினும் மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் வெற்றி எப்.எம் எம்மை சோதிக்கிறது. தெளிவாக கேட்பதில்லை, வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கையில் இடையே ஒரு சிங்களச் சேவை குறுக்கிட்டு குளறுபடி செய்கிறது. திடீரென வெற்றி நிசப்தமாகி விடுகிறது. அரை மணித்தியாலத்திற்கு ஒரு முறை நிசப்தமாகி பின்னர் மீண்டும் தெளிவில்லாமல் ஒலிக்கிறது. இது தொழில்நுட்பக் கோளாறு. தயவு செய்து கவனமெடுங்கள். தெளிவான, இடையூறற்ற ஒலிபரப்பையே நாங்கள் விரும்புகிறோம்.

கடைசியாக ஒன்று. வெற்றியில் பணியாற்றும் பெண் அறிவிப்பாளர்களில் பலருக்கு உச்சரிப்பு சரியாக வரவில்லை. தட்டுத்தடுமாறுகிறார்கள். புதியவர்களாக இருக்கலாம். ஆனால் உச்சரிப்புதானே முதல் தகுதி? இவர்கள் வாசிக்கும் செய்திகள் பாட்டுப் பாடுவது போலத்தான் இருக்கிறது. நாம் பெயர்களையோ நிகழ்ச்சிகளையோ குறிப்பிட விரும்பவில்லை. இவர்களின் உச்சரிப்பையும், தமிழையும் பின்னி எடுப்பதையும் கேட்கும் போது அந்த ஸ்வர்ண ஒலி காலம்தான் ஞாபகத்துக்கு வருகிறது. கவனியுங்கள் லோஷன்!

**- வேந்தன்**

## பிரமாதம், நேத்ராவின் Film City

நேத்ரா கண்மணிச் சேவையில் ஞாயிறு தோறும் எட்டு மணிக்கு Film city என்ற மகுடத்தில் குறும்படங்கள் ஒளிபரப்பாகி வருகிறது. நம் நாட்டு தயாரிப்பான குறும்படங்களை ஒரு மணித்தியாலம் ஒளிபரப்புகிறார்கள். ரொம்பவும் வரவேற்கத்தக்க ஒரு நிகழ்ச்சி இது.

குறும்படத்துக்கான ஒரு மோகம் இருக்கிறது. மெகா சீரியல்களையும், இரண்டரை மணி நேர திரைப்படங்களையும் பார்த்து அலுத்துப்போனவர்களும், குறுகிய நேரத்தில் ஒரு நேர்த்தியான கதையை அதற்கான கதை சொல்லும் லாவகத்துடன் தலையை நிமிர்த்தும் வகையில் சொல்லும் குறும்படங்களை விரும்புவோருக்கும் Film city தீனி போடுகிறது.

குறும்படங்கள் தமிழகத்தில் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கின்றன. கலைஞர் டிவி, அதற்கான களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. குறும்படங்களைப் பார்க்க விரும்புவோர், கலைஞர் டிவியைத் தான் நாட வேண்டியிருக்கிறது. இப்போது அதை கண்மணிச் சேவையும் தருவது, ரொம்பவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம்.

மேலும் குறும்படம் என்பது, சினிமா, தொலைக்காட்சித்துறையில் ஆரம்பப்பாடமாக அமைகிறது. நேர்த்தியான குறும்படம் தயாரிக்கும் ஒருவரால் நல்லதொரு தொலைக்காட்சி நாடகத்தையும், சினிமாவையும் தர முடியும். ஏனெனில் இது ஒரு பயிற்சிக்களம். படம் குறுகியதாக இருந்தாலும் நிறையவே மூளையைக் கசக்க வேண்டும். நிறையவே உழைக்க வேண்டும். இயக்கம், வசனம், உரையாடல், ஒலி/ஒளிப்பதிவு இவை அனைத்தும் ஒரு சேர நேர்த்தியாக அமைந்தால் தான் ஒரு குறும்படம் வெற்றிபெற முடியும்.

எனவே கண்மணி தரும் இந்தக் களத்தை நமது இளைஞர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

வாழ்த்துக்கள்!

வாசகர்கள் வானொலி,
டி.வி. நிகழ்ச்சிகள்
தொடர்பான
விமர்சனங்களை
இப்பக்கத்தில் பகிர்ந்து
கொள்ளலாம்

வானவில் வானலை,
வண்ண வானவில்,
த.பெ. இல: 1218,
கொழும்பு.
vannavaanavil@gmail.com

தமிழகத்தில்..

## ஆளுக்கொரு கட்சி, கட்சிக்கொரு டி.வி!

தமிழக நடிகர்களுக்கு முதல் கனவு முன்னுக்கு வந்துவிட வேண்டும் என்பது. அது சாத்தியமானதும் அடுத்த கனவு அரசியலில் கால் பதிக்க வேண்டும் என்பது. மூன்றாவது கனவு, முதலமைச்சராகிவிட வேண்டும் என்பது. எம்.ஜி.ஆரின் பின்னர் ஜெயலலிதாவும் சி.எம் ஆகிக்காட்டிய பின்னர் கெப்டன் தற்போது சி.எம் கனவில் மிதந்து வருகிறார். இனி சும்மா இருப்பாரா விஜய்? அவரும் அடுத்த மாநிலத்தேர்தலில் தனிக்கொடி பிடித்து களமிறங்குவதற்கான ஏற்பாடுகளில் மும்முரம் காட்டத்தொடங்கியிருக்கிறார்.

அதற்கான முதல் ஏற்பாடாக விரைவிலேயே விஜய் ஒரு செய்மதி தொலைக்காட்சி சேவையை ஆரம்பிக்கவுள்ளார். பொங்கல் பண்டிகையின்போது சனல் பற்றிய அறிவிப்பு வரும் என்றும் திட்டமிட்ட ரீதியாக வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் விஜய் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஒரு பிரபலமான பத்திரிகையில் ஆசிரியராக இருந்த ஒருவரே விஜய் கேட்டுக்கொண்டபடி சனலின் பொறுப்பை ஏற்கத் தயாராகிவிட்டதாகவும் தகவல். ஆனால் இன்றைக்கு வரை கட்சிப்பெயர வாய்திறக்காமலே இருக்கிறார் விஜய்.

தமிழகத்தில் இன்று நிறைய தொலைக்காட்சி அலைவரிசைகள் இருக்கின்றபோதிலும் அனைத்துமே கட்சிச்சாயம் பூசியவையாக இருப்பதால் ஒன்றுமே பார்க்கும்படியாக இல்லை. சன், கலைஞர் அலைவரிசைகள் தி.மு.க பக்கம் என்றால் ஜெயா, ஜெயா மெக்ஸ், ஜெயா பிளஸ் என்பன அ.தி.மு.க சார்பானவை. வசந்தம் மற்றும் மெகா டிவிக்கள் காங்கிரஸ் பக்கம் சாய்பவை. மிஞ்சுவது ராஜ் மற்றும் விஜய் மட்டுமே. இந்த வரிசையில் கெப்டன் டிவியும் விஜய் மனதில் இருக்கும் டிவியும் அரசியல் சாயத்துடனேயே செயற்படுமாம்.

நாம் இங்கே இலங்கை வானொலி, ரூபவாஹினி, ஐ.டி.என் ஆகியவற்றை அரசாங்கத்தின் ஊதுகுழல் என்கிறோம். தமிழகத்தில் கட்சிகள் அனைத்தும் சனல் நடத்திக்கொண்டிருக்கும் இந்த அவலத்தை எங்கே போய் சொல்லுவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் பரவசப்படுத்திய அந்த தேவதை



அப்போது எனக்கு 14 வயதிருக்கும். 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான தடகளப் போட்டிகளில் 60மீட்டர் ஓட்டம், தூரப்பாய்தல் ஆகியவற்றில் எனக்குத்தான் முதலிடம். அஞ்சலோட்ட போட்டிகளில் மற்றைய இல்லங்கள் எங்கள் இல்லத்துக்கு அருகில் கூட வர முடியவில்லை.

வயதுக்கு மீறிய உயரம், அளவான உடல்வாகு, எடுப்பான நாசி, படியச் சீவிய தலைமுடி, ஆனால் கொஞ்சம் கூச்ச சுபாவம். இது தான் நான்.

பேச்சு, நடிப்பு, பாடல் துறையில் எனக்கு நல்ல ஆர்வம். எங்கள் மாணவர் சங்கம் 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' நாடகத்தை அரங்கேற்றிய போது எனக்கு 'பானர்மேன்' வேடம் தான் கிடைத்தது. எனினும் அந்த வேடத்தில் சோபித்து கட்டபொம்மனையும் மிஞ்சிய நடிப்பை மேடையில் வெளிப்படுத்தியவன் நான்.

இத்தனை 'பில்டப்' எதுக்கென்றால் வகுப்பிலும் பாடசாலையிலும் எனக்கு நல்ல மவுசு இருந்தது என்பதை எடுத்துக் காட்டத்தான்.

எங்கள் பாடசாலை கோட்டை ஜயவர்தனபுரவில் இருந்தது. இதற்கு அடுத்து இருந்த மகளிர் பாடசாலையை பிரித்தது நடுவில் இருந்த ஒரு பாதை தான். பிரித்தாலென்ன குடியா முழுகிப் போகும்? பாடசாலை ஆரம்பிக்கும் முன்னரும், விட்ட பின்னரும் மாணவ மாணவியர் அனைவரும் ஒரே பாதையில் தான் சென்றாக வேண்டும். அப்போது அந்தப் பாதை தான் எங்கள் காதல் நெடுஞ்சாலை. தேவதைகளை பார்க்கவும் பேசவும் அது தான் மன்மதனின் மலர்ப்பாதை. ஆனால் அந்தப் பாதையில் தினந்தோறும் சென்றுவரும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை. ஏனெனில் நான் கஸ்தூரி வீதியில் சிக்கிக் கொண்டேன்.

அடுத்து இருந்த மகளிர் பாடசாலையில் நூற்றுக்கணக்கான தேவதைகள் இருந்தன. தேவதைகள் சாதாரணமாக வெள்ளை உடையில் தான் பறந்து திரியும் என்று கூறுவார்கள்.

அந்த மகளிர் பாடசாலையில் நூற்றுக்கணக்கான தேவதைகள் வெள்ளை உடையில் பறக்கவில்லை, ஆனால் படித்துக் கொண்டிருந்தன. இப்போது நினைத்தாலும் அந்த தேவதைகளின் கூட்டம் என்னைத் திரையில் தோன்றி மறைகிறது. அந்த தேவதைகள் கூட்டத்தின் நடுவே இருந்த ஒரேயொரு தேவதை மட்டும் என மன வானில் அடிக்கடி சிறகடித்துப் பறக்கும், என் அனுமதியை கேட்காமலேயே! சொல்லாமல் கொள்ளாமல் என்பார்களே அது மாதிரி என் மனவானில் உல்லாசமாக பறந்து திரியத் தொடங்கினாள். இரவும் பகலும் இது தொடர்ந்து. கனவிலும் நனவிலும் ஒரே இம்சை. அந்த தேவதையை பார்க்காமல் இருந்தால் இதயத்தை யாரோ பிசைவதைப் போல் இருக்கும். பார்க்கும் போதெல்லாம் வானில் பறப்பதைப் போல் இருக்கும்.

விக்கிரகம் இன்றியே காதல் கோவில் கட்டியாகி விட்டது. எத்தனை நாளைக்குத்தான் பூஜை இன்றியே கோயிலை திறந்து வைப்பது? மனதில் தைரியத்தை வர வழைத்துக் கொண்டே, அப்பாடா தேவதையிடம் பேசிவிட்டேன்.

மன்மதனின் பெயர்தான் தேவதைக்கும் பெயராக இருந்தது. எங்கள் ஆங்கில ஆசிரியையின் சொந்தக்காரப் பெண் அவள். அசப்பில் நடிகை வைஜயந்தி மாலா போல் இருப்பாள். அப்போது 'சங்கம்' திரைப்படம் இலங்கையில் திரையிடப்பட்டிருந்தது. வைஜயந்தி மாலாவை திரையில் காணும் போது தேவதையின் நினைவுதான் வரும். இது பற்றி தேவதையிடம் சொன்னபோது நீங்கள் யார் ராஜ் கபூரா, ராஜேந்திரகுமாரா' என்றது தேவதை. (அமிதாப் பச்சன் எல்லாம் காணாமுன் தோன்றியிருக்காத காலம் அது)

அதன் பிறகு பல வருடங்களின் பின் தான் பாடசாலையை விட்டு விலகினேன். ஆனால் எனது முதல் காதல் நாயகி இன்னும் எனது நினைவில் இருக்கிறாள்.

அவளது பிறந்த நாளான october 26 ஆம் திகதி அவளது நினைவு வரும். சுமார் 10 நிமிடங்களுக்கு எனது மனத்திரையில் எனது முதலாவது காதல் கதை விரியும். எனது தேவதையை மனதால் வாழ்த்துவேன். அவள் இன்னொருவரின் மனைவியாக இப்போது இருக்கலாம். இருந்து விட்டுப் போகட்டும். எனது காதல் ஞாபகங்கள் எனது மனத்திரையில் விரிவதை யார் தடுக்க முடியும்.

இப்போது என் தேவதை எப்படி இருப்பாள்? அவளுக்கு பிள்ளைகள் இருப்பார்களா? சில சமயம் அவள் பாட்டியாகியிருப்பாள். பாட்டியாகிருந்தாலென்ன... எந்த வயதில்... என்ன தோற்றத்தில் இருந்தாலென்ன. அந்த தேவதை என்றுமே என் முதற் காதலிதான். மறக்கமுடியாத காதலி.

பதின்ம வயதில் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அதே வயதில் உள்ள மற்றொரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் ஒரு ஈர்ப்பு ஏற்படுவது ஒரு இயற்கை நியதி. அதனை தவறென்று சொல்வதற்கில்லை. அவ்வாறு ஏற்படா விட்டால்தான் ஏதாவது கோளாறு இருக்கவேண்டும் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

இந்த ஈர்ப்பை காதல் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது ஆனால் இந்த ஈர்ப்பின் போது இடம் பெறும் அத்தனை சம்பவங்களும் பசு மரத்தாணி போல் மனதில் ஆழமாகப் பதிந்து விடும்.

அந்த ஈர்ப்பை... முதற்காதலை... முதல் முத்தத்தை எப்படியும் மறக்கமுடியாது.

என்றுமே அழிவு இல்லாத நிலையில் அந்த நினைவுகள் மனதின் அடியில் புதைக்கப்பட்டு விடுகின்றன. அது மட்டுமன்றி நீர்க் குமிழிகள் போல் வந்துமீண்டும் பழையதை நினைவூட்டச் செய்கின்றன.

அவ்வாறான நிலையில் மனதில் ஏற்படும் சந்தோஷத்தை விபரிப்பதற்கு வார்த்தைகளே இல்லை.

**ராம்ஜீ, கொழும்பு**

இந்தப் பகுதியில், உங்கள் வாழ்க்கையில் ஒரு சமயத்தில் குறுக்கிட்ட காதல் அனுபவங்கள், சிறந்த நட்பு, சிறந்த மனிதர்கள் பற்றி நீங்கள் எழுதலாம். நீங்கள் அவரைத் தேடுவதாக இருந்தால் உங்கள் தொடர்பு இலக்கத்தை எமக்குத் தரலாம். இது உங்கள் மனதை திறப்பதற்கான பகுதி. மனம் திறந்து எழுதுங்கள். இல்லையேல் எங்கள் தொடர்பிலக்கத்துடன் பேசுங்கள்.

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

# அம்மா வாங்கி வைத்த திருட்டுப் பணம்!

அவன் பெயர் வேலுசாமி. பாடசாலைக்கு சைக்கிளில்தான் வருவான். என் அண்ணனின் பள்ளித்தோழன். வகுப்பில் பின் பெஞ்சுக்காரன். தமிழ் ஆசிரியர் வகுப்புக்கு வந்ததும் அவன் கொப்பியை வாங்கிப் பார்த்துவிட்டு வகுப்புக்கு வெளியே அனுப்பி விடுவார். ஆனால் அண்ணனின் தோழன் என்ற வகையில் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவான். இரவாகி விட்டால் எங்கள் வீட்டிலேயே தங்கி விடுவான். இதனால் வேலுசாமியை அம்மாவுக்கு நன்றாகவே தெரியும். அம்மா சொல்கிற வேலைகளை செய்து கொடுத்து வீட்டில் நல்ல பெயர் பெற்றிருந்தான்.

பாடசாலை காலம் முடிந்து விட்டது பாடசாலை நண்பர்களும் பிரிந்து சென்று விட்டார்கள். எப்போதாவது ஒரு தடவை சைக்கிளில் வரும் வேலுசாமி எங்களைப் பார்த்து பேசி விட்டுச் செல்வான். பின்னர் அண்ணனுக்கு வேலை கிடைத்து கொழும்புக்குச் சென்ற பின்னர் அவன் வருகை குறைந்து, நின்றும் போய் விட்டது.

எழுபதாம் ஆண்டில் 71 ஜே.வி.பி. புரட்சி தோல்வி அடைந்த பின்னர் நாட்டில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட காலம் அது. அக் காலத்தில் தொழில் ஒன்று கிடைப்பது கஷ்டம். பண முடையும் அப்படித்தான்.

ஒரு நாள் காலை, எங்கள் வீட்டுக்கு அண்மையில் குடியிருந்த வெலிங்டன் என்ற என் நண்பனுடன் எங்கள் வீட்டுக்கு வந்தான் வேலுசாமி. நானும் அம்மாவும் தான் வீட்டில் இருந்தோம். முதல் நாள் இரவு வெலிங்டன் வீட்டுக்கு வந்த வேலுசாமி காலையில் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தான். அம்மாவுடன் வாஞ்சையுடன் பேசினான். வறக்கா பொலை பேக்கரி ஒன்றில் வேலை செய்வதாகச் சொன்னான். அங்கேயே தங்கி இருப்பதாகவும் லீவு எடுத்துக் கொண்டு பழைய நண்பர்களைப் பார்க்க வந்ததாகச் சொன்னான். பின்னர் அம்மாவிடம் 400 ரூபாவை எடுத்துக் கொடுத்தான்.

இது என் சம்பளக் காசு. இதை எடுத்துக் கொண்டு திரிய முடியாது. திரும்பிச் செல்லும் போது வாங்கிக் கொள்கிறேன். அது வரை இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அம்மாவிடம் பணத்தைக் கொடுத்தான். அம்மாவும் அதை வாங்கி டிரங்கி பெட்டியில் வைத்துக் கொண்டார். பின்னர் இருவரும் திரும்பிப் போனார்கள்.

அவன் போனதும், உருப்படாதவன் என்று நாம் நினைத்த இந்த வேலுசாமியைப் பார், எவ்வளவுக்குத் திருந்தி விட்டான்... நீயும் வேலை வெட்டி இல்லாமல் இருக்கிறேயே...என்று என்னைப் பார்த்துச் சொன்னார். நானும் ஒரு மூன்று வருடங்களாக சும்மா தான் வெலிங்டனுடன் சேர்ந்து ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன்.

மறுநாள் காலை ஒன்பது மணியளவில் வெலிங்டன் மட்டும் வந்தான். ''இன்று காலை நல்ல வேலை நடந்து விட்டது தெரியுமா. அதிகாலையில் எங்கள் வீட்டுக்கு பொலிஸ் வந்தது. வேலுசாமியை அடித்து இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்!'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

எங்களுக்கு பகீரென்றது. ஜே.வி.பி.காரன் என்ற சந்தேகத்தில் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களோ என்றுதான் நினைத்தோம்.


''என்ன தவறு செய்தான்?'' என்று வெலிங்டனிடம் கேட்டேன். கேட்கும் போதே வாய் குளறி விட்டது. பொலிஸ் என்றால் அப்படி ஒரு பயம்!

''விடியற் காலையில் பொலிஸார் வந்தார்கள். கதவைத் திறந்ததும் கூட வந்த ஒருவர் தூங்கிக் கொண்டிருந்த வேலுசாமியை இவன் தான் திருடன் என்று அடையாளம் காட்டினான். அவன்தான் பேக்கரி முதலாளியாம். வேலுசாமி பேக்கரியில் உள்ள ஐம்பது பாண் தட்டிகளை (டிரே) திருடி விற்று விட்டு ஓடி விட்டானாம். பொலிசாருடன் சேர்ந்து பல இடங்களில் தேடிவிட்டு கடைசியாக இங்கே வந்திருக்கிறார்கள்.'' என்று அமைதியாகச் சொன்னான் நண்பன் வெலிங்டன்.

எங்கள் இருவருக்கும் அடிவயிறு கலங்கி விட்டது.

''பொலிசில் விசாரிப்பார்கள். பணம் எங்கே என்று கேட்பார்கள்...'' என்று அவன் இழுத்தான். ஏனெனில் 400 ரூபா பணம் இப்போது அம்மாவின் பெட்டியில் இருக்கிறது. இப்போது அவனையும் கூட்டிக் கொண்டு பணத்தை எடுக்க பொலிசார் எங்கள் வீட்டுக்கு எப்போது வேண்டுமானாலும் வரலாம் அப்படி வந்தால் ஊரே திரண்டு, ஏன் பொலிஸ் வந்தது என்று கேட்பார்கள். மானம் போய்விடும்! ஏனென்றால் நாங்கள் அவ்வளவு கௌரவமாக வாழ்ந்து வருபவர்கள்.

அம்மாவுக்கு அழுகையே வந்துவிட்டது. விஷயம் வெளியே தெரிய வந்தால் அண்ணன்மார் அம்மாவைத் திட்டித் தீர்த்து விடுவார்கள். அம்மாவை பொலிஸ் ஜீப்பில் ஏற்றி ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்வார்கள் என்பது கற்பனையும் பண்ணிப் பார்க்க முடியாத விஷயம்.



''சரி என்ன செய்யலாம் என்று பார்க்கலாம்'' என்று கூறிவிட்டு வெலிங்டன் சென்று விட்டான். பெட்டியில் உள்ள 400 ரூபா இப்போது எங்களைப் பொறுத்தவரை பணம் அல்ல. வெடிகுண்டு அம்மாவும் நானும் வயிறு கலங்கி மாறிமாறி பாத்ரூம் செல்லத் தொடங்கினோம். நாக்கும் வரண்டு விட்டது.

வெலிங்டன் ஒரு மணித்தியாலத்தில் திரும்பி வந்தான். ''உங்கள் நிலையை அம்மாவிடம் சொன்னேன். அம்மா பணத்தை வாங்கி வரும்படி சொன்னாள். நீங்கள் பாவம் என்று சொன்னாள்'' என்று சொன்ன வெலிங்டன், பணத்தை வாங்கிக் கொண்டு போனான். நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம்.

பொலிசில் வேலுசாமி பணம் வெலிங்டன் வீட்டில்தான் இருக்கிறது என்று கூறி இருக்கிறான். பொலிசார் அங்கே போயிருக்கிறார்கள்.

வெலிங்டனின் அம்மா பணத்தை இதை வேலுசாமி தன் சம்பளப் பணம் என்று சொல்லி தன்னிடம் தந்ததால் தான் வாங்கி வைத்தேன் என்று சொல்லி பொலிசாரிடம் பணத்தைக் கொடுத்திருக்கிறாள். தான் ஒரு பெண் என்பதால் பொலிஸ் ஜீப்பில் ஏற முடியாது என்று அவர் மறுக்க, பொலிசாரும் அங்கேயே வாக்கு மூலம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

அதன் பின்னர் வேலுசாமிக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. அந்தத் துணிச்சல்கார அம்மா 15 வருடங்களுக்கு முன்னர் காலமானார். வெலிங்டன் இப்போது டென்மார்க்கில் வசிக்கிறான். எனது அம்மாவும் காலமாகி விட்டார்.

வானலை எஸ்.எம்.எஸ். ஜோக் பகுதியில் 'நண்பேண்டா!' என்ற சொல் அடிக்கடி, நட்பைப் பாராட்டும் வகையில் வரும். உயிர் கொடுப்பான் தோழன் என்பதும் எனக்குத் தெரியும். இதைப் படிக்கும் போதெல்லாம் வெலிங்டன் தான் எனக்கு ஞாபகத்துக்கு வருவான். எங்களிடையிலான நட்பு இன்றும் தொடர்கிறது.

**ரூபகாந்தன், பதுளை**

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண வானவில்லை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்வதில் உங்களுக்கு சிரமம் உள்ளதா?

**வானவில் ஒழுங்காகக் கிடைப்பதில்லையா? கவலை வேண்டாம்!**
**உங்களுக்காக இதோ ஆறு மாத மற்றும் வருடச் சந்தா கட்டணங்களை அறிமுகம் செய்கிறோம்**

**தபால் மூலம் பெற வேண்டுமானால்...**

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ. 552.00 |
| 6 மாத சந்தா | ரூ. 276.00 |

இத் தொகையை காசுக் கட்டளை (Money Order) ஊடாக அல்லது நேரில் பெயர், முகவரி, தொடர்பு இலக்கம் போன்ற தகவல்களுடன் செலுத்தினால் வானவில் உங்கள் வீடு தேடி வரும்.

**காசுக் கட்டளை**

Associated NewsPapers of Ceylon Ltd என்ற பெயருக்கு எழுதப்பட வேண்டும். மாற்றும் தபாலகம் என்ற இடத்தில் கொழும்பு என்று குறிப்பிட வேண்டும்.

**எமது முகவர் ஊடாகவும் வானவில்லை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ. 30 |
| 1 வருட சந்தா | ரூ. 360.00 |
| 6 மாத சந்தா | ரூ. 180.00 |
| 3 மாத சந்தா | ரூ. 90.00 |

நீங்கள் விரும்பும் மேற்கூறிய சந்தாத் தொகையை காசுக்கட்டளை ஊடாக அல்லது நேரில் பெயர், முகவரி, தொடர்பு இலக்கம் போன்ற தகவல்களுடன் எமது நிறுவனத்துக்கு செலுத்திய பின்னர் நாம் உங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்வோம். எமது ஏஜண்ட் ஊடாக வானவில் இதழ்களை நீங்கள் சிரமமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

வானவில் கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்தைத் தவிர்க்கவே உங்களுக்காக இந்தத் திட்டம்.

எமது விற்பனை பிரிவுக்கு எழுதும் போது அல்லது காசுக் கட்டளையை அனுப்பும் போது உறையின் இடது மேல் மூலையில் வண்ண வானவில் என்று குறிப்பிட மறக்க வேண்டாம்.

**THE CIRCULATION MANAGER,**
**CIRCULATION DEPARTMENT,**
**LAKE HOUSE,**
**COLOMBO - 10**

என்ற முகவரிக்கு எழுதுங்கள். அல்லது, 011-2319760, 2429444 (விற்பனைப் பிரிவு) தொடர்பு கொண்டு தெளிவு பெறுங்கள்.
மின்னஞ்சல்: subscription@lakehouse.lk

ஆசிரியபீட முகவரி:
Vanna Vaanavil,
Vaanavil Editorial,
P.o.Box:1218
colombo
மின்னஞ்சல்: vannavaanavil@gmail.com
தொலைபேசி: 011-2429275

# பெப்ரவரி மாத பலாபலன்கள்

01-02-2012 தொடக்கம் 29-02-2012 வரை

சோதிடமாமணி நவா

## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனக் கவலைகள் நீங்கி மனநிறைவு தரும் மாதமாகும். தொழில் நிலையில் முன்னேற்றம். எதிர்பார்த்த பணவரவு வந்தடையும். எதிர்கொண்ட மனக் கஷ்டங்கள் நீங்கும். குடும்பத்தில் மனமகிழ்ச்சிக் குரிய சம்பவங்கள் நடந்தேறும். இன சன நன்மைகள் உண்டாகும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர். முதலீட்டாளர்கள் திட்டமிட்ட முதலீடுகளால் நன்மையடைவர். மேட இராசியினருக்கு மனக்குறைகள் சற்று குறைவுபடும் மாதமாகும். அதிஷ்ட திகதிகள் 03,12,21 ஆகும்.

## இடபம்

கார்த்திகை பின்முக்கால், ரோகினி, மிருக சீரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்க ளுக்கு தொல்லைகளைக் குறைக்கும் மாதமாகும். செய்தொழில் மேன்மை. தாமதித்த பணவரவு. கடன்சுமை நீங்கல். வீண் பிரயாணங்கள் குறைவடைதல், குடும்பத்தில் திட்டமிட்ட கருமங்கள் நிறைவேறல். பிள்ளைகளால் மனமகிழ்ச்சி, உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறல் முத லீட்டாளர்கள், எதிர்நோக்கிய கஷ்டங்கள் நீங்கி முன்னேற்றமடைதல் உண்டாகும். இடப இராசியி னருக்கு இடையிடை தளம்பல் நிலை, தந்து மறையும் மாதமாகும். அதிஷ்ட திகதிகள் 01,10,19 ஆகும்.

## மிதுனம்

மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர் பூசத்து முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்த வர்களுக்கு மனக்குறைகள் பெரிதாக தராது. செய்தொழில்களில் முன்னேற்றம். மறைமுக எதிர்ப்பு குறைதல் பொருள்வரவு, தூர இடப் பயணங்களால் தொல்லை, பணக்கஷ்டம் நீங்கிடும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிழவும். சுப காரியங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் நன்மை பெறுவர். வீண் கஷ்டங்கள் நீங்கும். முதலீட்டா ளர்கள் சிறந்த திட்டமிடலால் நன்மையடைவர். பாரிய முதலீடுகளில் கவனமுடன் இருப்பது நல்லது மிதுன இராசியினருக்கு வீண் மனக்கஷ்டங்கள் தராத மாதம். அதிஷ்டதிகதிகள் 03,14,23 ஆகும்.

## கடகம்

புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சிறிது மனக் கஷ்டங்கள் தந்துமறைந்திடும். செய்தொழில்க ளில் மந்தநிலை, எதிர்பாராத பணக்கஷ்டம், கடன்படும்நிலை, வார இறுதியில் சகல விடயங் களிலும் முன்னேற்றம். குடும்பத்தில் மனக் குழப் பங்கள் தோன்றி மறையும். வீண்வாக்கு வாதங்களை தவிர்த்து நடப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் பொறுமையுடன் காரியங்களை ஆற்றிடல் நன்மை தரும். முதலீட்டாளர்கள் ஓரளவு நன்மைகளைப் பெறுவர் கர்க்கடக இராசியின ருக்கு கஷ்டங்கள் பெரிதாக பாதிக்காத மாதமா கும். அதிஷ்டதிகதிகள் 02, 07, 25 ஆகும்.

## சிங்கம்

மகம், பூரம் உத்தரத்து முதற்கால் நட்சத்தி ரங்களில் பிறந்தவர்களுக்கு சிந்தனையை தூண்டி செயற்படவைக்கும். செய் தொழில்களில் திட்ட மிடல் சிறப்பளிக்கும். பணவரவுகள், சீராக அமை யாது தாமதித்து கிடைத்திடும். காரியங்களில், தாமதம் உண்டாகும். குடும்பத்தில் தடைப்பட்டி ருந்த காரியங்கள் நிறைவேறும். மாணவர்கள் மனக்குழப்பங்களிலிருந்து விடுபடுவர். முதலீட்டா ளர்கள் கூடிய முதலீடுகளில் அவதானம் தேவை. சிங்க, இராசியினருக்கு சிறிது தொல்லைகள் தந்து மறைந்திடும் மாதம். அதிஷ்ட திகதிகள் 06,15,24.

## கன்னி

உத்தரத்துப்பின்முக்கால் அத்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சிறிது கவலைகளுடன் நன்மைகளையும் தரும். செய்தொழில்களில், உயர்ச்சியும் காட்டும். எதிர் பார்த்த பணவரவு தடைகளின் பின்னர் கிடைக்கும். காரியங்கள் யாவும் சிரமத்தின் பின் நிறைவேறும். குடும்பத்தின் மனக்குழப்பங்கள் விலகிடும். எதிர் பார்த்த சில கருமங்கள் மாத நடுப்பகுதியில நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், சிரமங்களின் மத்தியில் காரியங்கள் நிறைவேறி டும். முதலீட்டாளர்கள் பாரிய முதலீடுகளை தவிர்த்து அளவுடன் வைத்துக் கொள்வது நன்மை தரும். கன்னி இராசியினரை பெரிதாக கஷ்டத்தில் ஆழ்த் திடாத மாதமாகும். அதிஷ்ட திகதிகள் 05,14,23

## துலாம்

சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு துயர் நீங்கிடும் மாதம். செய்தொழில்களில் முன்னேற்றம். வீண் கஷ்டங்கள் குறைவடைதல், பணவருவாய் சீராக அமையும் கடன் சுமைகள் நீங்கும். குடும்பத்தில் எதிர்பார்ப்புக்கள் நிறைவே றும். திட்டமிட்ட சுப கருமங்கள் நிறைவேறும். திட்டமிட்ட சுபகருமங்கள் நிறைவேறி மனமகிழ்ச்சி தரும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக் குழப்பமின்றி கருமமாற்றுவர் முதலீட்டாளர்கள் முதலீடுகளால் சிறிது குழப்பமடைந்து தெளிவடை வர். துலா இராசியினருக்கு மனத்துயர் அகற்றிடும் மாதம். அதிஷ்ட திகதிகள் 09, 18, 27

## விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு. பெரிதாக துயர் தராது. செய்தொழில்கள் சீராக அமையும். வருவாய்கள் சுமாராக அமையும். நீண்டநாள் பண வருவாய் ஒன்று கிடைக்கும். குடும்பத்தில் மனக்கஷ்டம் விலகும். எதிர்பார்த்த சில விடயங் களில் மாத நடுப்பகுதியில் முன்னேற்றம் கிடைக்கும். உத்தியோகத்தர்கள். மாணவர்கள் சிறப்பாக கருமம் ஆற்றிட வாய்ப்புண்டாகும். முதலீட்டாளர்கள் முதலீடுகளால சிறிது கஷ்டமடைவர். விருச்சிக இராசியினருக்கு மனக்குழப்பம் தராத மாதம். அதிஷ்ட திகதிகள் 4, 22, 28 ஆகும்.

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட் சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தளர்வு தந்திடாத மாதம். செய்தொழில்களில் நன்மை, பணவரவு சீராக அமையாது புதிய முயற்சிகளில் முன்னேற் றம் பணவரவு சீராகுதல். எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் குடும்பத்தில் வீண் மனஸ்தாபங்கள் விலகும். சுபகாரியங்கள் நிறைவேறிடும். உத்தியோ கஸ்தர்கள். மாணவர்கள் மனக்குழப்பமடைந்து தெளிவு பெறுவர். இவர்கள் எதையும் திட்டமிட் டுச் செய்தால் நன்மையடைவர். முதலீட்டா ளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்ப்பது நல்லது. தனு இராசியினருக்கு சிறிது நன்மை தரும் மாதம். அதிஷ்ட திகதிகள் 01, 10, 19 ஆகும்.

## மகரம்

உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்த வர்களுக்கு மன ஆறுதல் தந்திடும். செய்தொழில்கள் சீராக இருக்கும். புதிய முயற்சிகள் தொடங்கல் நன்மை தரும். பணவரவுகள் திருப்தி தரும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. குடும்பத்தில் மனமகிழ்ச்சி நிலவும். வீண் செல வுகள் குறையும். உத்தியோகஸ்தர்கள், மாண வர்கள் கருமங்களில் மறைமுக எதிர்ப்பு குறையும். முதலீட்டாளர்கள். முதலீடுகளால் கஷ்டமுற்று பின்னர் நிவர்த்தி பெறுவர். மகர இராசியி னருக்கு மனநிறைவு தரும்மாதம். அதிஷ்ட திகதி 05, 23 ஆகும்.

## கும்பம்

அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சாதகமாக அமைந்திடும். செய் தொழில்கள் சீராக அமையும். பணவரவுகள் கிடைத்திடும். புதியமுயற்சிகள் தாமதமாகும். குடும்பத்தில் வீண் மனக் கசப்புக்கள் மறையும். உத்தியோ கஸ்தர்கள், மாணவர்கள் கடமைகளில் மந்தமும், தாமதமும் உண்டாகும். பொறுமையுடன் நடந்து கொள்வது நல்லது. முதலீட்டாளர்கள், முதலீடுக ளில் அவதானம் தேவை. பாரிய முதலீடுகள் தொல்லை தரும். கும்ப இராசியினருக்கு குழப்பம் தராத மாதம். அதிஷ்ட திகதிகள் 04,22,26.

## மீனம்

பூரட்டாதி நாலாங்கால் உத்திரட்டாதி ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனக் குழப்பம் அதிகம் தராது. செய்தொழில்களில சிறிது தடைகள், பணவருவாய் சீராக அமையாது. கருமங்களில் சிறிது சிரமங்கள் தோன்றும். குடும்பத்தில் சுப கருமங்கள் தடைக ளின் பின் நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக்கஷ்டங்களிலிருந்து விடுபடுவர். முதலீட்டாளர்கள், முதலீடுகளால் மனக்குழப்பங்கள் அடைந்து தெளிவுறுவர். மீன இராசியினருக்கு பெரிதாக துன்பம் தரக்கூடாத மாதமாக அமையும். அதிஷ்ட திகதிகள் 5, 10, 14 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் பருமனை நிரந்தரமாகக் குறைக்க ஒரு அறுவை சிகிச்சை



உடல் பருமனா? அது அமெரிக்கர்களின் பிரச்சினை என்று சொல்லிக் கொண்டிருந்த காலம் எப்போதோ மலையேறி விட்டது. உடல் பருமன் என்பது இன்று ஒரு வியாதியாக உருவெடுத்து உங்கள் வீட்டுக் கதவையும் தட்டிக் கொண்டிருக்கிறது. சமூக, பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியும், மாற்றங்களும் பல நன்மைகளைக் கொண்டு வந்திருக்கும் அதே சமயம் பருமன் பிரச்சினை, கொலஸ்ட்ரால், மாரடைப்பு, சர்க்கரை வியாதி, மூட்டுவலி போன்ற வியாதிகளையும் கூடவே போனசாகக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த வியாதிகள் அதிகரித்துச் செல்லும் அதே சமயம் அவற்றை குணமாக்கும் வழிமுறைகளும் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்படுகின்றன. இதன் மூலம் பெரும்பணம் சம்பாதிக்கவும் முடிகிறது. ஆனால் இந்நோய்களை நிரந்தரமாகக் குணமாக்கத் தான் வழியில்லாமல் இருக்கிறது. பலர் போலி வைத்தியர்களின் பின்னால் கானல் நீர் மான் போல வைத்தியர்களின் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

உடல் பருமன் பிரச்சினையும் இப்படிப்பட்டது தான். கிறீம் ஒன்றை பூசினால் அனைத்தையும் கரையும் என்றும் டின்னில் வரும் மாவைக் கரைத்துக் குடித்தால் உடல் மெலியும் என்றும் விளம்பரங்கள் வருகின்றன. சிலர், உடற் பயிற்சி மட்டுமே மருந்து என்கிறார்கள். உணவைக் குறைத்தால் எடை குறையும் என்கிறார்கள்.

படவுலகில் கொடிகட்டிப் பறந்த நடிகை ஸ்ரீப்ரியா தன் உடல் பருமனைக் குறைக்க, உடலைப் பட்டினி போட்டார். இறுதியில் பருமன் குறைந்தது. ஆனால் ஆளே சுத்தமாக மாறிப் போனார். முகம் வற்றி, களைத்துப் போன உடலுடன் தோற்றம் அளிக்கவே, அவரது சினிமா வாழ்க்கை அஸ்தமன-மானது. கடுமையான பட்டினி வைத்தியம் எதிர்மாறான விளைவு-களைத் தரும் என்பதற்கு ஸ்ரீப்ரியா ஒரு நல்ல உதாரணம்.


சென்னையில் உடல்பருமன் பிரச்சினைக்கு சிகிச்சையளிப்பதற்காகவே ஒரு மருத்துவமனை இயங்கி வருகிறது. கிரிஸ்வரி ஹொஸ்பிட்டல் என்ற பெயரில் சென்னை ஆழ்வார் பேட்டை கே.பி.தாசன் வீதியில் அமைந்திருக்கும் இந்த மருத்துவமனை ஐம்பது படுக்கைகளுடன் நவீன மருத்துவ தொழில்நுட்பங்களுடன் இயங்கி வருகிறது. 2000ம் ஆண்டு மருத்துவர் சரவணனும் அவர் மனைவி மருத்துவர் மங்கையும் இந்த மருத்துவமனையை ஆரம்பித்தார்கள்.

சமீபத்தில் கொழும்பு வந்திருந்த டாக்டர் சரவணனை சந்தித்து பேசி-னோம். உடல் பருமனைக் குறைக்க இத்தனை வழிகள் இருக்கின்றனவே என்று பட்டியல் போட்டோம். அவர், அவை ஒரு போதும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கப் போவதில்லை. 'பின் ஹோல் சர்ஜரி' முறையின் கீழ் நாங்கள் செய்யும் சிகிச்சை மட்டுமே உடல் பருமனை நிரந்தரமாகக் குறைக்கும் என்கிறார்.

''முதலில் நாங்கள் ஒருவருடைய உயரம், வயது, உடல் பருமன் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து, அவர் எவ்வளவு பருமன் உடையவராக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறோம். BMI என இது அழைக்கப்படுகிறது. ஒருவருடைய BMI, 28 என்றும் 30 என்றுமிருந்தால் அது சரியான பருமன். 31 முதல் 35 வரை இருந்தால் உடல்பருமன் அதிகம் என்று அர்த்தம். 36 - 40 என்றிருக்குமானால் அதிக பருமன் கொண்டவர். 40 ஐத் தாண்டினால் மிக அதிகமான எடை கொண்டவர் என்று அர்த்தம். 40ஐத் தாண்டியவர்கள் தமது உடல் பருமனை கட்டாயம் குறைத்தாக வேண்டும்.'' என்கிறார் டாக்டர் சரவணன்.

இதற்கு நீங்கள் மேற்கொள்ளும் சிகிச்சை என்ன?

பசி உணர்வு சாப்பிடத் தூண்டுகிறது. வயிறு நிறையும் வரை சாப்பிடுகின்றோம். இதனால் உடல் பருமன் கொள்கிறது. பட்டினி கிடப்பதாலோ உடற்பயிற்சி செய்வதாலோ, மாவு பொருட்களைக் கரைத்துக் குடிப்பதாலோ உடல் பருமன் குறையலாம். ஆனால் இதைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருக்க வேண்டும். மாறிக்கொண்டிருக்கும் மனித வாழ்வில் இது சாத்தியம் இல்லை, ஏனெனில் ஏதோ ஒரு காரணத்துக்காக நிறுத்தி விடும் போது மீண்டும் உடல் பருமனாகி விடுகிறது.



மருத்துவர் சரவணன்

''ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர்கள், எடுப்பான உடற்கட்டு கொண்ட நடிகை, நடிகையர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் உடல்வாகு இதற்கு சான்று. அடையாளமே தெரியாத வகையில் மாறிப்போய் விடுகிறார்கள். எனவே, நிரந்தரத் தீர்வு, இரைப்பையின் அளவைக் குறைப்பதுதான். பின்துளை சத்திர சிகிச்சை(வயிற்றைக் கீறி பிளக்காமல்) மூலம் இரைப்பையின் அளவை குறைக்கிறோம். சிறு குடலின் சில பகுதிகளை நீக்குவதன் மூலம் சில சத்துக்களை உடல் உறிஞ்சுவதைத் தடுக்கிறோம். இச்சிகிச்சையின் பின்னர் அவர் தனது உடலுக்கு ஏற்றவாறு குறைவாகவே சாப்பிடுவார். தேவையற்ற கலோரிகளை உடல் உறிஞ்சாது. இதனால் அவரது உடல் பருமனை இறக்கும். அவர் எவ்வளவு நிறை இருக்க வேண்டுமோ அந்த நிறையைத் தொடர்ந்து பேணி வருவார். உடல் இளைத்தாலும் உடல் பொலிவு மாறாது. இதே சமயம் அவர் வேறு பல நன்மைகளையும் அடைகிறார்'' என்கிறார் டாக்டர் சரவணன்.

இந்த சிகிச்சை செய்து கொண்ட ஒருவர் 13 மாதங்களில் 72 முதல் 80 சதவீதமான மேலதிக எடையை இழப்பார். நாற்பது சதவீதமான உடல் பருமன் குறையும். இப்படி எடை குறைவதன் மூலம் அவருக்கு மீண்டும் பளிச்சென்ற தோற்றம் கிடைக்கும். சுவாசிப்பதில் பிரச்சினை ஏற்படாது. குறட்டை விட்டோடும். இதனால் தன்னம்பிக்கையும் செயற்பாடுகளிலும் சுறுசுறுப்பும் ஏற்படும். தன்னால் செய்ய முடியாது என்று கருதிய பல வேலை-களைச் செய்யக் கூடியதாக இருக்கும்.

இவை சமூக ரீதியான பலன்கள். மருத்துவ ரீதியான பலன்களும் உள்ளன. அவை முக்கியமானவை.


உடல் பருமனைக் குறைப்பதால், சர்க்கரை வியாதி கட்டுக்குள் வரும். பாரிசவாத ஆபத்து குறையும். மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு மிகவும் குறையும். கொலஸ்ட்ரோல் பிரச்சினை ஏற்படாது. மூட்டு வலி பிரச்சினை ஏற்படாது. அல்லது குறையும்.

என்று இந்த சிகிச்சையில் கிடைக்கும் பலன்களைப் பட்டியலிடுகிறார் டாக்டர் சரவணன்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையான ஒரு பருமன் இருக்கிறது. நமது சோம்பேறித்தனம், வேலைப்பளு, உடலைக் கவனிக்க நேரமின்மை, உணவில் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்க வேண்டும் என்று தோன்றாமை, நாகரிக மற்றும் அவசர வாழ்வு ஏற்படுத்தும் புதிய சூழல் எனப்பல காரணங்களினால் இன்று பலரும் உடல் பருமன் பிரச்சினைக்கு ஆளாகியிருக்கிறார்கள். பெண்கள் இப்பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களது வாழ்க்கைமுறை, உடற்பயிற்சி செய்வதற்கான சூழல் இன்மை மற்றும் கலாசார காரணங்களினாலும் உடல்பருத்து விடுகிறது.

ஆனால் இந்தப் பிரச்சினைக்கு எங்களிடம் நிரந்தரத் தீர்வு உள்ளது என்கிறார் டாக்டர் சரவணன். www.girishwarihospital.com என்ற இணையதளத்தில் மேல் விபரங்களைத் தேடலாம்.

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 15



### இடமிருந்து வலம்

1. ஐந்து பாவங்கள் (8)
6. குளிருக்கு இதம் (4)
8. இளைஞன் (3)
9. ரோம் எரியும் போது நீரோ வாசித்தது (3)
10. கவலை (3)
13. அவலட்சண தோற்றம் (4)
15. அனைத்து...... என வீடு (3)
16. ஆரோக்கியத்துக்கு நல்லது (4)
17. நதியை கடக்க உதவும் (3)
18. திரைப்படங்களை விரும்பிப் பார்ப்பவன் (4)
19. நிகழ்வு (5)
22. மனைவி
23. செலவு செய்ய விரும்பாதவன் (4)
25. அழகில் சிறந்தவள் (2)
27. பாசம் (3)
28. நட்புறவு (5)
30. பிச்சை (4)
31. பூமி

### மேலிருந்து கீழ்


1. அடிக்கடி நிறம் மாறும் (5)
2. கிரிக்கெட்டில் நாறு (3)
3. மூக்கனிகளில் ஒன்று (5)
4. ......பொம்மை (2)
5. உடல் எடை கூடியவன் (4)
6. இது இருந்தால் எந்து சென்றாலும் சிறப்பு (3)
7. புறங்களை மிதித்து (3)
9. யாகம் செய்தால் கிடைக்கும் (6)
11. திருமணம் (5)
12. உடலுக்கு சக்தி தரும் (3)
14. காவல் காப்பவன் (4)
17. ஒரு பகுதி (3)
19. முதல்வரின் தாய் (4)
20. இரவுக்கு எதிர் (3)
21. பழி (4)
24. சோறு (3)
26. சமாதான பேச்சு இங்கிக நடந்தது (3)
29. இது பிடித்தால், சேசில போகாது (2)


சரியான விடைகளை எழுதி 25. 03. 2012க்கு முன்

குறுக்கெழுத்துப் போட்டி - 15
வண்ண வானவில்
த.பெ. இலக்கம் 1218
கொழும்பு

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல 14க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 32ஆம் பக்கத்தில்....**



மச்சர் : லெப் லெட்டருக்கும், லீவ் லெட்டருக்கும் என்ன வித்தியாசம்..?

மாணவன் : லீவ் லெட்டரை உங்க கையில கொடுக்கணும்.. லவ் லெட்டரை உங்க பொண்ணு கையில கொடுக்கணும்.

- வசீம் அக்ரம், மூதூர் 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை மதுரா டிரவல்ஸ் இந்தியாவின் முன்னணி சுற்றுலா நிறுவனங்களில் ஒன்று. இதன் அதிபர் கலைமாமணி வீ.கே.டி. பாலன், தமிழக சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை இங்கே உங்களுடன் தொடர்ந்து பகிர்ந்து கொள்கிறார்.



ரயில் பாலம்



கடலில் இருந்து பார்க்கும் போது...

# இராமநாதபுரம்: கோவில்களின் மாவட்டம்

தென்னிந்திய நகரங்களில் தொன்மை வாய்ந்த ஒன்றாக இராமநாதபுரம் விளங்குகிறது. 15ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டியர்களினாலும் ஆங்கிலேயர் வசம் வீழ்ச்சி அடைவதற்கு முன்னர் சேதுபதி அரச பரம்பரையினராலும் ஆளப்பட்ட பிரதேசமே இராமநாதபுரம். சேரநாடு என்றும், சேதுநாடு என்றும் அழைக்கப்பட்ட இப்பிரதேசம் பிற்காலத்திலேயே இராமநாபுரம் என அழைக்கப்படலாயிற்று. ஆங்கிலேயர் இதை ராம்நாட் என அழைத்தனர். சுதந்திரத்தின் பின்னர் இராமநாதபுரம் என உத்தியோகபூர்வமாக அழைக்கப்படுகிறது.

4,232 சதுர கீ.மீ பரப்பளவு கொண்ட இராமநாதபுரம், 2001 கணக்கெடுப்பின்படி 11,87,604 பேர் வசிக்கும் பிரதேசமாகும். இராஜேந்திரன் சோழன் கி.பி.1063இல் இராமநாதபுரத்தைக் கைப்பற்றி குறுகிய காலம் தனக்குக் கீழ் வைத்திருந்தான். பின்னர் மீண்டும் பாண்டியர்வசமானது. கி.பி.1520 இல் விஜயநகர நாயக்க மன்னர்கள் இராமநாதபுரத்தைக் கைப்பற்றினர். 200 ஆண்டுகள் தமக்குக் கீழ் வைத்திருந்ததை நாயக்கரின் பின்னர், சேதுபதி மன்னர்கள் தம் வசமாக்கி ஆட்சி பீடமேறினர். சேது என்பது இராமர் பாலத்தைக் குறிக்கிறது.

இராமநாதபுரம் என்பதை இராமரின் பூமி என்று பொருள் கொள்ளலாம். ராமேஸ்வரத்தில் சிவலிங்க பூஜை செய்ய இராமர் விரும்பியதாகவும் லிங்கம் ஒன்றைக் கொண்டுவரும்படி அநுமனுக்கு ஆணையிட்டதாகவும் ஆனால் அநுமன் வரத் தாமதமானதால் சீதை மண்ணால் ஒரு லிங்கத்தை உருவாக்கி வழிபட்டதாகவும் நம்பப்படுகிறது. அந்த லிங்கமே இராமநாத சுவாமி என்றும் பின்னர் அநுமனால் கொண்டுவரப்பட்ட லிங்கத்தை இராமர் அதன் பக்கத்திலேயே வைத்து பிரதிஷ்டை செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இக் கோவில் இவ்வாறே தோற்றம் பெற்றதாகச் சொல்கிறார்கள்.

இக்கோவில், தீர்த்தங்கள் நிறைந்த பிரமாண்டமான கோவில். நிறைய வட இந்தியர்கள் இக்கோவிலுக்கு வருகை தருகிறார்கள். இந்தியாவின் தென்கோடியில் அமைந்திருக்கும் பிரதான இராமர் கோவில் என்பதால் வைஷ்ணவர்கள் விரும்பி வரும் கோவில் இது.

இக்கோவிலின் மூன்றாவது பிரகாரம் உலகிலேயே மிக நீளமான பிரகாரமாகும். இக்கோவிலின் சுற்று மதில்களின் நீளமே இக்கோவிலின் பிரமாண்டத்தைச் சொல்லும். கிழக்கு மேற்காக 865 அடி நீளமும், தெற்கு 657அடி நீளமும் கொண்டது இதன் சுற்றுச் சுவர். கிழக்கிலும் மேற்கிலும் உயர்ந்த கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாயக்கர் கால சிற்ப வேலைப்பாடுகளும், ஓவியங்களும், வர்ண கூரை வேலைப்பாடுகளும் உங்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்தும்.

தென் மாவட்டங்கள் பண்டைய பெருங் கோவில்களுக்கு பெயர்போனவை, பண்டைய தமிழகத்தின் கீர்த்தியைப் பார்க்கவும், உணரவும், கற்கவும் விரும்புவோர் சென்னைக்கு அல்ல, திருச்சிக்கு. அல்லது தூத்துக்குடிக்கே செல்ல வேண்டும். இராஜ ராஜ சோழன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுப்பிய தஞ்சை பெரிய கோவில், ராமேஸ்வரம் இராம நாத சுவாமி கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருச்செந்தூர், நாயக்கர் மஹால் உட்பட மன்னர் காலத்து பெருங்கோவில் களையும் கோட்டைகள், பழைய கட்டடங்களையும் பார்த்தாலேயே, தமிழகத்தின் பண்டைய கீர்த்தி புரிந்து விடும். தமிழக சுற்றுலாவின் பாதி நோக்கம் நிறைவு பெற்றுவிடும். செலவிட்ட பணத்தை விட அதிக பலன் பெற்று விட்டதற்கான திருப்தியும் சுற்றுலா வந்தவர்களுக்கு ஏற்பட்டு விடும். எனவே தமிழகத்தை தரிசிக்க விரும்புவோர் திருச்சி மற்றும் தூத்துக்குடி சென்று தமது சுற்றுலாவை ஆரம்பிப்பதே சரியானதாக இருக்கும்.

நீங்கள் இராமநாபுரத்தில் தரிசிக்க வேண்டிய மற்றொரு இடம் தான் தனுஷ்கோடி. 1964 வரை இது ஒரு பிரதான துறைமுகப் பட்டினம். இங்கிருந்துதான் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு பல்லாயிரக் கணக்கில் வந்தனர். இலங்கைக்கான பிரதான ஏற்றுமதி துறை முகம். இந்தத் தனுஷ்கோடி இன்று ஒரு மணல்மேடு. 1964ம் ஆண்டு வீசிய கடும் புயல், தனுஷ்கோடியை முற்றாக அழித்துவிட்டது. ஒரு நகரம் இருந்ததற்கான எச்சங்களைத்தான் இன்று பார்க்க முடிகிறது. இன்று இது மனிதர்வாழத் தகுதியற்ற இடம். ஒரு அமானுஷ்ய சூழலை இங்கே நீங்கள் உணரலாம். கட்டாயம் பார்க்க வேண்டிய இடம்.



அழிந்த தனுஷ்கோடி



இராமநாதசுவாமி ஆலய பிரகாரம்

இராமநாபுரத்தில் இருந்து 15 கி.மீ தொலைவில் உள்ள தனுஷ் கோடிக்கு நீங்கள் பகல் பொழுதில் ஜீப் அல்லது இதற்கென உள்ள வான்களில் சென்று வரலாம். மாலையானதும் திரும்பி விட வேண்டும். ஏனெனில் இது ஆள்நடமாட்டமற்ற பகுதி. சில மீனவ குடும்பங்கள் மட்டுமே வசிக்கின்றன. முக்கடல் சங்கமிக்கும் தனுஷ்கோடி கடலில் பலர் அஸ்தி கரைந்து பூஜைகள் செய்கின்றனர்.

முஸ்லிம் மக்களுக்கு புனிதமான ஏர்வாடி தர்கா இராமநாபுரத்தில் அமைந்துள்ளது. பேய், ஆவி பிடித்தவர்கள், புத்தி சுவாதீனமற்றவர்கள் மற்றும் நோயாளர்கள் இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இங்கே வருகிறார்கள். முஸ்லிம் அல்லாதவர்களும் சுகம்பெற இங்கே வருகிறார்கள். சுகம் பெறுகிறார்கள்.

அரேபியாவில் இருந்து 800 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்த மதப்பெரியார் இப்ராஹிம் சைய்யத் அலியா சுல்தானின் அடக்க ஸ்தலம் இங்கே அமைந்துள்ளது. இதையொட்டியே ஏர்வாடி தர்கா அமைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் பேரருள் இவர் மூலம் வெளிப்படுவதாக முஸ்லிம்கள் நம்புகிறார்கள். இங்கே சிங்குனவதா மாதத்தின் முதல் நாள் தொடங்கி பத்தாவது நாள்வரை விழா கொண்டாடப்படுகிது. மிகச் சிறப்பாக நடைபெறும் இவ்விழாவில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு வழங்கப்படும் நெய்சோற்றை உண்டு நிறை பெறுகின்றனர். இது அனைவரும் தரிசிக்க வேண்டிய இடம்.

இதை தவிர, 22 கி.மீ நீளம் கொண்ட, இராமேஸ்வரத்தையும் இராமநாதபுரத்தையும் இணைக்கும் கடல்பாலம் உங்களுக்கு ஒரு அருமை யான அனுபவமாக அமையும். இராமநாத சுவாமி கோவிலில் இருந்து 10மீ. தூரத்தில் அமைந்துள்ள அக்கினி தீர்த்தம் முக்கிமானது. இங்கே பல புண்ணிய தீர்த்தங்கள் அமைந்துள்ளன.

கத்தோலிக்க மதகுருவான புனித ஜோன்டிபிரிட்டோ உயிர்தியாகம் செய்த ஓரியூர் ஒரு புனிதத்தலம். இராமர் பாதம் அமைந்துள்ள காந்தமதன பர்வதம், கடல்மீன் கண்காட்சிச் சாலை, காஞ்சிபுரங்குளம் மற்றும் சித்திரக்குடி பறவைகள் சரணாலயம், பவளப் பாறைகளும் மீன்வளமும் நிறைந்த குருசடை தீவு(மண்டபத்தில் இருந்து 4 கீமீ. தொலைவு), மிதக்கும் பாறை, சேதுக்கரை, ஜடாயு தீர்த்தம், பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவில், பத்ரகாளியம்மன் கோவில், நவபாஷாணம் என அழைக்கப்படும் தேவிபட்டினம், உப்பூர் (85கி.மீ தொலைவு) என்பன இராமநாதபுரத்தின் சிறப்புகள். இங்கிருந்து நீங்கள்' குற்றாலம், தூத்துக்குடி, திருச்செந்தூர், பல புகழ் பெற்ற தர்க்காக்கள், கட்ட பொம்மனின் பாஞ்சாலங் குறிச்சி எனப் பல இடங்களுக்கு சென்று வரலாம். இராமநாதபுரம் ஒரு மைய இடம்.



பாம்பன் பாலம்

இலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் அனைத்துத் தேவைகளுக்கும் சென்னையில் சேவையாற்றும் நிறுவனம்,
மதுரா டிராவல் சர்வீஸ் (பி) லிட். Since 1986
25-3, காந்தி இர்வின் சாலை (கென்னத் லேன்), எழும்பூர் இரயில் நிலையம் எதிரில், எழும்பூர், சென்னை - 600 008
Phone : + 91 44 2819 2002 | Cell : + 91 98416 91234 | Fax : + 91 44 28191813 | email : india@maduratravel.com | web : www.maduratravel.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேரளத்தின் புது வரவான இனியா 'அன்னக்கிளியும் கொடிவீரனும்' படத்தில் மங்காத்தாவாக அமீருடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறார்.

படப்பிடிப்பில் பாரதிராஜாவின் ஒவ்வொரு அசைவையும் நுட்பமாக தனது காந்த விழிகளால் திருடிக்கொண்டிருப்பவரைப் பார்த்தால் நிச்சயம் இனியாவுக்கும் தமிழ் சினிமாவில் ஒரு இடம் இருக்கும் என்றே தோன்றுகிறது.

சமீபத்தில் வெளியாகியிருக்கும் 'மௌன குரு' வெற்றிப் பெற்றிருப்பதால் இனியா.... ரொம்ப ஸ்வீட்டாகவே தன்னை உணர்கிறார்.

பாரதிராஜாவின் நடிப்புப் பயிற்சி பட்டறையில் தன்னைப் பட்டைத் தீட்டிக்கொண்டிருக்கும் இந்தப் பொன்னு தற்போது அஞ்சல் பி.பி.ஏ படித்துக் கொண்டிருக்கிறது.

மௌனகுரு இயக்குநர் சற்குணம் படத்தின் கதை சொல்வதற்கு முன்பே, ''இந்தப் படம் வழக்கமான கமர்ஷியல் படம் கிடையாது. இது ∴பீரியாடிக்கல் பிலிம். இதில் அதிகமான மேக் அப், பல்வேறு விதமான ஆடைகளை எல்லாம் இருக்காது. பெரும்பாலும் உங்க முகத்தின் கலரை கூடுமானவரை மாற்றிதான் படம் பிடிக்கப் போறேன். தலையைக் கூட அவசியம் இருந்தால்தான் நீங்க சீவிக்க வேண்டியிருக்கும்...'' என்று சொன்னார். முன்கூட்டியே படம் எந்தமாதிரி இருக்கும் என்று தெரிந்ததால் எனக்கு இந்தப் படத்தில் நடிப்பது சந்தோசமாக இருந்தது. என்றும் சொல்லும் இனியா தான் இந்தப் படத்தில் மதி என்றப் பாத்திரத்தில் ரொம்பவும் ரிஸ்க் எடுத்து நடித்திருக்கிறாராம்.



''எல்லாமே சற்குணம் ஸார் சொன்னதுதான். அந்தப் பாத்திரத்தோட நடை, உடை, பாவணை, உடல்மொழி எல்லாமே அவரோட கிரியேஷனால தான் வந்தது. அந்தப் பாத்திரம் பற்றி அவர் சொன்ன பிறகு மேல் தகவல்களுக்காக பழைய பாரதிராஜா, பாக்யராஜ் ஸார் படங்களில் நடித்த பெண் பாத்திரங்களுடைய உடல் மொழியும், வசன உச்சரிப்பும் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்தேன். அதிலிருந்து எனக்கான ஒரு விஷயத்தை எடுத்து கிட்டேன். கூடுமானவரை அந்தப் பாத்திரங்களின் பிரதிபலிப்பு என்னுடைய உடல்மொழியில் வெளிவராமல் கவனமாக பார்த்துகிட்டேன். சந்தேகம் வரும் போது அந்தப் பாத்திரம் பற்றி இயக்குநருக்கிட்டேயும் கேட்பேன். பொறுமையா அவரும் சொல்லிக்கொடுத்தார். அதனால்தான் அந்தப் பாத்திரம் சிறப்பா வந்திருக்குன்னு நினைக்கிறேன். மற்றபடி அந்தப் பாத்திரத்தோட எல்லாம் கிரெடிட்டும் இயக்குநருக்குதான் போய்ச்

# ஸ்வீட் இனியா

சேரணும்'' என்று படத்தின் இயக்குனரை வஞ்சனை இல்லாமல் புகழ்கிறார் இனியா. தான் நான்காம் வகுப்பு படிக்கும் போது கேரளாவில மலையாள செனல் ஒன்றில் நாடகத்தில் நடித்திருப்பதாக சொல்கிறார். 'அந்த நாடகத்தின் பெயர் ஊட்டி லேகியா' கேரளாவின் நிறை மேடை நாடகங்களில் நடித்திருக்கிறேன். அத்துடன் கேரள அரசு வருடந்தோறும் நடத்தும் நாடகங்களில் பங்கேற்ற அனுபவமும் இவருக்கு உண்டாம்.

இனியாவின் வருகையின் போது, அனன்யா, அமலாபால், ஓவியா என்று நிறைய மலையாள நடிகைகள் களத்தில் இருக்கிறார்கள் அவர்களோடுதான் இனியாவிற்கு போட்டி. ''வாகை சூட வா' வெளியானபோது தமிழ் சினிமா ரசிகர்கள் என்னை வரவேற்று, எனக்கான ஒரு இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதுவே எனக்குப் பெரிய இடம்தான். அதேபோல அமலாவுக்கும் மற்றவங்களுக்கும் அவரவர்க்கான இடம்னு ஒண்ணு இருக்கு. அதை அவங்க சரியாவே செய்றாங்க... இதில் போட்டி போடவோ, பொறாமை படவோ எதுவுமேயில்லை. நாங்க எல்லோருமே ஒரு கூட்டுப் பறவைகள் தான். திசைகள்தான் வேறயே தவிர, கூடு எப்போதும் எங்களுக்கு ஒன்றுதான்.''

தனது ரோல் மொடலாக பானுப்ரியா, சாரதா, அம்பிகா, ராதா, ரேவதி, ஆகியோரை குறிப்பிடும் இனியா, கதைக்கு அவசியம் என்றால் கவர்ச்சியாகவும் நடிக்க தயாராக இருக்கிறாராம்.

அதெல்லாம் சரி இனியா, பாரதிராஜாவிடம் இதுவரை அத்தனை இறை வாங்கியிருக்கிறீர்கள்?

## நட்புக்கு மரியாதை



அனுஷ்கா 'சகுனி' படத்தில் கார்த்தியுடன் ஒரே ஒரு காட்சியில் மட்டும் நடிக்கிறார். இதற்கு அவர் சம்பளம் எதுவும் வாங்கிக் கொள்ளவில்லை. கேட்டால், 'நட்புக்கு மரியாதை...' என்கிறார்.

பிழைக்கத் தெரிந்த பெண்!




## தல புராணம்



சிம்பு, ஜெய், ஜெயம் ரவி வரிசையில், தற்போது 'மௌனகுரு' நாயகன் அருள்நிதியும் 'தல' புராணம் பாடி வருகிறார். 'என்ன திடீர்னு?' கேட்டால், 'எனக்கு எப்போதுமே அஜித் பிடித்த நடிகர்தான். யாரும் கேட்கல... நானும் வெளிப்படுத்தல... கேட்கிறப்போ உண்மையைச் சொல்லித்தானே ஆகவேண்டும்' என்று சமளிக்கிறார்.

'வேலூர் மாவட்டம்', 'வித்தகன்' படங்களை நம்பியிருந்த பூர்ணா, இரண்டும் கைக் கொடுக்காததால், தற்போது சின்ன பட்ஜெட் படமான 'மெய்யழகி' படத்தில் நடித்து வருகிறார். சின்ன அசின் எனப் பாராட்டப்பட்ட நடிகைக்கு இப்படத்தில் சம்பளம் மிகக் குறைவாம். ஆனால், கதாபாத்திரம் பேசப்படும் என்று சொல்லி மனதைத் தேற்றி வருகிறார்.

மெய்யழகி பொய்யழகி ஆகாமல் இருந்தால் சரி.

## ஹிட் பாடல்களை கொடுத்தவர்



'முன் அந்தி காதல் நீ....', 'எலலேலம்மா......', 'உன் பேர தெரியாது.....', 'சொட்ட சொட்ட நனைய வைத்தாய்...', 'இப்படி மழை அடித்தால்...' என்று 2011ல் 98 மிகச் சிறந்த ஹிட் பாடல்களை கொடுத்தவர் நா.முத்துகுமார். 2012ல் 'நண்பன்', 'வேட்டை'', 'பில்லா-2', 'எரியும் தணல்', ஒருகல் ஒரு கண்ணாடி', 'தாண்டவம்', 'டோனி', 'அரவான்', 'வழக்கு', 'எண்17∴3', 'மெரீனா', 'அம்புலி', 'சகுனி' என்று 60-க்கும் மேலான படங்களுக்கு பாட்டெழுதி வருகிறார்.

காதல் பாடலாக இருந்தாலும் சரி, குத்துப்பாடலாக இருந்தாலும் சரி இலக்கிய தரத்துடன் எழுதுவதுதான் இவருடைய ஸ்டைல் என்று சொல்லலாம். சின்னபடம், பெரியபடம், சின்ன இயக்குனர், பெரிய இயக்குனர் என்று பாகுபாடு பார்க்காமல் பாட்டெழுதும் நா.முத்துகுமார் ''ஒவ்வொரு பாடலை எழுதும் போதும் என் முதல் பாடல் என்ற சிந்தனையுடன் அதிக முனைப்புடன் எழுதுவேன்'' என்கிறார்.

## நமீக்கு நோ சொன்ன குஷ்பு



'மசாலா கபே' படத்தின் படப்பிடிப்பைக் கும்பகோணத்தில் நடத்தி, முழு நீளு நகைச்சுவைப் படமாக எடுத்து வருகிறார் சுந்தர்.சி. படத்தில் வரும் குத்துப்பாட்டுக்கு நமீதாவை நடிக்க வைக்கலாமா? என மனைவியும், நடிகையுமான குஷ்புவிடம் கேட்க, அம்மணி 'நோ....' சொல்லிவிட்டாராம்.

இட்டிலிக்கு இட்டிலி பிடிக்காதாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமிக்கு வந்திருக்கும் வாய்ப்புகள்



'மதராசப்பட்டினம்' படத்தில் ஆர்யாவின் மனதை மட்டுமல்லாமல் பார்த்தவர்களின் மனதையும் கொள்ளையடித்த வெள்ளை அழகி எமிஜாக்ஸன். பதினெட்டு வயதுக்குட்பட்டவர்களுக்கான 'மிஸ்டீன் வேர்ல்ட்' பட்டத்தை 2008-ஆம் ஆண்டிலும், 2010-ம் ஆண்டில் 'மிஸ் இங்கிலாந்து' போட்டியில் நூலிழையில் முதல் இடத்தைத் தவறவிட்டு 2-வது இடத்தையும் பெற்ற லண்டன்வாசி. சென்னையில் தனது உறவினர்களைப் பார்க்க வ்நத இவர், இயக்குநர் விஜய்யின் கண்களில் பட்டு 'மதராசப்பட்டினம்' ஹீரோயினானார். லண்டன் திரும்பிச் சென்றவருக்கு இனிய அதிர்ச்சியாக கௌதம் மேனனின் 'விண்ணைத்தாண்டி வருவாயா' படத்தின் ஹிந்தி ரீமேக்கான 'ஏக் தீவானா தா' வாய்ப்பு கிடைத்தது. அடுத்து மணிரத்னம் உதவியாளர் ஹிந்தியில் இயக்கப்போகும் படத்தில் நாயகியாக ஒப்பந்தமாகி இருக்கிறார். ஏற்கனவே, இயக்குநர் விஜய் இயக்கத்தில் விக்ரம் ஜோடியா 'தாண்டவம்' படத்திலும் ஒப்பந்தமாகி இருக்கிறார். என்னுடைய தொழில் வாழ்க்கை படித்தான் நிதானமாக இருக்கிறது. ஆனால், உறுதியான வளர்ச்சியாக இருக்கும்..' என்று தனது ட்விட்டரில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் எமி.



நயன்தாரா பிரபுதேவா காதல் கசந்து விட்டதாகவும் அதனால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கும் அந்த அப்பாவிப் பெண் மீண்டும் படங்களில் நடிக்க வந்து விட்டதாகவும் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

அவர்தன் மரியம் டயானா என்ற பெயரையும் மாற்றி இந்து மதத்தை கடந்த வருடம்தான் தழுவினார். பல கோவில்களுக்கு சென்று வந்தார். இதனால் தன் உறவினர்கள், கேரள கிறிஸ்தவ அமைப்புகளின் கோபத்துக்கும் உள்ளானார். பிரபுதேவா மீதான காதலுக்கு அவர் கொடுத்த விலை இது. அன்றைய




# நயன்: கானல் நீர் மான்?

அறிவிப்புகளின் பிரகாரம் காதலர் தினத்தன்று இவர்கள் திருமணம் செய்திருக்க வேண்டும். ஆனால் எந்த அறிவிப்பையும் இருதரப்பினரும் இதுவரை வெளியிடாத நிலையிலேயே அவர் படங்களுக்கு ஒத்துக் கொள்கிறார் என்ற செய்தி வெளியாகி இருக்கிறது.

இப்போது இவர்கள் தனித்தனியாக பிரிந்து வாழ்கிறார்களாம். இந்நிலையில் தெலுங்கில் நாகார்ஜுனாவுடன் ஒரு படத்தில் நடிக்க ஒத்துக் கொண்டிருக்கிறார். தயாரிப்பாளர்கள் 150 லட்சம் ரூபாவை சம்பளமாக தர ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். நடிப்புக்கு முழுக்கு போட்டு விட்டுச் சென்ற நடிகையைக் கூப்பிட்டு நடிக்கச் செய்ததோடு இவ்வளவு பெரிய தொகையை கொடுக்கவும் வேண்டுமா? என தெலுங்கு நாயகிகள் புறுபுறுத்துக் கொண்டிருக்கிறார்களாம். காதல் உறவில் உண்மையாகவே விரிசல் என்றால், பாவம் நயன்தாரா? நயனுக்கு இது இன்னொரு கானல் நீர் ஓட்டம்!




# பேச்சியக்கா மருமகன்

மாமியாருக்கும் மருமகனுக்கும் உள்ள உறவின் மகத்துவத்தை எடுத்துச் சொல்லும் படம் 'பேச்சியக்கா மருமகன்'. வி.பி.பாலகுமார் இயக்கும் இந்தப் படத்துக்கு சபேஷ்-முரளி இசையமைக்கிறார்கள். அம்மா, மகள் மற்றும் உறவினர்களின் பாசப் போராட்டமும் படத்தில் உண்டு. தருண்கோபி, பிரியங்கா, ஊர்வசி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். ''உறவுகள் என்பது ரத்தமும் சதையுமானது. பத்து பங்களா இருந்தும் பங்காளி இல்லாதவன் ஏழை. பங்களா இல்லை என்றாலும் பங்காளி உள்ளவன் பணக்காரன். இதுதான் மன்னன் பிலிம்ஸ் சார்பில் உருவாகும் 'பேச்சியக்கா மருமகன்'. பேச்சியக்கா பாத்திரத்தில் ஊர்வசி நடிக்கிறார். கையில் அரிவாளுடன் கிராமத்துப் பெண்ணாக நடித்திருக்கும் ஊர்வசியின் ஆக்ரோஷ முகம் அனைவரையும் ரசிக்க வைக்கும். வைரமுத்து கருத்தாழமுள்ள பாடல்கள் எல்லோரையும் உருக வைக்கும்'' என்கிறார் இயக்குனர் வி.பி.பாலகுமார்.



# 'தீ'யை வளைக்க நினைத்த வம்பு!

'தீ' நடிகையை கோலிவுட்டுக்கு திரும்பவும் கொண்டு வந்து தங்கள் ஜோடியாக்கிவிட ஆயுதமும், அறிவும் களத்தில் இறங்க....

'தென்னிந்திய நடிகைகளிலேயே ரொம்ப உயரமான நடிகை அவர். அவரோட ஒப்பிடுறப்ப... நீங்க ரெண்டு இஞ்ச் கம்மி. டூயட் காட்சிகள்ல, சேர்ந்து நடிக்கிற காட்சிகள்ல மைனஸா இருக்கும்...' என அறிவிடம் எடுத்துச் சொல்லப்பட... 'அடச்சே... இப்புடி எட்டாக்கனியாயிருச்சே?!' என பெருமூச்சோடு நிறுத்திக் கொண்டார் அறிவு.

'வேட்டையாடுகிற'வன் படத்தில் ஆயுதத்தின் ஜோடியாக கவர்ச்சிகரமாக தமிழில் மறு அறிமுகமானார் நடிகை. ஆயுதம் பெரிய நாயகன் என்பதால்... அவருடன் ரொம்பவே ஈடுபாடாக இருந்தார். ஆயுதத்தைப் பற்றி வெளியே கருத்து சொல்லும் போது... 'அவர் ரொம்ப திறமையானவர். ஆனா அவரோட திறமை முழுமையாக இன்னும் பயன்படத்தப்படலை' என ஓபனாகச் சொன்னார்.

அம்மணியின் கவர்ச்சிக் கலக்கலோடு வந்த இந்தப்படம் எல்லா ஹீரோக்களின் உச்சி மண்டைகளையும் 'கிர்ர்ர்'றுங்க வைத்துவிட்டது. ஆனால் பெரிய சம்பள நாயகி நின்று வேடிக்கைதான் பார்க்க முடிந்தது. 'ஓசர'ப் பிரச்சினையால் ஒதுங்கிய அறிவோ... 'ஹீல்ஸ் அதிகம் இருக்கிற ஷுவை போட்டுக்கிட்டாவது டூயட் பாடிடுறேன்' என உறுதியாகச் சொல்லிவிட்டார்.

அதன்படியே 'அரிமா' படத்தில் ஜோடி போட்டு தீர்த்துக் கொண்டார் ஜோடி போடும் ஆசையை. இதே நேரம் தெலுங்கில் வேதமாக படம் இயக்கிய டைரக்டருக்கும், நடிகைக்கும் கவர்ச்சியைத் தாண்டிய ஒரு பிணைப்பு உண்டானது. தான் நடித்த படத்தை வேறு மொழியில் ரீ-மேக் செய்யும் போது நடிக்கமாட்டார் தீ. ஆனால்... வேதமான படத்தை தமிழில் 'ஸ்கை' என்ற பெயரில் ரீ-மேக் செய்தார் அந்த டைரக்கடர். டைரக்டர் மீது இருந்த பிரியத்தால், தான் நடித்த அதே வேடத்தில் தமிழிலும் நடிக்க ஒப்புக்கொண்டார்.

இந்தப்படத்தில் இரண்டு நாயகர்களுள் ஒருவராக வம்பும் நடித்தார். ஆனால் வம்பிற்கும், நடிகைக்குமான காம்பினேஷன் ஸீன் பெரிதாக இல்லை. நடிகையின் அழிகில் சொக்கிப் போன வம்பு... 'இதுவரை நான் எத்தனையோ ஹீரோயின்கள் கூட நடிச்சிருந்தாலும் கூட.... அய்யோ... இவருக்கு மட்டும் நான் ரசிகனாகவே ஆகிவிட்டேன்' என பகிரங்கமாகவே சொல்லிப் பார்த்தார்.

ஆனால் நாயகி அசைந்து கொடுக்கவில்லை. இப்போது 'திருமக'ளாக நடிப்பில் புதிய அவதாரம் காட்டியிருப்பதால் நடிகையின் மார்க்கெட் உச்சத்தில் இருக்கிறது. அந்த தெலுங்கு டைரக்டருடனான பிரியத்தையும் தொடர்ந்தபடியே இருக்கிறார். சில மாதங்களுக்கு முன் அறிவின் 'வீரன்' தம்பிக்கு கல்யாணம் நடந்தபோது... அந்த டைரக்டருக்கும் அழைப்பு விடப்பட்டிருந்தது.

சென்னை வந்த அந்த டைரக்டரும், நடிகையும் ஒன்றாக தங்கியிருந்தார்கள். திருமண ரிசப்ஷனுக்கும் ஒன்றாகவே வந்தார்கள்.

கோலிவுட்டில் இப்படி கோலோச்சும் நடிகை தெலுங்குப் படங்களுக்கு பெரிதாக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சில விஷயங்களில் 'உடன்படுவதா? வேண்டாமா?' என்கிற முடிவை ரொம்ப போல்டாக எடுப்பார். இதனால் தங்கள் அபிலாஷை நிறைவேறாத ஆந்திரப் பார்ட்டிகள் நடிகைக்கு வேறு மாதிரியான மன உளைச்சலைத் தரும் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளார்களாம்.

பெயரோடு ஒட்டியிருக்கும் ரெட்டியை ஒரு போதும் நீக்க மாட்டேன் என்கிறார் சமீராரெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முற்றம்

# காத்திருப்பு

எத்தனை பொழுதுகள்
இப்படியே மறைகிறது
அந்தி வானமும்
ஆகாயப்பறவைகளுமாய்
அவ்வப்போது வினவிச்செல்கிறது
என் கால்தடங்களை மாத்திரம்
அழித்தோய்ந்து போன
கடலலைகளின் கர்ச்சனைகள் கூட
வெகுவாகக் கேட்கிறது
தன்னந்தனிமையில்
தாங்காத ஏக்கங்களோடு
ஏற்றிய விளக்குடன்
ஏற்றப்படாத உணர்வுகளின்
தாக்கத்தினை தாங்கியவளாய்
ஓயாது காத்திருக்கிறேன்
என்னவனே உனைச்சேர...

கே.ரதி



## உன்னால்

தென்றல் கூட
மெய் மறந்து போகிறது.
உன்னை
ஸ்பரிசம் செய்வதால்,
தாரகையும், திங்களும்
சூரியனும்
வந்தும் போக மறுக்கிறது.
உன்னைக் கண்டதால்.

என்.பிரியங்கா
தெமோதரை



## நேசம்

எல்லாம் தெரிந்த
உனக்கு
என்னை நேசிக்கத்
தெரியவில்லை
எதுவும் தெரியாத
எனக்கு
உன்னை வெறுக்கத்
தெரியவில்லை.

உ.கௌதினி, கிளிநொச்சி



## பாம்பும் பிடாரனும்

காலக் கண்ணாடியில்
முகம் பார்த்த நேரம்
தெரிந்தது நரையற்ற
திரையற்ற பழைய முகம்

நரையின்றி திரையின்றி
பயமின்றி திரிந்தபோது
ஊதி ஊதிப் பிடித்து விட்டாய்
பல்லையும் பிடுங்கிவிட்டாய்

கூடைக்குள் அடைத்து விட்டாய்
அடிமையாய் ஆக்கிவிட்டாய்
சொற்பேச்சு கேட்க வைத்தாய்
பம்பரமாய் ஆட்டிவைத்தாய்

காலத்தேர் நகர்ந்திற்று
மலர்வதும் உதிர்வதும் கண்டு
நாடோடி வாழ்க்கைக்கு
மனம் பழகிவிட்டது

முதுமையின் சட்டையோடு
யார்க்கும் தேவையில்லை
வர்க்கம் புறக்கணிக்கும்
காட்டில் இனி இடமில்லை

இனி என்னை வேண்டாமென்று
விட்டுவிடாதே என் பிடாரனே
உனக்குக் கிடைக்கும்
மற்றொரு பாம்பு
எனக்குக் கிடைக்கமாட்டான்
மற்றொரு பிடாரன்.

உஷா

## யாத்திரை

தெருவோர வசந்தம்
மருவி வந்த காதலின்று
அருவியாகி....
கால் கடுக்க
கண்மணியாள் தெருவோரம்
தரவையாகி....
வலி தாங்கும் காதலிது
வழியெல்லாம் விழி வைத்து
தொடர்கிறது
இரவு பகல் தெரியாமல்
இளமை வாழ்வு புரியாமல்
கரைகிறது
அடி காலும் அணிகள் தேய
பாதணியகம் இலாபத்தில்
குவிகிறது
கருவிழியால் கைப்பிடிக்க
யுகக் காதல் யாத்திரை
தொடர்கிறது....

எஸ்.ஜீவன்

## காதல் வரம்

காதலெனும் வரம் கேட்டு
பக்தனாக மாறி நின்றேன்.
'தந்தோம்' என்று கடவுள் கூறி
துன்பநிலை மாற்றி நின்றார்.
எங்கே என் தேவதை என்று
கடவுளிடம் கேட்டு நின்றேன்.
தேடு மகனே என்று சொல்லி
மகிழ்வாய் அவரும் சென்று விட்டாள்.
தேடித் தேடி அலைகின்றேன்
இன்று வரை கிடைக்கவில்லை.
என் காதல் தேவதையையல்ல
கடவுள் தந்த வரத்தைத் தான்....

ஆர்.ரவிராஜ், பருத்தித்துறை.



## தோற்றுக்கொண்டிருக்கிறேன்

காதல் என தெரிந்தும்
அதைச் சொல்ல
மனம் வரவில்லை
கண்ணில் நீர் குவிந்தும்
அவன் கண் காண
மறுக்கவில்லை
காயமெனத் தெரிந்தும்
அவன் மாய விழிகளை
ஏன் தேடுகிறேன்?
பூக்க விரும்புகிறேன்
நாளை வாடப் போகிறேன்
எனத் தெரிந்தும்
என் வாழ்க்கையில்
புள்ளிகளை மட்டும்
வைத்துச் சென்றுவிட்டான்
கோலம் போட மறந்து.

கம்ஷிகா
விடத்தல்பளை

## புரியாமலே...

பத்து நிமிடங்கள்
எழுதினால்
வலிக்கின்ற
எனது கைகள்

பல லட்சம் தடவை
உனது பெயரை
எழுதினாலும்
வலிப்பதில்லையே ஏன்?

ஏ.கம்சிகா,
விடத்தல்பழை, மிருசுவில்.





## துரோகம்

பிரிவே!
உயிரைக்கேட்டிருந்தால் தந்திருப்பேன்
மாறாக நீ எந்தன் உணர்வை
ஏன் தான் பறித்துச் சென்றாய்?
உன் வார்த்தைகளை நம்பி நானும்
வாழத்தொடங்கினேன் அவை
வாடகைப்பொருள் என்று அறியாததால்
என் நம்பிக்கையை நீ உனக்கு
பலமாக்கி
நடத்திவிட்டாய் நாடகத்தை
உனதாக்கி
தூரத்தில் இசைஒலி கேட்கும் போதும்
உன் துரோகத்தின் நினைவு தான்
வருகிறது
இருந்தும் நீ வாழ வேண்டுமென
மனம் வாழ்த்துகிறது - உன்
நினைவுகளை வலியோடு
சுமந்தபடியே.....

## விண்மீன்கள்

வானமென்ற
பள்ளிக் கூடத்தில்
முழுநிலா டீச்சரிடம்
இரவு நேர
பாடவேளையில்
கண்ணைச்சிமிட்டி
பாடம் கற்கும்
எண்ணிக்கையில்லா
மாணவச்
செல்வங்கள்.



## நீயாக

கனவுகளே இன்றி கிடந்த
என் இரவுகளுக்கு
நினைவுகளை தந்து சென்றதால்
உனை நினைக்கவே இரவுகள்
வந்தது எனக்கு, உன்னால்
வசந்தம் வந்தது என்
வாழ்வினில்
உன்னால் நான் வாழ்கிறேன்
நானாக அல்ல நீயாக.

## புன்னகையில் கரையும் கண்ணீர்

நிம்மதி இல்லை என
நிலைகுலையாதே மனமே!
பிரச்சினை என்பது
பிடியில் இருக்கும் மட்டும் தான்
பொறுமையாய் இரு
உன்னிடமும் வரும்
அந்த சோலைமலைக் காற்று
உன் சோகங்களைத்
துடைத்துச் செல்ல!
வாழ்க்கையில் எதுவும்
நிரந்தரம் இல்லை - என்பதை
முதலில் உன்
கண்ணீருக்கு சொல்லி வை!
இப்போதே மலரட்டும்
உனக்காக ஒரு புன்னகை!

எஸ். கவி
டச் றோட், மானிப்பாய், யாழ்ப்பாணம்

### வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அல்லது எஸ்.எம்.எஸ்.சிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com
தொலைபேசி - 0778021501

## காதல்



காலங்கள் கரைந்தோடிய போதும்
காதல் தந்த காயங்கள் மட்டும்
கறைகளாய் மனதில்...
நீ என்னை மறந்து போனாலும்
நான் உன்னை மறக்க
நினைத்தாலும்
நாம் வளர்த்த காதல் மட்டும்
மனதில் மறையாமல் இன்னும்

எப். எஸ். பாஹிரா, ஹாலி-எல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழி மீது தமிழ்மொழியின் செல்வாக்கு

## ஒரு வரலாற்றுப் பார்வை

(கடந்த இதழ் தொடர்ச்சி)

சிங்கள மொழியில் உள்ள யகரவக்ர சந்தி என்று அழைக்கப்படும் புணர்ச்சியானது தமிழ் யகர வகர புணர்ச்சியை ஒத்ததாக உள்ளது. ஆரம்பத்தில் வரும் சொல்லின் இறுதி எழுத்தின் ஒலி, இ, உ உயிரெழுத்தாக இருந்து பின்னர் வரும் சொல்லின் முதல் எழுத்து உயிரெழுத்தாக இருப்பின் யகர வகர புணர்ச்சி ஏற்படும் என்பது தமிழ் இலக்கண மரபு.

உதாரணம்:

மணி + அழகு - மணியழகு
தீ + எரியும் - தீயெரியும்
பொது + இடம் - பொதுவிடம்
கோ + இல் - கோவில்

இந்த தமிழ் இலக்கண மரபுக்கு அமையவே சிங்கள யகர வக்கர சந்தியும் அமைந்துள்ளது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இவை தமிழ் இலக்கண மரபை ஒத்ததாக அமைந்திருப்பதைக் காண்க. பாலி மற்றும் சமஸ்கிருத மொழிகளில் இவ்வாறான மரபுகள் இல்லாமையால் சிங்கள இலக்கணம் வகுத்தோர் இத்தமிழ் மரபைப் பின்பற்றியிருக்க வேண்டும் என்று மொழி ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனினும் இவை, சிங்கள இலக்கண மரபின் மீது தமிழ் இலக்கண மரபு செலுத்தியிருக்கும் செல்வாக்கையே புலப்படுத்துகிறது.

குருணாகல் காலம் சிங்கள இலக்கணத்தில் ஒரு திடீர் மாற்றத்தை ஏற்படுத்திய காலகட்டமாக குறிக்கப்படுகிறது. இக்காலக்கட்டத்தில் தென்னிந்திய தமிழ் இலக்கியத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய 'யாதினி' எனப்பட்ட மொழி நடையை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய ஆக்கங்கள் சிங்கள இலக்கியத்திலும் இயற்றப்பட்டன. இம்மரபினைப் பின்பற்றி குருணாகல் காலத்தில் பல இலக்கிய படைப்புகள் எழுந்தன.

தலதா சிரித்த, தம்பதெனி அஸ்ன, சிங்கபா அஸ்ன, குவேணி அஸ்ன ஆகிய சிங்கள படைப்புகள் யாதினி மொழி நடையை பின்பற்றியவையாக அமைந்திருந்தன. இப்படைப்புகளில் தமிழ் எழுத்து நடைமட்டுமன்றி சில தமிழ் சொற்களும் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறே உள்வாங்கப்பட்டுள்ளன. தம்பதெனி அஸ்ன நூலில் வரும் இப்பகுதி ஒரு சிறந்த உதாரணம்:

[illegible]
[illegible]
[illegible]

'தன்னுரி தன்னுரி நட்டநட்டயன கூத்தாடி வர மல்லவ யன்கென் ஹா தன்னுரி தன்னுரி நட்டாநட்டா யன வட்டப்புலவருன்கென்'

மேற்கண்ட சிங்கள வசனத்தில் வரும் கூத்தாடி, வட்டப்புலவன் ஆகிய சொற்கள் தமிழ் சொற்களாகவே மாற்றமேதுமும் இன்றி பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். இவ்வாறான சொற்களும் மொழி நடையும் அக்கால சிங்கள இலக்கிய நூல்களில் பரவலாகக் காண முடிகிறது. தமிழ்மொழி செல்வாக்கை இது எடுத்துக் கூறுகிறது.

சங்கரா இலக்கிய நூல் இலக்கிய நூல்களில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா எனும் மரபுகள் பின்பற்றப்பட்டன. அதன்பின் வெண்பா மரபு பின்பற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த பல்லவ, சோழ யுகங்களில் விருத்தம் என்ற முறையில் பாக்கள் இயற்றப்பட்டன. இதைப்பின்பற்றி ஓசை ஒத்திசைந்து வரும் சொற்கள் அடங்கிய எதுகை - மோனை பாடல்கள் தோற்றம் பெற்றன. குறிப்பாக விஜயநகர பேரரசு காலத்தில் இப் பாணி பிரபல்யம் பெற்று விளங்கியது. 14-15 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த இப்பாணி சிங்கள கவிதைகள் மீது பெரும் செல்வாக்கு செலுத்தியது. 14-15ம் நூற்றாண்டு காலப்பகுதியில் காணப்பட்ட கம்பளை மற்றும் கோட்டே யுகத்தில் எழுதப்பட்ட சிங்கள காவிய நூல்களில் எதுகை மோனை பாணியைக் கொண்ட படைப்புகளைக் காணமுடிகின்றது.

கதிரவன்





சிங்கள இலக்கிய வரலாற்றின் முதலாவது தூதுவிடும் காவியமாகக் கருதப்படும் மயூர சந்தேசயில் இப்பாணி கையாளப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். தெலுங்கு மற்றும் தமிழ் மொழிகளில் இயற்றப்பட்ட தென்னிந்திய மயில்தூது எனும் நூலை ஒட்டியதாகவே இது எழுதப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தமிழ் மயில் விடு தூதுவில் வரும் எண்ணங்கள் கூட சிங்கள மயூரசந்தேசயில் மொழிபெயர்த்து சேர்க்கப்பட்டிருப்பதாக விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். உதாரணம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இந்த பாடலிலே கடைசி வரியில் கரே என்று அழைக்கப்படும் சொல் தமிழிலே கரை என்ற சொல்லை ஒத்திருக்கிறது. மோதர கரையில் நாநாம்படி வேண்டிக் கொள்ளும் அப்பாடல்வரியில் கரை என்ற தமிழ்ச்சொல் நேரடியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறான தமிழ்ச் சொற்கள் சிங்கள சொற்களுடன் கலந்து பாவிக்கப்பட்டதற்கு இன்னும் சில பாடல் வரிகள்

உதாரணமாக

[illegible]
[illegible]

இந்த உதாரணத்தில் தோடு எனும் சொல்லும் நகரம் சிட்டுநாங் என்பது நகரத்தில் உள்ள நகரசபையின் ஒரு அதிகாரியையும் குறித்து நிற்கிறது.

சிங்கள இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படும் கோட்டே யுகம் பல்வேறு துறைகளில் சிறப்புற்றிருந்தது. இலங்கை - இந்திய உறவுகளும், தமிழ் - சிங்கள உறவுகளும் விருத்தி பெறுவதற்கு வாய்ப்பு பெற்றிருந்த காலமாகக் கருதப்படுகிறது. இந்தியாவுடனான அரசியல் உறவு, குடும்ப ரீதியான உறவு, பிரதானிகளின் வருகை என இந்தியாவுடனான உறவுகள் மேம்பட்டிருந்தன. குறிப்பாக ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் தென்னிந்தியாவுடனான தொடர்புகள் வலுப்பெற்றிருந்தன இதன் பெறுபேறாக தமிழர்கள் கோட்டை இராச்சியம் வந்து வசித்தாகவும் இந்துமதம் இலங்கையில் செல்வாக்கு பெற்று திகழ்ந்ததாகவும் இக்காலத்தில் எழுதப்பட்ட சந்தேச (தூது) நூல்கள் சான்று பகர்கின்றன. செலலிஹினி, பரவி, கோகில, திசர போன்ற தூது விடு காவியங்களில் ஈஸ்வர கோவில், நாதர் கோவில், வல்லேமடம பிள்ளையார் கோவில், பெருந்தோட்ட காளி கோவில், கோட்டே பத்தினி கோவில், ஐயனார் கோவில், சிலாபம் முன்னேஸ்வரம் கோவில் மற்றும் இந்து கோவில்கள் பற்றிய தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அக்காலத்தில் இந்து சமயம் இலங்கையில் செழித்திருந்தமைக்கு இது சான்றாகிறது.

ஆறாம் பராக்கிரமபாகுவின் அரசியல் ஆலோசகர்களாக தென்னிந்திய பிராமணர்கள் திகழ்ந்தனர் என்று வரலாற்றில் இருந்து அறிய முடிகிறது. ஒருவர் சன்னஸ என்ற செப்பேட்டில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல, சாண்டில்ய கோத்திரத்தைச் சேர்ந்த பெரிய ஒஜிஜலன் மற்றும் அவரது மருமகனான அவிரல் ஒஜிஜலன் ஆகிய இருவரும் அரச ஆலோசகர்களாக கடமையாற்றியிருக்கின்றனர். வேறெந்த காலப்பகுதியிலும் கோட்டே யுகத்தின் போது காணப்பட்ட தமிழ்-சிங்கள நல்லுறவும், தமிழ்மொழியின் செல்வாக்கும் ஒரு போதும் இந்த அளவுக்கு வலுவாக இருந்ததில்லை என்பது வரலாற்றாசிரியர் முடிவு.




அக்காலக்கட்டத்தில் பௌத்த குருமார் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கினர். தொட்டகமுவே விஜயபா பிரிவெனாவின் அதிபதியாக விளங்கிய தொட்டகமுவே ஸ்ரீராகுல தேரர் தமிழில் பாண்டித்தியம் பெற்றவராகத் திகழ்ந்தார். பல்கலைக்கழக அந்தஸ்து பெற்றிருந்த மேற்படி பிரிவெனாவில் பிக்குமாரும் சாதாரண மக்களும் கல்வி பயின்று வந்தனர். அக்கால வாழ்க்கைக்கு அவசியமான பாடங்கள் அங்கே கற்பிக்கப்பட்டன. தமிழ் நாடகக்கலை அங்கு கற்பிக்கப்பட்டதாக கிரா சந்தேச நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாடகக் கலை அங்கு கற்பிக்கப்பட்டது மட்டுமன்றி அக்கலையில் ராகுல தேரர் தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பரவி சந்தேசயவில் வரும் கீழ்க்கண்ட பாடல் இதற்கு சான்று பகர்கிறது.



[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இந்த பாடலிலே தொட்டகமுவே ஸ்ரீராகுல தேரர் சமஸ்கிருதம், மாகதி, போன்ற மொழிகளை கற்றிருப்பதாகவும் தமிழ் நாடகக் கலையில் பாண்டித்தியம் பெற்றிருந்ததையும் குறிக்கிறது.

தொட்டகமுவே ஸ்ரீராகுலதேரர் பஞ்சிகா பிரதீப என்ற நூலில், தமிழ் ஜாதகக் கதை என்ற நூலில் உள்ள பகுதிகளை எடுத்தாண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



இக்காலப்பகுதியில் பிரபல்யம் பெற்று விளங்கிய மற்றுமொரு தமிழ் மொழி அறிஞரான வீதாகம மைத்ரியதேரர் ஆக்கிய 'புதுகுணாலங்காரய' என்ற நூலில் காணப்படும் சில வழக்காறுகள், கி.பி. 2ம் நூற்றாண்டில் தமிழில் எழுந்த மணிமேகலை காவியத்தை அடிப்படையாகக் கொண்டதாக எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. வீதாகம மைத்திரிய தேரர் எழுதிய மற்றுமொரு நூலான தஹம்கெட்ட மாலய என்ற நூல் தொடர் பாக்களைக் கொண்டு எழுதப்பட்டதாகும். இந்த நூலில் தமிழ் உச்சரிப்புகளைக் கொண்ட சொற்களும் மொழிப் பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

இப்பாடலில் வரும், இரண்டு, மரண்டு, காவல், ஒன்பது போன்ற தமிழ்ச் சொற்கள் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே உள்வாங்கப்பட்டிருப்பதைக் காண்க. இது, தமிழ் மொழியின் செல்வாக்கு சிங்கள மொழியில் வியாபித்திருந்ததை சிறப்பாகவே விளக்குகிறது.

சீதாவாக்கை காலப்பகுதியில் தமிழ்மொழியின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. முதலாம் இராஜசிங்க மன்னன் தன் இறுதி காலத்தில் இந்து சமயத்தைத் தழுவினான். அரிட்ட கீவெண்டு பெருமாள் போன்ற தமிழ் பிரமுகர்கள் அவனது அரசவையில் வீற்றிருந்தனர். மேலும் போர்த்துகேயரின் வருகையால் சிங்கள இலக்கிய வளர்ச்சி பல முட்டுக்கட்டைகளை சந்தித்தது. சிங்கள மொழி மீதான தமிழ் மொழியின் செல்வாக்கு அதிகரிக்க இது காரணமானது. இக்காலத்தில் வாழ்ந்த அழகிய வண்ண முகவெட்டி எழுதிய 'சுபாஷிதய' என்ற நூல், ஔவையார் இயற்றிய மூதுரை, நல்வழி ஆகிய நூல்களின் செல்வாக்கையும் நீதிவெண்பா என்ற உபதேச நூலின் கருத்துக்களையும் உள்ளடக்கியிருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நன்றி ஒருவர்க்கு செய்தாற்கால் அந்நன்றி என்று தரும் சொல் என வேண்டாம் நின்று தளரா வளர் தெங்கு தாருண்ட நீரைத் தலையாலே தாம் தருதலால்.

கண்டி ஆட்சிக்காலம் சீதாவாக்கை காலத்தில் சிங்கள இலக்கிய வளர்ச்சியில் காணப்பட்ட தேக்க நிலையை கண்டி இராச்சிய காலத்திலும் அவதானிக்க முடிகிறது. அக்காலப் பகுதியில் தமிழ் கற்ற சிங்கள படைப்பாளர்கள் தமிழ் நூல்களை சிங்களத்தில் மொழி பெயர்த்தார்கள். கிரிமெட்டியாவே கவிதுர் மஹா பதுரங்க ஜாதகக் கதைகளையும், 18ம் நூற்றாண்டில் தொடங்வெல கவிதுர் அரிச்சந்திரன் காவியத்தையும், வள்ளிமாதா காவியத்தையும் சிங்களத்தில் மொழி பெயர்த்தனர். சிங்களத்தின் மீதான தமிழின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு இவையும் காரணமாயின.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை காட்டுங்கள்



மேலே உள்ள எறும்பு தன் உணவுடன் நிலத்தடி வீட்டுக்குச் செல்ல வழி சொல்கிறீர்களா? வழியில் உள்ள எதிரிகளின் கைகளில் சிக்கவைத்து விடாதீர்கள்!

# ஜன்னலுக்கு வெளியே...




சரியான விடை:

**சந்தானம்**

1. டி. அரவிந்த் - ஹட்டன்
2. திவாகர் - சத்யபுரம்
3. ஆர். கருநதினி - திருமுருகண்டி
4. டேனியல்குமார் - நேபொட
5. துஷா - பாலிப்பாய்
6. வீ. மைதிலி - எரணி
7. அமலா - டிக்கோயா
8. ஷெம்சிபாரூக் - மன்னார்
9. எம். நிவேதா - கோப்பாய்
10. பி. சரண்யா - கொழும்பு-15
11. ம. காந்திமதி - கோவில்ன
12. ஆர். ரிஷோஷான் - புளத்சிங்கள
13. ஜே. நிக்ஷன் - கிளிநொச்சி
15. அகல்யா - ஹொரானை
16. ஆர். பிரியா - கண்டி
17. எம்.நிசாந்தன் - கொழும்பு-05
18. சாமிலா - பத்தனை
19. ஜே. மேனகா - நெல்லிபடி
20. எஸ். ஜெஜீனா - பருத்தித்துறை
21. ஜ. சிரோமி - கிளிநொச்சி
22. எம்.என்.எப்.ஷாஹிரா - அக்குறணை
23. வினோதினி - மட்டக்களப்பு
24. சோனியா - வரக்காப்பொல
25. சஜீலா - சம்மாந்துறை
26. ரிஜுஷா - மாத்தளை
27. ஏ.வினோதினி - வவுனியா
28. எப். சஹானா - ஹொம்பாத்தகமை
29. எல்.விஜயன் - அவிசாவளை
30. பி. சாமிலா - வட்டியாந்தோட்டை

# படம் சொல்லும் கதை



நாற்பத்துமூன்று ஆண்டுகளை இப் புகைப்படம் கடந்து விட்டிருக்கிறது. படத்தில் இடமிருந்து வலமாக இரண்டாவதாக அமர்ந்திருப்பவர்தான் செல்லதுரை. அவர் தற்போது தமிழகத்தில் வாழ்ந்து வருகிறார். நம்நாட்டில் களுத்துறை மாவட்டத்தில் அமைந்திருக்கும் றைகம் தோட்டத்தில் அவர் வாழ்ந்த நாட்களில் எடுக்கப்பட்ட இப் படத்தைப் பற்றி தொலைபேசியின் ஊடாக வேலூருக்குத் தொடர்பு கொண்டு கேட்டோம்.

"எனக்கு சின்ன வயதிலேயே பேண்ட் இசைப்பதில் ஆர்வம். எப்படியாவது ஒரு பேண்ட்வாத்தியக் கருவியை வாங்கிவிட வேண்டும் என்பதும் என் கனவாக இருந்தது. சில நாட்களின் பின் தந்தையார் சின்னப்பனின் மறைவின் பின் தந்தையின் பென்ஷன் பணத்தை எனது சகோதரர்கள் ஒன்பது பேருக்கும் அம்மா சரிபாதியாக பிரித்துக் கொடுத்தார். அதில் எனக்கு அவர் தந்த 250 ரூபா பணத்தை பெற்றுக் கொண்டு இசை ஆர்வலரான நண்பர் அர்ச்சுனன் தந்த ஒரு தொகை பணத்தையும் சேர்த்துக்கொண்டு பேண்ட் வாத்தியக்கருவி வாங்குவதற்காக கொழும்பு வந்தேன். அப்போது என்னுடன் என் அம்மாவும் வந்தார். கொழும்பு கிராண்ட்பாஸில் பெருமாள்மாஸ்டரின் துணையோடு 500 ரூபாவிற்கு புதுபேண்ட் வாத்தியக் கருவியை வாங்கிக் கொண்டு இங்கிரிய, றைகமைக்கு வந்தோம். அந்த பேண்ட் வாத்தியக் கருவியை சம்பிரதாய பூர்வமாக றைகம் குறிஞ்சி மகா மாரியம்மன் ஆலயத்தில் வாசித்துவிட்டு என் வீட்டிற்கு முன்னால் உள்ள பூவரச மரத்திற்கு அருகில் அமர்ந்து போட்டோவும் எடுத்துக் கொண்டோம். இந்தப் படத்தை றைகம் தோட்டத்தில் கங்காணியாக பணியாற்றிய கப்பையா தேவரின் தம்பி கிருஷ்ணன் தேவர் தனது கமராவில் பிடித்துத் தந்தார். படத்தில் இடமிருந்து வலமாக குழந்தை வேலு, நான், ராமராஜ், மணி, சொக்கா அமரர் ஆகியோர் இருக்கின்றோம். இதில் மணி தமிழகம் நீலகிரியில் குடியேறி அங்கேயே இறந்து விட்டார். அமரர் மட்டும் இங்கிரியாவில் வசிக்கிறார். மற்ற அனைவரும் தமிழகத்தில் வசித்து வருகிறோம்" என்றார் செல்லதுரை. நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்தப் படத்தை பொக்கிஷமாக றைகமையைச் சேர்ந்த சக்திவேல் தலைவர் பாதுகாத்து வந்திருக்கிறார். அவரின் மறைவிற்கு பிறகு, சக்திவேலின் மகன் பிரதாபன் ஆசிரியர் இதை வானவில்லுக்குத் தந்தார்.

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நினைவுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எமக்கு படத்தின் பிரதியுடன் அனுப்பி வைத்தால் அல்லது இமெயில் மூலம் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

# படப்புதிர்

27ஆம் பக்க புதிர்க்கான விடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மு | க | மூ | டி |
| | | | த் | | | |
| | | க | தி | ரை | | |
| | கு | தி | ரை | | | |
| | | ர | | | | |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| | | ன் | | | | |




- ச. குகனேஸ்

# குறுக்கெழுத்து போட்டி - 14

விடைகள்

**இடமிருந்து வலம்**

முல்லைப்பெரியாறு, மோதல், கலை, ஈனிதம், ஈழி, புறம், பல்லி, இஞ்சி, சினிமா, தஞ்சாவூர், பரசுராமன், கலாபவன் மணி, தாமிரபரணி, நரி, வைகையாறு

**மேலிருந்து கீழ்**

முகப்புத்தகம், பெண், யாகம், மோகன், குவைவரி, புதன், பஞ்சு, லைலா, வியாபாரி, ராத்திரி, மனிதன், தாலி, மீன், பசி, நரகம்

**சரியான விடைகளை எழுதி பெயர் தெரிவான மூவர்**

S. சதாதேவன், பதுளை
எச்.எம்.பிரதீபன்,
வரக்காப்பொல
ராசினி சந்திரசேகரன், மட்டக்களப்பு

# சொல் விளையாட்டு - 14

சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

சதுரங்கம், சிகரம், யசியம், ரணம், புளி

**மேலிருந்து கீழ்**

சனீஸ்வரன், ரகசியம், கபுரவம், வம்பு

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

1. V. செல்வராஜ், கன்னாகம்
2. எம். ஷியானா, பேருவளை
3. எஸ். சந்தியாகு, குருணாகலை



கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**ஆறு அதிர்ஷ்டசாலிகள்**

1. சாரா - பண்டாரகமை
2. பி.சதீஸ் - வெளிப்பன்னை
3. யாசீன் - ஹொரபொத்தானை
4. டி.தாமி - கிளிநொச்சி
5. ஆர்த்திகா - இறுவில்
6. கஜூத் - ஏறாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவில் vaanavil.com டொட்.கொம் -சஜீ-

# இணைய தேடல்: சில உதவிக் குறிப்புகள்

இணைய தேடல் என்றாலே அனைவருக்கும் நினைவில் வருவது கூகிள் எனும் (Search Engine) தேடற் பொறிதான். இணைய பயனர்களிடையே மிகப் பிரபல்யம் வாய்ந்த தேடற் பொறியாக கூகிள் திகழ்கிறது. எனினும் கூகிளைப் பயன்படுத்தி மிகச் சிலரே தமது தேடலை முறையாக மேற் கொள்கிறார்கள் எனலாம். கூகிள் தேடற் பொறியில் குறிப்பிட்ட ஒரு தகவலைத் தேடிப் பெற எத்தனையோ இலகு வழிகள் இருக்க நாம் ஒரு தேடற் சொல்லை (keyword) மட்டும் வழங்கி விட்டு பக்கம் பக்கமாகத் தேடித் தேடிக் களைத்துப் போய் விடுவதோடு நேரத்தையும் வீணாக்கி விடுகிறோம்.

இணையத்தில் தகவல்களைத் தேடுவதும் ஒரு கலை எனலாம். கூகிள் தேடற்பொறியில் பயன்படுத்தக்க சில தேடல் நுட்பங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

1. '+' குறியீடு

இந்தக் குறியீட்டை அடுத்து வரும் தேடற் சொல் தேடல் முடிவுகளில் நிச்சயம் இடம் பெறுவதைக் காணலாம். உதாரணம்: +iPhone and iPod இங்கு தேடல் முடிவில் iPod எனும் சொல் இடம்பெறா விடினும் +iPhone எனும் சொல் நிச்சயம் இடம்பெறும்.

2. '-' குறியீடு

இந்தக் '-' குறியீட்டை அடுத்து வரும் சொல் தேடல் முடிவுகளில் இடம் பெறுவதில்லை. உதாரணம் : -iPhone and iPod இங்கு தேடல் முடிவில் -iPhone எனும் சொல் இடம்பெறாது.

3. ~| (pipeline) குறியீடு

இந்தக் குறியீடு 'அல்லது' எனும் கருத்தைக் கொடுக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட தேடற் சொற்களை வழங்க இதனைப் பயன்படுத்தலாம். உதாரணம்: +iPhone iPod. இங்கு தேடல் முடிவில் iPhone , iPod எனும் இரு சொற்களும் இடம்பெறும்.

4. மேற்சொன்ன குறியீடுகளுக்குப் பதிலாக AND, OR, NOT போன்ற பூலியன் குறியீடுகளையும் பயன்படுத்தி சொற்களை இணைத்துத் தேடலாம். எனினும் இந்தக் குறியீடுகள் ஆங்கில பெரிய எழுத்திலேயே (Capital) இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். உதாரணம்: swim OR float எனும் தேடல் swim அல்லது float எனும் வார்த்தைகளடங்கிய தேடலைத் தரும்.

5. '~' (tilde) குறியீடு

இந்தக் '~' குறியீட்டை அடுத்து வரும் சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களும் தேடல் முடிவுகளில் இடம்பெறும்.

### இந்த மாத டவுன்லோட்

**Unstoppable Copier**

விண்டோஸ் இயங்கு தளத்தில் சிடி, டிவிடி போன்றவற்றிலிருந்து பைல்களைப் பிரதி செய்யும்போது, சேதமடைந்த இடங்களிலுள்ள பைல்களை மீட்டெடுக்க முடியாமல் உடனடியாக ஒரு பிழைச் செய்தியைக் காண்பித்து விட்டு பிரதி செய்வதை நிறுத்திக் கொள்ளும். அதாவது மேல் நகராது. பழுதடைந்த சிடி டிவிடிக்களிலிருந்து பைல்களைப் படிக்கக் கூடிய வசதி விண்டோஸ் இயங்கு தளத்தில் தரப்படவில்லை.

எனவே இது போன்ற கீறல் விழுந்த சிடி, டிவிடி போன்றவற்றிலிருந்து பைல்களை மீட்டெடுக்கவென உருவாக்கப்பட்டுள்ள ஒரு சிறிய கருவியே Unstoppable Copier.

இந்த மென்பொருள் கருவி மூலம் சிடி, டிவிடிக்களிலிருந்து பைல்களைப் பிரதி செய்யும்போது சேதமடைந்த இடங்களிலுள்ள பகுதி நீங்கலாக ஏனைய பகுதிகளிலுள்ள டேட்டாவை தொடர்ந்து பிரதி செய்யும். இதனை www.freewarefiles.com எனும் இணைய தளத்திலிருந்து இலவசமாக டவுன்லோட் செய்யலாம்.

பைல் அளவு 417 KB.

6. குறிப்பிட்ட ஒரு இணைய தளத்தை தேடுவதற்கு, site எனும் வார்த்தையை உபயோகிக்க வேண்டும். உதாரணம்: site:www.thinakaran.lk

7. ஒரு சொல்லுக்கான வரைவிலக்கணத்தைப் பெற define எனும் வார்த்தையை சேர்த்துக் கொள்ளுங்கள். உதாரணம்: define:Computer

8. ஒரே மாதிரியான விடயங்கள் அடங்கிய இணைய தளங்களைத் தேட related எனும் வார்த்தையை உபயோகிக்க வேண்டும். உதாரணம்: related:www.dailynews.lk

9. '*' எனும் குறியீட்டைப் பயன்படுத்தி ஒரு சொல்லை முழுமையாகத் தெரியாத போது அதன் ஆரம்ப எழுத்துக்களை சேர்த்துத் தேடலாம். உதாரணம்: friend* இதன் முடிவுகள், friends, friendship போன்ற சொற்களையும் கொண்டிருக்கும். இவை wildcard எனப்படும்.




10. ஒரு சொல்லுக்குரிய (ஆங்கில) எழுத்துக்களை (spelling) அறியாதபோது அதற்குப் பதிலாக '?' பயன்படுத்தித் தேடலாம். உதாரணம்: fr??d . இங்கு ?? எனும் குறியீடு ஏதுமொரு ஆங்கில எழுத்துக்களையும் கொண்டிருக்கலாம்.

11. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வார்த்தைகள் கொண்ட சொற்றொடரில் தேடல் முடிவுகளில் அந்த வார்த்தைகளை நீங்கள் வழங்கிய அதே ஒழுங்கிலேயே பெற " " மேற்கோள் குறியீட்டைப் பயன்படுத்த வேண்டும். உதாரணம் "contact us". இந்த தேடல் முடிவில் contact மற்றும் us எனும் இரு வார்த்தைகளும் ஒன்றாகவே இருக்கக் காணலாம்.

12. cache: எனும் வார்த்தையை சேர்த்துத் தேடும்போது கூகிள் தேடற்பொறி குறிப்பிட்ட அந்த இணைய தளத்தை தனது தரவுத் தளத்தில் சேர்க்கும் போது இருந்த நிலையிலேயே காண்பிக்கும்.

13. link: எனும் வார்த்தை, கொடுக்கப்படும் ஒரு இணையப் பக்கத்திலுள்ள அனைத்து இணைப்புகளையும் பட்டியலிடுகிறது.

14. info: எனும் வார்த்தை ஒரு இணைய தளம் பற்றிய விவரங்களை முழுமையாகத் தருகிறது. உதாரணம்: info:www.vaanavil.com

15. filetype: ஒரு குறிப்பிட்ட வகை பைலை மட்டுமே தேடிப் பெற இந்த வார்த்தையைப் பயன்படுத்தலாம். உதாரணம்: internet filetype: pdf

16. intitle: குறிப்பிட்ட ஒரு வார்த்தையை தலைப்பாகக் கொண்ட இணைய பக்கங்களைத் தேட இந்த வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும். உதாரணம் intitle: one stop எனும் சொற்களைத் தலைப்பாகக் கொண்ட இணைய பக்கங்களை வரிசைப்படுத்தும்.

17. குறிப்பிட்ட ஒரு வார்த்தையை தனது இணைய தள முகவரியில் கொண்டிருக்கும் இணைய பக்கங்களைத் தேட inurl எனும் வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும். உதாரணம்: inurl:nie

18. இரண்டு இலக்கங்களுக்கிடையிலான வீச்சில் தகவல்களைத் தேட #..# எனும் குறியீட்டைப் பயன்படுத்தலாம். உதாரணம்: India presidents 1947.. 2000

19. ஒரு பிரதேசத்தின் வானிலை அறிக்கையைப் பெற பின்வருமாறு டைப் செய்து தேடல் வேண்டும். Weather Colombo, Sri Lanka

20. இணையத்தில் புத்தகங்களைத் தேட Books about Health, Books about Water என வழங்கலாம்.

21. Phonebook : எனும் வார்த்தையுடன் ஒரு தொலைபேசி இலக்கத்தை வழங்கி அது யாருக்கு சொந்தமானது எனக் கூடக் கண்டு பிடிக்கலாம். எனினும் இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தாது.

22. நாணய மாற்றுக் கருவியாகவும் கூகிள் தேடற் பொறியைப் பயன்படுத்தலாம். உதாரணம்.
1 Pound = ? USD , 1 USD = ? Yen

23. கூகிள் தேடற் பொறியை ஒரு கல்குலேட்டராக, ஒரு அலகு மாற்றியாகவும் கூட பயன்படுத்தலாம். தமிழிலும் கூட கூகிளில் தேடலாம். அதற்கு யுனிகோட் முறையிலமைந்த எழுத்துருவைப் பயன்படுத்த வேண்டும்.

மேற் சொன்னவை தவிர மேலும் பல தேடல் நுட்பங்கள் கூகிளில் உள்ளன. அவற்றை நீங்களாகவே தேடுங்கள். தெரிந்து கொள்ளுங்கள்.

வானவில் Top Tips

## Send To மெனுவில் உங்கள் போல்டர் !!

விண்டோஸ் இயங்குதளத்தில் ஒரு பைல் மீது ரைட் க்ளிக் செய்ய வரும் மெனுவில் Send To எனும் கமாண்ட் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த Send To கமாண்ட் மூலம் ஒரு பைலை இலகுவாக ஈ-மெயில் செய்யவோ, டெஸ்க்டொப்பிற்கு ஒரு Shortcut உருவாக்கவோ, அல்லது புளொப்பி ட்ரைவ் அல்லது பென் ட்ரைவிற்குப் பிரதி செய்யவோ முடியும்.

சில வேளைகளில் அந்த பைலின் பிரதியொன்றை குறிப்பிட்ட ஒரு போல்டரில் சேர்க்க வேண்டிய தேவையும் ஏற்படலாம். உங்கள் பைல்களை நீங்கள் எப்போதும் ஒரு குறிப்பிட்ட போல்டரிலேயே சேமிப்பதானால் அந்த போல்டரின் பெயரையும் Send To மெனுவில் சேர்த்து விடலாம். இதன் மூலம் உங்கள் வேலை இலகுவாவதுடன் மேலுமொரு விண்டோஸ் எக்ஸ்ப்ளோரர் விண்டோவைத் திறந்து ஒரு போல்டரிலிருந்து இன்னுமொரு போல்டருக்கு பைலைப் பிரதி செய்யும் வேலையும் இல்லாமல் போய்விடுகிறது.

**வழி முறை 1**

முதலில் மை கம்ப்யூட்டரைத் திறந்து கொள்ளுங்கள். அங்கு Tools மெனுவில் Folder Options தெரிவு செய்யுங்கள். தோன்றும் டயலொக் பொக்ஸில் View டேபில் க்ளிக் செய்து Show hidden files and folders என்பதைத் தெரிவு நிலைக்கு மாற்றுங்கள். பின்னர் மை கம்ப்யூட்டர் விண்டோவில் (C:) ட்ரைவில் உள்ள Documents and Settings போல்டரைத் திறந்து உங்கள் User Account க்குரிய போல்டரையும் திறந்து கொள்ளுங்கள். அங்கு Send To எனும் போல்டரைக் காணலாம். பின்னர் Send To போல்டரைத் திறந்து அதனுள் File - New - Shortcut ஊடாக நீங்கள் Send To மெனுவில் சேர்க்க விரும்பும் போல்டருக்கு ஒரு Shortcut ஐ உருவாக்கிக் கொள்ளுங்கள். இப்போது ஏதேனுமொரு பைலின் மேல் ரைட் க்ளிக் செய்து Send To தெரிவு செய்ய அங்கு நீங்கள் Shortcut உருவாக்கிய போல்டரையும் காணலாம்.

**வழி முறை 2**

மேற் சொன்ன வழி முறை கடினமாயிருப்பின் பின்வரும் வழி முறையைக் கையாளுங்கள்.

Start பட்டனில் க்ளிக் செய்து Run தெரிவு செய்யுங்கள். அங்கு sendto என டைப் செய்து ஓகே சொல்லுங்கள். (விண்டோஸ் 7 பதிப்பில் ரன் பொக்ஸில் shell:sendto என வழங்குங்கள்) அப்போது தோன்றும் விண்டோவில், sendto மெனுவில் காண்பிக்க வேண்டிய போல்டரை ட்ரேக் அண்ட் ட்ரொப் முறையில் இழுத்துப் போடுங்கள். அல்லது ஒரு Shortcut ஐ உருவாக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டன்களை அழுத்தி ஒரே படத்தை பல தியேட்டர்களில் திரையிடலாம்!



**ராம்ஜி**

திரைப்படத்துறை இப்போது பெரிதும் மாறிவிட்டது செலுலோயிட் படச் சுருள் மூலம் படம் எடுப்பது குறைந்து வருகிறது. அதற்குப் பதிலாக டிஜிட்டல் டேப் மூலம் படம் எடுப்பது அதிகரித்து வருகிறது. இதன் மூலம் பிலிமுக்கு செலவாகும் பணம் பெருமளவில் மீதப்படுத்தப்படுகிறது.

டிஜிட்டல் காமிராக்களும் வெவ்வேறு விலைகளில் வந்துவிட்டன. மலிவு விலைகளில் கிடைக்கின்றன. எனினும் செலுலோயிட் படச் சுருளின் பதியும் தன்மையை எட்டக் கூடிய அளவு நேர்த்தியாக படம் பிடிக்கும் டிஜிட்டல் காமிராக்கள் இன்னும் உருவாகவில்லை. அதற்கு மிகவும் நெருங்கிய அளவுக்கு வந்திருப்பது 'ரெட்' என்ற சினிமாக்காமிரா.

இந்த ரெட் காமிராவின் தரத்தைப் போலவே அதன் விலையும் எக்கச்சக்கம்.

இலங்கை திரைப்படத்துறையை மேம்படுத்தும் நோக்கில் ஏசியன் டிஜிட்டல் என்டர் டெயின்மன்ட் நிறுவனம் ரெட் காமிரா ஒன்றை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளது. மேலும் மூன்று ரெட் காமிராக்களை கொண்டுவர தனது நிறுவனம் உத்தேசித்திருப்பதாக நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி லலிங்க முத்துகுமாரண கூறுகிறார்.

'ரெட்' காமராவை ஊடகவியலாளர்களுக்கு காட்சிப்படுத்தவும் மேற்படி நிறுவனம் தயாரிக்கும் 'வைஷ்ணவி' திரைப்படத்தின் ஆரம்ப விழாவையும் ஏசியன் டிஜிட்டல் என்டர்டெயின்மன்ட் நிறுவனம் அண்மையில் கொழும்பில் நடத்தியது.

இலங்கையில் திரைப்படத்துறையை மேம்படுத்த ஏசியன் டிஜிட்டல் என்டர்டெயின்மனட் நிறுவனம் எடுக்கவுள்ள நடவடிக்கைகளை நிறுவனத்தின் அதிபதி மனோஹறன் நாணயக்கார மேற்குறிப்பிட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் எடுத்துக் கூறினார்.

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் 1970களின் முற்பகுதியில் உருவாக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு அமெரிக்க திரைப்படங்கள் இலங்கையில் திரையிடப்படுவது நிறுத்தப்பட்டது. அதன் பின்னரே இலங்கை திரைப்படத்துறையின் வீழ்ச்சி ஆரம்பமாகியது என்று மனோஹறன் கூறுகிறார்.

தியேட்டர்களுக்கு ரசிகர்கள் வருவது படிப்படியாக குறைவது 1975 இலேயே ஆரம்பமாகியது. அவ்வாறான நிலையில் எப்படி திரைப்படத்துறை மூலம் லாபம்பெற முடியும் என்பது அவரது வாதம்.

இப்போது எல்லாமே டிஜிட்டல் யுகம் என்பதால் டிஜிட்டல் மூலம் திரைப்படங்களை தியேட்டர்களில் திரையிடுவதே லாபகரமானது என்கிறார் நாணயக்கார.

ஒரு தியேட்டரில் 400 இருக்கைகள் இருக்கின்றன. 50 பேர் படம் பார்க்க வருகிறார்கள் என்றால் மீதி 50 இருக்கைகளுக்கான வருமானத்தை அந்தத் தியேட்டரும் படத்தைத் தயாரித்த நிறுவனமும் இழக்கின்றன. என்பதே பொருள். எனவே எந்த நேரமும் தியேட்டரில் கூட்டத்தை திரட்டுவதன் மூலமே திரைப்படத்துறை மூலம் சம்பாதிக்கமுடியும். ஒரு படம் 100 நாள் ஓடியது என்பதில் எந்த பெருமையும் கிடையாது எவ்வளவு வருமானம் கிடைத்தது என்பதே முக்கியம் இந்த வருமான அதிகரிப்புதான் திரைப்படத்துறையில் வருமான அதிகரிப்பை ஏற்படுத்தும்.

எனவே தியேட்டர்களுக்கு கூட்டத்தை வரவழைப்பதற்கு புதுப்புது படங்கள் அடிக்கடி அத்தியேட்டரில் திரையிடப்படவேண்டும் என்கிறார் மனோஹறன். இலங்கையில், குறிப்பாக கொழும்பில் சில மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

மெஜஸ்டிக் தியேட்டரில் இப்போது மாற்றங்களைக் காணமுடிகிறது. 650 இருக்கைகள் கொண்ட தியேட்டருக்கு பதிலாக 400, 100, 100 என்ற அளவு இருக்கைகள் கொண்ட மூன்று தியேட்டர்கள் அங்கு உருவாக்கபட்டுள்ளன. 3D படங்களுக்கு மட்டுமென்றே ஒரு தியேட்டர் உள்ளது. அதில் கட்டணம் சுமார் 750 ரூபாவாகும். ஆனால் டிக்கட்டுடன் ஒரு கொக்கோ கோலா போத்தல், ஹம்பகர், சிக்கன் பிரை என்று ஒரு சிற்றுண்டிப் பொதியையும் தந்து விடுகிறார்கள். சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டே படம் பார்க்கலாம். மற்றைய தியேட்டர்களில் 100 ஆசனங்கள் வரையிலேயே உள்ளன. சகல வசதிகளுடனும் உள்ள இந்தத் தியேட்டர்களில் 50 பேர் படம் பார்த்தால் கூட அது லாபத்தைத் தான் தரும். ஏனெனில் தியேட்டரில் அரைவாசியளவு இருக்கைகள் தானே காலியாக உள்ளன! சிறிய தியட்டர்களுக்கான நிர்வாகச் செலவு, ஆளணி எண்ணிக்கை என்பன குறைவு என்பதும் கவனிக்கத்தக்கது.

இது போலவே பிலிம் ரோல் புரஜெக்டர் முறைக்குப் பதிலாக டிஜிட்டல் முறையில் திரையிடும் தொழில்நுட்பத்தைச் சரியாக பயன்படுத்தினால் அதிக இலாபம் பெறக் கூடியதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டுகிறார் மனோஹறன்.

"செய்மதியூடாக ஓரிடத்தில் இருந்தபடியே பட்டன்களை அழுத்துவதன் மூலம் பல தியேட்டர்களில் ஒரு படத்தை அல்லது வெவ்வேறு திரைப்படங்களைத் திரையிடுவது இப்போது சாத்தியம். இலங்கை போன்ற சிறிய நாட்டில் இது இலாபகரமானதாக இருக்கும். இதன் மூலம் ஆளணிச் செலவு, நேரவிரயம், பல உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாடு அவசியமற்றுப் போதல் போன்ற பலவற்றில் மிச்சம் பிடிக்கலாம். செலவைக் குறைக்கலாம். இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிக இலாபத்தையும் சம்பாதிக்கலாம் என்பது இவர் சுட்டிக்காட்டும் விஷயங்களாகும்.

இது மட்டுமன்றி திரைப்படத்துறையில் இலாபம் பெறுவதற்கு அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்காத நிலையில் வருடாந்தம் 20 படங்கள் வரை தயாரிப்பதற்கு தனது நிறுவனம் தயாராக இருப்பதாகவும் இதுவரை 5 படங்கள் வரை தயாரிப்பில் இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

ஏசியன் டிஜிட்டல் என்டர்டெயின்மன்ட் நிறுவனம் இலங்கையில் தமிழ்ப்படங்களை தயாரிக்குமா என்று தெரியவில்லை. ஆனால் ஆங்கில படங்களுக்கு முதலிடம் வழங்கப்படும் என்று அவர் கூறுகிறார். உலகச் சந்தைக்காகத் தமிழ்ப் படங்களும் தயாரிக்கப்பட முடியும். எனவே வாய்ப்பு கிடைத்தால் இலங்கையில் தமிழ்ப்படம் தயாரிப்பதற்கு இந்த நிறுவனம் முன்வரலாம். அதற்காக தென்னிந்திய மற்றும் வட இந்திய நடிகர்களை இங்கு வரவழைக்கக் கூடும் அல்லது இந்தியாவில் சென்று கூட தமிழ்ப்படங்களை தயாரிக்கலாம்.

அமெரிக்காவின் சோனி நிறுவனம் கூட இந்தியாவுக்கு வந்து முருகதாஸுடன் இணைந்து 'எங்கேயும் எப்போதும்' படத்தயாரிப்பில் ஈடுபடவில்லையா? ட்வென்டியத் சென்சுரி ஃபொக்ஸ் போன்ற பட நிறுவனங்களும் இந்தியாவில் முகாமிட்டுள்ளன.

ஏசியன் டிஜிட்டல் என்டர்டெயின்மன்ட் நிறுவனத்துக்கு இந்தியாவில் திரைப்படத்துறையில் ஈடுபட்டுள்ள ஏசியன் பினான்ஸ் நிறுவனம் தாய் நிறுவனம். அந்த நிறுவனம் இந்தியாவில் படத்தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் ஏசியன் டிஜிட்டல் என்டர்டெயின்மன்ட் நிறுவனம் தமிழ்ப் பட தயாரிப்பிலும் இறங்கக் கூடும்.

இன்றைய சூழல் தயக்கத்தை ஏற்படுத்தினாலும் எதிர்காலத்தில் வாய்ப்புகள் பிரகாசமாகலாம்.



மனோஹறன் நாணயக்கார குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பதையும் இலங்கையின் இயக்குநர் திலகம் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், அவரது மனைவியும் இயக்குநருமான சுமித்ரா பீரிஸ் ஆகியோருக்கு ரெட் கெமராவின் கீர்த்தியை சொல்லி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலிங்க முத்துகுமாரண விளக்குவதையும் படத்தில் காண்க.

(படப்பிடிப்பு: மதுரைவீரன்)




## விமர்சனம்

"உங்களுக்கு பிடித்தமான துறையைத் தேர்ந்தெடுத்து படியுங்கள், அதில் நிச்சயம் ஜெயிப்பீர்கள்" இன்றைய வாழ்க்கைக்கான மிகப்பெரிய தத்துவம் இது! இதைத்தான் மூன்று மணி நேரத்தில் சொல்லிவிட்டு போகிறது நண்பன் குழு. ஏற்கனவே வெளிவந்த "3 இடியட்ஸ்" படத்தின் ரீமேக். விஜய், ஜீவா, ஸ்ரீகாந்த் நடிப்பில் ஷங்கர் இயக்கும் படம் என்பதால் மிகப்பெரிய எதிர்பார்ப்பு எல்லா ரசிகர்களிடமும் இருந்தது. அதை செவ்வனவே நிறைவேற்றியிருக்கிறது நண்பன்...

என்ஜினியரிங் படிக்கும் மாணவர்களான ஜீவா, ஸ்ரீகாந்த் உடன் கல்லூரியில் வந்த சேர்ந்து படிக்கிறார் விஜய். மூன்று பேரும் நல்ல நண்பர்களாக வருகிறார்கள். சந்தோஷம், சோகம், கஷ்டம், நஷ்டம் போன்ற பல இன்னல்களுக்கு மத்தியில் கல்லூரியில் படித்து முடித்து ஜீவாவும், ஸ்ரீகாந்தும் காலூன்றி விடுகிறார்கள். ஆனால் இந்நிலைக்கு வர காரணமாக இருந்த நண்பன் விஜய் பற்றி எந்தத் தகவலும் இல்லை. சில வருடங்கள் கழித்து நண்பனை (விஜய்) தேடி அவனது ஊருக்கு போகிறார்கள். அங்கு போய்ப் பார்த்தால், அவனுக்கு பதிலாக வேறு ஆள் (எஸ்.ஜெ.சூர்யா) இருக்கிறார். அதன் பின் என்ன நடக்கிறது என்பது தான் கதை. படம் முடிந்து வெளியே வந்தாலும் நமக்குள் சிறு சந்தேகம் ஏற்படுகிறது, நாம் பார்த்தது விஜய் படம் தானா? என்று. காரணம், இதற்கு முன் விஜய் நடித்த படங்களில எல்லாம் விஜய் அறிமுகமாகும் போதே தாரை தப்பட்டை முழங்கும். பூ மழை பொழியும், இப்படித்தான் எல்லாப்படங்களிலும். ஆனால் இந்தப் படத்தில் அப்படி எதுவும் இல்லை. பஞ்ச் வசனங்கள் இல்லை. படத்தில் நடித்த எல்லோரும் ஒரு கேரக்டராகத் தான் வந்து போகிறார்கள்.

பாரிவேந்தனாக வரும் விஜய் ஆரவாரம் காட்டாமல் தன் கதாப்பாத்திரத்துக்கு ஏற்றவாறு நடித்துள்ளார். ஸ்ரீகாந்தின் அலட்டலில் ஆரம்பிக்கும் படம் முழுக்க முழுக்க சிரிப்பு மழையை தந்ததோடு சிந்திக்கவும் செய்கிறது. ஜீவா வழக்கம் போல அற்புதமாக நடித்துள்ளார். நடிப்பில் தான் எப்போதும் டொப்தான் என்பதை நிரூபித்திருக்கிறார் சத்தியராஜ். சத்தியன் சைலன்சாக வந்து கலக்கி இருக்கிறார். அதுவும் அவரின் மேடைப் பேச்சு அப்பப்பா!

ஹரிஸ் ஜெயராஜின் இசை சுப்பர். எனினும் ஏதோ ஒரு குறையும் இருந்தது. "அஸ்கு, லஸ்கு" மற்றும் "என் ப்ரண்ட போல யாரு மச்சான்" போன்ற பாடல்கள் சிறப்பாக இருந்தன. படம் என்ன தான் ரீமேக்காக இருந்தாலும் சங்கரின் இயக்கத்தில் சில மாற்றங்கள் ஏற்படும் என்ற பலத்த எதிர்பார்ப்பு ஏமாற்றத்தையே தந்தது.

மொத்தத்தில நண்பன் சிகரம் தொடுவான்.

- லக்ஷன்

## ராஹில் கவிதைகள்

உன் பெயரை
காதல் என்று
வைத்துக் கொள்
உன்னைக் கண்டதும்
அதுதானே வருகிறது
முதலில்!
ஏனெனில்
பூமிக்கு
பூங்காக்களே தேவையில்லை
நீ மட்டும்
போதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: ஜெயா, ஷஜூப்பிரட்



வானவில் மங்கை

# கொழுப்பை கொல்லும் கொள்ளு



**டிப்ஸ்**

*ஒம்லட் போட்ட பாத்திரத்தை தாள் உப்பும் சேர்த்து சுத்தப்படுத்தினால் துர்நாற்றம் வராது.*

*காய்கறிகளை வேக வைக்கும்போது சில துளி எலுமிச்சை சாற்றை சேர்க்க காய்கறிகளின் நிறம் பளிச்சென இருக்கும்.*

*உப்பு வைக்கும் டப்பாவில் சில அரிசிமணிகளை கலந்து வைத்தால் ஈரக்கசிவு ஏற்படாது.*

*தோசைக்கு மாவு அரைக்கும்போது சிறிதளவு கடலைப்பருப்பையும் சேர்த்தரைத்தால் தோசை நல்ல நிறமாக இருக்கும்.*

*வெயில் அதிகமாக இருக்கும் நாட்களில் வெளியில் போகும்போது வெங்காயத்தையும் கூடவே கொண்டு செல்லுங்கள் மயக்கமோ தலைசுற்றலோ ஏற்பட்டால் உடனே அதை முகர்வதால் தலைசுற்றல் நீங்கிவிடும்.*

குதிரை கொழுத்தால் கொள்ளைத் திங்கும் என்று ஒரு பழமொழி உண்டு. காரணம் கொள்ளுக்கு உடல் கொழுப்பைக் குறைக்கும் சக்தி உண்டு. அதே சமயம் உடலுக்கு வலுவும் தரும். கொள்ளுப் பருப்பை ஊறவைத்து அந்த நீரை அருந்தினால் உடலில் உள்ள கெட்ட நீர் வெளியேறி விடும். அதே போல் கொழுப்புத் தன்மை என்னும் ஊளைச்சதையைக் குறைக்கும் சக்தி கொள்ளுப் பருப்புக்கு உண்டு. மேலும் இதில் அதிகளவு மாவுச் சத்தும் உள்ளது. கொள்ளுப் பருப்பை ஊற வைத்தும் சாப்பிடலாம், வறுத்தும் சாப்பிடலாம்.

மேலும் கொள்ளை வேக வைத்த நீரைக் குடித்தால் ஜலதோஷம் நீங்கும். உடல் உறுப்புகளுக்கு வலுத்தரும். வயிற்றுப் போக்கு, வயிற்றுப் பொருமல் போன்ற பிரச்சனைகளுக்கும் கொள்ளு உதவி செய்யும். பிரசவ அழுக்கை வெளியேற்றும். எலும்புக்கும் நரம்புக்கும் உரம் தரக் கூடியது கொள்ளு. அதனால்தான் கடினமான பணிகளைச் செய்யும் குதிரைகளுக்குக் கொள்ளுப் பருப்பு தந்தனர். அதன் மூலம் அதிக தூரம் ஓடும் ஆற்றல் குதிரைக்குக் கிடைத்தது. ராத்திரி ஒரு கைப்பிடி கொள்ளு எடுத்த தண்ணீரில் ஊற வைத்து காலையில் எழுந்தவுடன் முதலில் அதைச் சாப்பிட்டு வந்தால் நிச்சயம் எடை குறையும்.

கொள்ளை ஆட்டிப் பால் எடுத்து அதில் சூப் வைத்து குடிக்கலாம். கொள்ளை அரைத்துப் பொடி செய்து, ரசம் வைக்கும் போது ஓரிரு ஸ்பூன் போட்டுக் கொள்ளலாம். தவிர கொள்ளு ரசம், கொள்ளுத் துவையல், கொள்ளுக் குழம்பு ஆகியவை வைத்து அவ்வப்போது உண்டு வந்தாலும் உடல் எடை குறையும்.



அதே சமயம், கொள்ளுப் பருப்பை உண்ணும் போது தண்ணீரும் அதிகமாக குடிக்க வேண்டும். இல்லாவிட்டால் சிறுநீர் பிரச்சனை ஏற்படும் என்பது மருத்துவர்கள் கருத்து. ஆக தொப்பையைக் கொல்லும் கொள்ளை உணவில் எந்த முறையிலாவது எடுத்துக் 'கொள்ளு'தல் நல்லது.

# புன்னகையுங்கள்!

பொன்னகை வேண்டாம் பெண்ணே உன் புன்னகையே போதும். எத்தனை விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்தாலும் ஒரு புன்னகை இல்லாவிட்டால் அதில் அழகே இருக்காது. காலையில் எழுந்தவுடன் கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்த்தே புன்னகையுங்கள். அது உங்களை உற்சாகப்படுத்தும். பின் கணவன், பிள்ளைகளுக்கு உங்கள் புன்முறுவலுடன் கூடிய காலைவணக்கத்தை தெரிவியுங்கள். அதுவே அவர்களை உற்சாகப்படுத்தும். புன்னகைப்பதால் முகத்தசைகள் மட்டுமன்றி கண், இருதய தசைகளும் பலம் பெறும். இதனால் இரத்தழுத்த நோய் கூட வருவதில்லை. மூச்சை ஆழமாக எடுப்பதால் ஒட்சிசன் அதிகமாக உள்ளெடுப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். புன்னகைப்பதால் மூளையின் அனைத்து பாகங்களும் செயல்படும். இதனால் உடலுக்கு புத்துணர்ச்சி ஏற்படும். சிரித்த முகத்துடன் பேசுவதால் பிறருக்கு நம்மில் நம்பிக்கை ஏற்படும். பெரும்பாலும் நம் மனதை இலகுவில் கவரும் நபர்களும் சிரித்தபடி காட்சியளிப்பவர்களாகவே இருப்பார்கள். அதனால்தான் புன்னகை அரசி, புன்னகை மன்னன் போன்ற பட்டங்கள் கொடுக்கப்படுகின்றது. மனித உணர்வுகளில் ஒன்றானது என்பதால்தான் சிரிக்கத்தெரிந்த ஒரே இனம் மனித இனம் என்கிறார்கள். குழந்தைகள் ஒரு நாளில் குறைந்தபட்சம் 400 தடவை சிரிக்கின்றதாம். நாம் எத்தனைத் தடவை சிரிக்கின்றோம் எண்ணிப்பாருங்கள்.





# தாய்ப்பாலூட்டுவதால் தாய்க்கே நன்மை

ஒரு பெண்ணின் முழுமையே அவள் தாய்மையடைவதுதான் என்றாலும் அவளில் உன்னதமான தருணம் என்னவெனில் அவள் தன் குழந்தைக்கு தாய்ப்பாலூட்டுதுதான். குழந்தையின் கண்களைப் பார்த்தபடி பாலூட்டும் போது குழந்தைக்கும் தாயிற்கும் இடையில் ஏற்படும் தொடர்பாடல் பாசப்பிணைப்பை ஏற்படுத்தும். அரவணைத்துக்கொண்டு தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தை பாதுகாப்பை உணர்கின்றது. அதுமட்டுமல்ல, அந்த உஷ்ணம் குழந்தையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது. முதல் ஆறுமாதம் வரை குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்கவேண்டும். பின் பிற உணவுகளுடன் தாய்ப்பால் கொடுக்கவேண்டும். தாய்ப்பால் சுரக்க தாய் கர்ப்பகாலத்திலேயே நன்கு சத்துக்கள் நிறைந்த உணவுகளை எடுக்க வேண்டும். குழந்தை பிறந்தவுடன் முளைக்கட்டிய தானியங்கள், மீன், பால், வெள்ளைப்பூண்டு, பால்வகைப்பொருட்கள், மரவள்ளிக்கிழங்கு போன்றவை உட்கொண்டால் மட்டுமின்றி அடிக்கடி பாலூட்டுவதாலும் அதை குழந்தை நன்கு உறிஞ்சிக் குடிப்பதாலும் தாய்ப்பால் அதிகரிக்கும். தாய் ஒவ்வொரு தருணமும் பாலூட்ட முன் சூடான பானத்தை அருந்திவிட்டு பால் கொடுக்க வேண்டும். குழந்தை முதலில் குடிக்கும் பாலில் புரத, மாச்சத்து, விட்டமின் போன்றவையும் கடைசிப்பாலில் வளர்ச்சிக்குத் தேவையான கொழுப்புச்சத்தும் கிடைக்கும். அதனால் குறைந்தது 10 நிமிடமாவது ஒருபக்க மார்பில் பால்கொடுக்க வேண்டும். பதற்றமின்றி தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தையின் மனவளர்ச்சி நன்றாக அமையும். இதனால் தாய்க்கு இரத்த அழுத்தம் வராது. மார்பக புற்றுநோய் நெருங்கவே நெருங்காது. வேண்டிய நேரத்தில் நேரடியாக வழங்கக்கூடிய, செலவே இல்லாதது தாய்ப்பாலே.

## சமைத்துப் பாருங்கள்

### சொக்லட் கேக்



**தேவையானவை:**

| | |
|---|---|
| கோதுமை மா | - 1 1/4 கப் |
| சீனி | - 3/4 கப் |
| முட்டை | - 2 |
| பட்டர் | - 100 கிராம் |
| கொக்கோ பவுடர் | - 25 கிராம் |
| பால் | - 200 மி.லீ |
| பேக்கிங்பவுடர் | - 2 தேக்கரண்டி |
| அப்பச்சோடா | - 1/4 தேக்கரண்டி |
| விப்பிங்கிரீம் | - 1/2 கப் |
| டார்க் சொக்லட் | - 125 கிராம் |

**செய்முறை:**

மாவில் கொக்கோ, பேக்கிங்பவுடர் சோடா அனைத்தையும் கலந்து வைக்கவும். ஒரு பாத்திரத்தில் முட்டைகளை உடைத்து ஊற்றி நன்கு அடிக்கவும். பின்பு அதில் சீனி பட்டர் சேர்த்து நன்கு கலந்து மாவுக் கலவையைப் போட்டு பாலை ஊற்றி கலக்கவும். கேக் தட்டில் பட்டர் பேப்பர் போட்டு அதில் பட்டர் தடவி கலவை ஊற்றி அவனில் 350 டிகிரியில் 45 நிமிடம் பேக்பண்ணவும். பின் எடுத்து ஆறியதும் சட்டியில் நீர் ஊற்றி அடுப்பில் வைத்து நீர் கொதித்ததும் இறக்கி சொக்லட் துண்டுகளை போட்டு அவை உருகும் வரை கலக்கி சாஸ் போல் ஆனதும் ஆறவிட்டு கேக்கின் மேல் ஊற்றவும்.

### மைக்ரோவேவ் சொக்கி சொக்லட்



**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| சீனி | - 1 கப் (அரைத்த சீனி) |
| பட்டர் | - 1/2 கப் |
| பால்மா | - 1 கப் |
| கொக்கோ பவுடர் | - 1/2 கப் |
| தண்ணீர் | - 1/4 கப் |

**செய்முறை:**

மைக்ரோவேவில் high Powerல் சீனியையும் நீரையும் கலந்து 4 அல்லது 5 நிமிடம் வைக்கவும். பின் இரு நூலிழை பதம் வந்ததும் எடுத்து பட்டர் சேர்த்து கலந்து திரும்பவும் High Powerல் 1 நிமிடம் வைக்கவும். அத்துடன் பால்மாலையும் கொக்கோவையும் சேர்த்து கலந்தெடுத்து சொக்லட் மோல்ட்டில் (நீங்கள் விரும்பிய வடிவுடைய) ஊற்றி ஆறியதும் பரிமாறலாம். விரும்பினால் கஜுவைக் கூட சேர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமெரிக்காவின் அதிசயம் சுதந்திரதேவி சிலை



அமெரிக்காவின் அடையாளமாக உள்ள சுதந்திர தேவி சிலை 305 அடி உயரத்துடன்(93மீற்றர்) கம்பீரமாக வானை நோக்கி உயர்ந்து நிற்கிறது.

அமெரிக்காவின் அடையாளங்களுள் ஒன்றாக 125 வருடங்களுக்கும் மேலாக காட்சி தரும் சுதந்திர தேவி சிலையைப் பார்த்திருப்பீர்களே? ஒரு கையில் விளக்கைத் தூக்கிப் பிடித்தபடி இன்னொரு கையில் புத்தகம் ஏந்தியபடி தலையில் கிரீடத்துடன் நிற்கும் அந்த பிரம்மாண்டமான உருவத்தைப் பார்த்தாலே மகிழ்ச்சி வரும் அல்லவா? உலகுக்கு வெளிச்சமூட்டும் விடுதலை என்றும் சுதந்திர தேவி சிலை என்றும் அழைக்கப்படும் இச்சிலை ஒரு நட்புறவின் அடையாளம் என்பது தெரியுமா உங்களுக்கு? ஆம், பிரான்சு அமெரிக்காவுக்கு வழங்கிய பரிசு தான் சுதந்திர தேவி சிலை.

பண்டைய ரோமின் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கும் லிபர்டாஸ் என்ற கடவுளின் வடிவம் போல விடுதலையை முன்னெடுத்துச் சென்று விளக்கொளி பரப்பும் தேவதை என்ற சிந்தனையில் சுதந்திர தேவி சிலை வடிவமைக்கப்பட்டது. அதன் தலையில் உள்ள கிரீடத்தில் இருக்கும் 7 நீட்சிகள் 7 கடல்களையும் 7 கண்டங்களையும் குறிக்கும். கையிலிருக்கும் புத்தகம் அறிவையும் அதிலிருக்கும் தேதி ஜீலை 4 1887 என்று ஐக்கிய அமெரிக்கா உருவான நாளையும் குறிக்கும்.


151 அடி உயரமுடைய இச்சிலை 65 அடி உயரமுடைய அடித்தளம் மற்றும் 89அடி உயரமுடைய பீடத்தின் மேல் பிரம்மாண்டமாக நிறுத்தப்பட்டது. இச்சிலையை அமைக்க 907 டன்செம்பும் 1134 டன் இரும்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் 1886 அக்டோபர் 28 அன்று சிலையை க்ரோவர் திறந்து வைத்தார்.

1902ஆம் ஆண்டு வரை இச்சிலை கலங்கரை விளக்காகவும் பயன்பட்டது. இச்சிலையின் உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றை வளைவு படிக்கட்டுகள் மூலம் (354 படிக்கட்டுகள்) சுதந்திர தேவி சிலையின் கிரீடத்தை அடைய முடியும். இதில் ஏறி நின்று ரசிப்பது எத்தனை அற்புதமான விசயம் தெரியுமா?

ஒரே நேரத்தில் அங்கிருக்கும் 25 ஜன்னல்கள் வழியாக 30 பேர் நியூயார்க் நகரைப் பார்வையிடலாம். பிரம்மாண்டமான இச்சிலையை அருகிலிருந்து பார்ப்பதே அலாதி சுகம் என்றால் அதன் உச்சியில் ஏறி நிற்பது எவ்வளவு மகிழ்ச்சியான விஷயம்!

சிலையின் பீடத்தில் புதிய கொலாசஸ் என்ற எம்மா லாஸரஸின் கவிதை செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அடையாளங்களுள் ஒன்றாக இச்சிலையை வழங்கிய பிரான்சில் இதன் மாதிரி உருவம் வைக்கப்பட்டுள்ளது. புதுப்பிப்பு பணிகளுக்காக அமெரிக்க சுதந்திர தேவி சிலை ஒரு ஆண்டுக்கு மூடப்படுகிறது.

## சொல் விளையாட்டு 15




### இடமிருந்து வலம்

1. இது வாழை மரத்தில் கொத்தினால் கஷ்டம் வரும்
6. கூடப் பிறந்தவன்
9. மலர்கள்
10. எவ்வளவு நீர் குடித்தாலும் தாகம்....

### மேலிருந்து கீழ்

1. மீன்
2. இந்தியாவில் கொண்டாடப்படும் பண்டிகை
3. கடிக்கும்
4. லக்ஷ்மிக்கு மற்றொரு பெயர்
5. காய்ச்சல்
7. ஒரு விளையாட்டு
8. இசைக்கருவி

**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 14ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

## விடுகதைகள்

1. கணுக்கணுவாய் இருப்பான் அணு அணுவாய் இனிப்பான் அவன் யார்?
2. போகுமிடமெல்லாம் பின்னால் வருவான். வெளிச்சத்தில் தெரிவான். இருட்டில் தெரியமாட்டான் அவன் யார்?
3. ஊர் ஊராய் சுற்றினாலும் உரிய இடத்துக்கு வந்து சேருவான் அவன் யார்?
4. தண்ணீரில் தாவும் கப்பல் தரையிலே குதிக்கும் கப்பல் அது என்ன?
5. எட்டாத உயரத்தில் தண்ணீர்குவளை அது என்ன?
6. மேலே போவான் கீழே வருவான் அவனுக்குத் தொழில் அது அவன் யார்?
7. காலில் கடுப்பு வாயில் இனிப்பு அது என்ன?
8. தட்டினால் தாளமும் வரும் சேதியும் வரும் அது என்ன?
9. பெரியவனை சின்னவன் விரட்டிக் கொண்டே இருப்பான் அவர்கள் யார்?
10. கைக்குள் இருப்பவனை எதிர்காலத்தை கணிப்பவன் என்பார்கள் அவன் யார்?

**விடைகள்**
1. கரும்பு
2. நிழல்
3. தபால்
4. தவளை
5. இளநீர்
6. ஏற்றம் இறைத்தல்
7. தேனீ (கொடுக்கு - தேன்)
8. டைப் ரைட்டர்
9. கடிகாரத்தில் சின்ன முள் - பெரிய முள்
10. கைரேகை



## மரணம் தரும் மீன்

ஃபுகு என்பது ஒருவகை மீன். அந்த மீனின் உடலில் சில பகுதிகள் விஷத்தன்மை வாய்ந்தவை. சுத்தமாகக் கழுவாமல் இந்த மீனை உணவுக்குப் பயன்படுத்துவதால் வருடத்திற்கு கிட்டத்தட்ட 200பேர் உயிர் இழக்கிறார்கள். அதுவும் ஐந்து நிமிடத்திற்குள் இந்த மீன் உணவு ஆளைக் கொல்கிறது.





**ஸ்வர்ணிகா**
**காந்தன் - ஜெயா**
**ஹுணுப்பிட்டி.**

## தக்காளி




சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தக்காளிப் பழங்கள் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் பழங்களை டின்களில் அடைத்து வைத்துக் கொள்கின்றனர். ஆண்டு முழுவதும் தக்காளியை கண்ணாடி வீடுகளில் பயிரிடுகிறார்கள். இங்கு தக்காளிக்குத் தேவைப்படும் உஷ்ணம், காற்று ஆகியவை கிடைக்கும்படி ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். அங்கு தக்காளி உற்பத்தி அதிகமாவதற்குக் காரணம் இது தான்!

## ஒரு மணி நேரத்திற்குள்...



ஒரு மணி நேரத்திற்குள் மனிதனின் இதயம் 300 லிட்டர் ரத்தத்தை உள்வாங்கி வெளியேற்றுகிறது. 4320 தடவை இதயம் துடிக்கிறது. ஒரு மணி நேரத்திற்குள் பூமி சூரியனின் சுற்றுப் பாதையில் ஒரு லட்சத்து ஏழாயிரம் கிலோ மீட்டர்கள் நகருமாம்.

## படப்புதிர்



படங்களின் பெயர்களைக் கொண்டு கட்டங்களை பூர்தி செய்யுங்கள். பூர்த்திசெய்ய முடியாவிட்டால் 22ம் பக்கத்தை பார்க்கவும்.

## ஒட்டகத்தின் இயல்பு




முதன் முதலாக ஒட்டகத்தைப் பார்த்தவர்கள் அதனைக் கண்டு பயந்து ஓடி விட்டனர். ஆனால் அது யாருக்கும் துன்பம் கொடுப்பதில்லை என்பதை அறிந்த பொழுது அருகில் வந்து அதனை உற்றுப் பார்க்க ஆரம்பித்தனர்.

அப்பொழுது ஒட்டகம் ஒரு சோம்பேறியான பிராணி என்பதை அறிந்து கொண்டனர். எனவே அதற்குக் கடிவாளம் கட்டி சுமையினை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தியதோடு அதனைக் கேவலமாகவும் நடத்த ஆரம்பித்தனர். புதிதான ஒன்றைக் காணும் பொழுது ஆரம்பத்தில் பயம் ஏற்படுவது இயல்பு.

**கே.சுவேதா, நெல்லியடி, யாழ்ப்பாணம்.**

## வண்ணம் தீட்டுங்கள்



ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம்.

முகவரி:
STAR BABAY,
Editor,
Vanna Vaanavil Editorial,
Lake House
Colombo - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகர்

A. எஸ்.ஜே.சூர்யா
B. கார்த்திக்
C. தனுஷ்
D. விஷ்னு

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்




சில நேரம் நினைவில்...!
சில நேரம் அருகில்...!
பல நேரம் தொலைவில்...!
ஆனால் நீ என்றும்
என் மனதில்

\- ஏ.மோனிகா, மன்னார்

மணக்கும் வரை மலர்
மயக்கும் வரை பிகர்
இருக்கும் வரை உயிர்
இறக்கும் வரை உறவு
இறந்த பின்பும் பிரண்ட்ஷிப்

எம்.எச்.எப்.சப்ரீனா
டீன்புர - ஹாலிஎல

### எனது கவலை

கண்ணில் தூக்கம் இல்லை
வாழ்க்கையில் சந்தோசம் இல்லை
முகத்தில் புன்னகை இல்லை
மனதில் நிம்மதி இல்லை
காரணம்?
பக்கத்து வீட்டு ஜட்டம்
ஊரில் இல்லை.

ஆர்.பிரவீன், யாழ்ப்பாணம்.

### SMS பூக்கள்

நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம்.
இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம்.
முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501

### வாழ்க்கை வெறுக்கும் சம்பவம்

1. சூப்பர் பிகர் but அவ எனக்கு சீனியர் ஆகும் போது.
2. ஸ்கூல் டுவர் but பஸ்ல என் பக்கத்துல பிரின்சிபல்.
3. மொக்க ஃபேஸ் எனக்கு முறைப்பொண்ணு
4. ஈஸியான எக்ஸ்ஸாம் தினத்தில் பார்த்து, என் ஹாலில் சூப்பர் டீச்சர் சூப்பர்வைசர்...

படிப்பு உயர்வை தரும்
உயர்வு பணம் தரும்
பணம் திமிர் தரும்.
திமிர் ஆணவம் தரும்.
ஆணவம் அழிவை தரும்.
SO படிப்பை
எதிர்ப்போம்....
ரெஸ்ட் எடுப்போம்.

எஸ்.எம்.ஹசீனா,
ஓட்டமாவடி.

### ஒரு தாயின் ஆசை

என் கல்லறை மேல்
உன் பெயரை எழுதிவை.
நினைப்பதற்காக அல்ல
அங்கும் உன்னை
நான் சுமப்பதற்காக

நிஷாந்தனி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

காதல் என்பது
பஸ்சில் டிரவல் பண்ற மாதிரி....
பிடிக்காட்டி இறங்கிடலாம்....
but கல்யாணம் என்பது
பிளைட்ல டிரவல் பண்ற மாதிரி
பிடிக்கலண்ணா நாம
நினைச்சாலும் இறங்க முடியாது.

hilman

முடியாதுன்னு சொல்பவன்
முட்டாள்.
முடியும்னு சொல்பவன்
புத்திசாலி.
இப்போ சொல்லுங்க என்
மொபைலுக்கு
ரீலோட் பண்ண முடியுமா?
முடியாதா?

ருஸ்கா - வெயான்கல,
அகலவத்தை.

கேர்ள்ஸ் வாந்தி எடுத்தா
பெற்றோர்களின் கேள்வி:
யார் அந்த ராஸ்கல்?
போய்ஸ் வாந்தி எடுத்தால்
பெற்றோர்களின் முதல்
கேள்வி:
நாயே குடிச்சிட்டு வந்து
வாந்தி எடுக்கிறியா?
யார் வாந்தி எடுத்தாலும்
போய்ஸ்க்குதான் கெட்டப் பேரு!
இது கொடுமை சேர்.

ஒரு குருவி பறந்து வரும் போது தெரியாமல் ஒரு கார் மேல மோதி மயங்கி விழுந்திருச்சி.... அந்த கார் டிரைவர் குருவியை ஒரு கூண்டில் போட்டு அதுக்கு தண்ணீர் கொடுத்தார். மயக்கம் தெளிந்த குருவி என்ன சொல்லிச்சு தெரியுமா?
ஐயய்யோ! நான் ஏன் ஜெயில்ல இருக்கேன்?
கார் டிரைவர் செத்துட்டானா?

என்.எம்.பஸீல், தோப்பூர்.

காதலில் தோற்பது
ஒரு பெரிய
விசயமில்லை.
ஆனால் ஒரு முறை
ஜெயித்துப் பார்,
அப்போது தெரியும்
தோல்வியே மேல்
என்று...

சின்னா, நானுஓயா

### ஓசன்னா பாடல்



படம்- விடை கொண்டு வருவாயா
பாடுபவர்கள் - மாணவர்கள்
இடம் - பரீட்சை மண்டபம்

அந்த நேரம் அந்தி நேரம்
கண்பார்த்து கந்தலாகி போன நேரம் ஏதோ ஆச்சே.
ஒ குயஷ்ஷன்
கையில்
வந்தாச்சு
அப்பாவின் திட்டு எல்லாம் காற்றோடு போயே போச்சு.
ஓஸன்னா என் பென்ஜ்ஜைத் தாண்டிப் போனாளே,
ஓசன்னா
ஆன்சர் ஒன்றும் சொல்லாமலே.
நான் மெண்டல் ஆகிறேன் சுக்கு நூறாகிறேன்
அவள் போன பின்பு
எந்தன் பிட்டைத் தாண்டிப் போகிறேன்
ஹலோ!

நலீஷா பண்டத்தரிப்பு

மறுபிறவி இருந்தால் செருப்பாக பிறக்க வேண்டும்....
என் அம்மா காலில் மிதிபட அல்ல... என்னை
சுமந்த அவளை ஒரு முறையாவது சுமப்பதற்காக...

எஸ்.புஸ்பகுமாரி, இரத்தினபுரி.

மழை வரும் போதும் உன்னை
நினைக்கிறேன்.
வெயில் அடிக்கும் போதும்
உன்னை நினைக்கிறேன்.
பஸ்ஸில் திருடிக்கொண்டுப் போன
என் குடையை மட்டும்
கொடுத்து விடு.

பிரசன்னா, வவுனியா.

கையில் கீ இருப்பவனை
பார்த்து கார் இருப்பவன் என்று
நம்பி விடாதே
ஒரு வேளை அவனுக்கு காக்கை
வலிப்பாகவும் இருக்கலாம்
SO பெண்கள் கவனம்

எப்.நிஸ்ரா, தர்காடவுன்.

அன்று நீ என் அருகில் இருந்தபோது அடிபட்ட காயத்தின் வலி கூட தெரியவில்லை.... இன்று நீ அருகில் இல்லாததினால்
இதயத் துடிப்பு கூட வலிக்கின்றது...

பர்ஷா நிஷாம், நாவலப்பிட்டிய.

### என்னைத் தெரிகிறதா?



பாவனா

லவ் நம்ம மூளை மாதிரி. சரியா வேலை
செய்யலன்னா மெண்டல் ஆகிடும்!
but பிரண்ட் நம்ம ஹார்ட் மாதிரி. நாம
மெண்டல் ஆகினாலும் அது நமக்காக
துடிச்சிக்கிட்டே இருக்கும்.

சிந்து, வத்தளை.

மேக்அப் போடாத பிகரும்
பன்சர் ஆன டயரும் ரோட்டில்
போனதா சரித்திரமே இல்லை

P.R. செலின்னா

### காதல்

காதல் பண்ணிப்பார் மொபைலில்....
வோல்பேப்பர் மாறும், ரிங்டோன்
மாறும், தொடர்பில் கேர்ள்ஸ் நம்பர்
குறையும். இன் பொக்ஸில் மெசேஜ்
வந்து குவியும், கிரடிட் பூஜ்ஜியகும்,
செல்லில் மிஸ்ட் கோல் கொட்டும். பொய்
என்றால் ஒரு முறை லவ் பண்ணிப் பார்.

ரமீஸ்

ஹலோ பெப்ஸி உமாவா?
எனக்கு ஆறு படத்தில்
'பார்க்காத' பாட்டு போடுங்க!
உமா: ஆறு படத்துல நீங்க
பார்க்காத பாட்டு எதுன்னு
எனக்கு எப்படித் தெரியும்....?

எஸ்.சப்ரினா, டீன்புர.

எல்லா பறவைகளும் நடனம்
ஆடுவதில்லை, but
மயில் ஆடும்.
எல்லா மலர்களும் காதலை
சொல்வதில்லை, but
ரோஜா சொல்லும்.
எல்லா குரங்குகளும்
மொபைல் போன்
பாவிப்பதில்லை but
நீங்க கலக்கிட்டீங்க,
போங்க!

வாழ்க்கை என்பது ஐஸ்கிரீம் மாதிரி
சாப்பிட்டாலும் கரையும். சாப்பிடா
விட்டாலும் கரையும். எனவே வாழ்க்கையை
தவறவிடாதீர்கள். கொண்டாடுங்கள்.

S.சதீஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஒஸ்திக்கு பிறகு சிம்பு நடிக்கும் படம் என்ன? உண்மையை சொல்லுங்க சினிமானந்தா, ஒஸ்தி வெற்றிதானே?**
எம்.ஆர்.ஹக்கீன், சிலாபம்

போடா போடி, வேட்டை மன்னன் படப்பிடிப்பு நடக்கிறது. வட சென்னை படப்பிடிப்புக்கு தயாரா இருக்கு. ஒஸ்தின்னா ஒசத்தி. தமிழ் நாட்டு cop தான் டொப்!

## மிக்கவலி தரும் மைக்ரேன்

வலியை நினைக்கையிலே
உடம்பெல்லாம் ஒரே கிலி
தலையிலே வருவதால் மட்டுமல்ல
வலிகளிலேயே தலையாய வலியான
தலைவலியின் தாத்பரியம்
தனக்கு வந்தால் தான் புரியும்

கண்கள் திடீரென இருள
கனதியாக சிறு கலக்கம்
மண்டையின் ஒரு பாதியில்
சம்மட்டியால் அடிப்பது போல

தொண்டையில் ஏதோ கரகரக்க
தொடர்ச்சியான வாந்தி
பக்கவாட்டில் சாய்ந்து
படுத்தேன்.

பரபரப்படைந்த மனைவி, பிள்ளைகள்
பக்கத்து வீட்டுக்கு குரல் கொடுக்க
பறந்து வந்த சகலபாடி
பக்குவமாய் கொண்டு சேர்த்தார்
ஆஸ்பத்திரி

வருத்தம் பல கூறியும்
மருத்துவரின் கேள்விகள் முடியவில்லை
பெருத்த சிரமத்தின் பின்னர்
வாட்டுக்குள் கிடத்தியாங்கு
ஊசியொன்றை ஏற்றிடவே
தோளும் வலித்தது

எக்ஸ்-ரே எடுப்பதற்காய்
எழுந்து போகச் சொன்னார்கள்
வரிசையிலே போய் நின்று
வருமென் முறை என்றிருந்தேன்
தெரிந்தவருக்கு முன்னுரிமை
அடுத்தவருக்கு அலைச்சல்
நினைத்துப் பார்க்கையில்
நெஞ்செல்லாம் குத்துகிறது.

தலைவலிக்கு சிகிச்சை பெற வந்து
பல வலிகள் பார்த்து விட்டேன்
'மைக்ரேன்' வலி என்றார்கள்
மிக்க வலி என்பது மட்டும் உண்மை

வலிகள் பல சுமந்து
வாடி வதங்கி வாட்டில் இருக்கையிலே
பார்வையாளர் நேரத்தில் வந்து
பல கேள்விகள் கேட்போர் தொல்லையும்
தருமே பெரும் வலிகளை!

**தம்பி லெவ்வை இஸ்மாயில்**

**அர்ஜுனுக்கு தொடர்ந்து நாயகனாக நடிக்க முடியுமா? அவரது முகத்தில் சுருக்கம் தெரிகிறதே?**
லொஜிட்டா, நெல்லியடி




நடிகர்கள் முகத்தில் சுருக்கம் தெரிஞ்சா தப்பில்லை. ஹொலிவூட் நடிகர்களை பாருங்க சுருக்கம் வர வரத்தான் மவுசு கூடும். ஆனால் இங்கே நடிகைகள் முகத்துல சுருக்கம் வந்தா ஆளையே மாத்திடுவாங்க.

**சூர்யாவுக்கு எத்தனை குழந்தைகள்? அவர்களது பெயர்கள்...**
எஸ்.ரோசி. யாழ்ப்பாணம்



சரவணன் என்ற நடிகர் சூர்யா. 2006 செப்டம்பர் 11ஆம் திகதி நடிகை ஜோதிகா சதானாவை திருமணம் செய்தார் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள்.
தியா (பிறந்தது 2007 ஆகஸ்ட் 10)
தேவ் (பிறந்தது 2010 ஜூன் 7)



**அடிக்கடி என் கனவில் ஹன்சிகா வருகிறார். என்ன காரணம்?**
மொஹமட் நிப்ராஸ், அட்டுலுகம

கொடுத்து வச்சவரு நீங்க. சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்குங்க (கனவிலேயே)

**ஸ்ருதிஹாசனின் முகத்தில் சிம்ரனின் சாயல் தெரிகிறதே. ஜெயிப்பாரா?**
வை.அரபாத் ஹொரவபொத்தானை.



சிம்ரனை இன்னும் நினைவு வைத்திருக்கிறீங்களே! ஆனால் ஒரு கேள்விக்கு தன் தந்தை பெயர்-தனக்கு தேவைப்படவில்லை என்று சொல்லியிருந்தார். இவர் ஒரு 'நல்ல' பீட்டி. நடிகையாக இனி மேல்தான் நிரூபிக்க வேண்டும். ஆனால் உலக நாயகன் பெயரை வைத்தே ஜெயிக்க வைக்கும் முயற்சி நடக்குது. ரசிகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

**சிம்புவின் 'கியூட் பொண்டாட்டி' கொலை வெறியை மிஞ்சிவிடும் என்கிறார்களே, சத்தத்தையே காணோமே!**
மொஹமட் நிஸாம், அட்டுலுகமை

வகுத்து, பிரித்து, நீட்டி, நிமிர்த்தி, பார்த்தால் கொலை வெறியில் ஒன்றுமே இல்லை. ஆனால் கேட்பவர் எல்லாம் வெறிபிடித்துத் திரிகிறாங்க. குழந்தைகளையும் ஈர்த்து விடுகிறது இப்பாடல். எனவே இது பரவிப் போவதற்கு ஒரு உளவியல் காரணம் நிச்சயமாக இருக்கணும். எனவே இந்த சாங் கதி இல்லாமல்கியூட் பெண்டாட்டி வெற்றிபெற வாய்ப்பு இல்லை. அப்புறம் மெகாஹிட் எப்போதாவது நிகழும் ஒன்று!

**சுப்பர் ஸ்டார் முகவரி கிடைக்குமா?**
பீ.பிரியா, நுவரெலியா

முகவரி தேவைப்படாதவர் தானே சுப்பர் ஸ்டாராக இருக்க முடியும்? சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், போயஸ் கார்டன், சென்னை...... என்று எழுதினால் கட்டாயம் போய்ச் சேரும். ஆனால் கட்டாயம் பதில் வராது நீங்கள் துதிக்கலாம். அவர் அருளமாட்டார்.

**'சிம்பு யாரையாவது' காதலிக்கிறாரா? வெண்டி 'உன்னை பெத்தான், கையில் கிடைச்சா செத்தான் என்று யாரை மனதில் வைத்து பாடுகிறார்?**
எம்.எப். பஸ்னா, கண்டி



சிம்பு இன்னும் பெற்றோரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறார். அவர் காதலிச்சாலும் டி.ஆர்.பூகே பக்கவிளைவால் தான் டும்டும் நடக்கும். அப்புறம் யார் யாரை பெத்திருந்தாலும் சிம்புவுக்கு டி.ஆர் தான் அப்பா. ஏனென்றால் அப்பாவின் கிறுக்குத் தனங்கள் எல்லாம் சிம்புவிடமும் இருக்கிறது. உயிருள்ளவரை உஷா என்று தன் மனைவி பெயரில் படமெடுத்தவர் டி.ஆர்.நயன்தாராவை மறக்க முடியாமல் திட்டிப்பாடித் திரிகிறார் மகன்.

**ஹாய் சினிமானந்தா அடுத்த வானவில்லில் சூர்யாவின் ஆல்பத்தை பிரசுரிக்க முடியுமா?**
ரியாஸா - காலத்தை
கே.நிஜுஷா - புளத்சிங்கள

எதுக்கு அடுத்த வானவில்? இரண்டாம் பக்கத்தை பார்த்தீர்களா. சொல்லு முன்பே வந்துவிட்டதே! அதுதான் வானவில்!

**சினிமானந்தா பதில்களுக்கான சினிமா தொடர்பான உங்கள் கேள்விகளை சுருக்கமாக கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ, எஸ்.எம்.எஸ்ஸிலோ, ஈ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்.**

சினிமானந்தா
பதில்கள்,
வண்ண வானவில்,
த.பெ இல : 1218,
கொழும்பு

மின்னஞ்சல் முகவரி.
vannavaanavil@gmail.com

குறுந்தகவல் இல:
0778 021 501

## வானவில் இதயங்கள்...

**கிடைத்தார் கந்தப்பு வானவில்லுக்கு நன்றிகள்!**

எங்கள் நீண்டகால நண்பரான கந்தப்புவை நாங்கள் தேடி வருவதை உங்களுக்கு நான் சொல்ல, அதை நீங்கள் நல்ல விதமாக பிரசுரித்திருந்தீர்கள். வானவில்லில் இது வெளியானதும் நாங்கள் எதிர்பாராத வேகத்தில் கைமேல் பலன் கிடைத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறோம். பத்திரிகை வெளியான இரண்டாவது நாளே கந்தப்பு தொலைபேசியில் என்னுடன் பேசினார். என்னால் இதை நம்பவே முடியவில்லை! எங்கள் நலம் விசாரித்து பழையதை ஞாபகப்படுத்தி பேசியபோது குரல் தடி தழுத்து அழுதுவிட்டார் நண்பர் கந்தப்பு. எனக்கும் அழுகை வந்துவிட்டது.

இப்போது நாங்கள் அடிக்கடி தொலைபேசியில் பேசிக் கொள்கிறோம். அவரது குழந்தைகளும் சமீபத்தில் எங்களுடன் பாசமாக பேசினார்கள். இறந்துபோன பெறுமதியான ஒன்றை மீண்டும் பெற்றுக்கொண்டதைப் போல நாங்கள் இப்போது உணர்கிறேன். எல்லா நன்றிகளும் எங்கள் அபிமான வானவில்லுக்குத்தான்!

இந்தமாதம் எங்கள் ஊரான மாவனல்லைக்கு கந்தப்பு தன் குடும்பத்தவர்களுடன் வருவதாகக் கூறியிருக்கிறார். அந்த நல்ல நாளுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அவரை எங்கள் வீட்டில் சந்தித்த பின்னர் அந்த சந்திப்பு விபரங்களை வானவில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம். வானவில் ஆசிரிய பீடத்தவர்களுக்கு மீண்டும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன்
திருமதி.ராமலிங்கம்
மாவனல்லை.

---

**மாணவர் தகுதியை எடைபோட புலமை பரிசில் தேர்வு உதவும்**

தரம் 5 ஆசிரியர்களுக்கு சிறுவர் உளவியல் தெரிந்திருக்க வேண்டும். தெரியவில்லை என்றால் அவர்கள் கற்றுக்கொடுப்பதற்கு தகுதி உடையவர்கள் அல்ல.

அதேவேளை வினாத்தாள் வழங்கப்பட்டு பரீட்சை நடத்தும் முறையே விளைதத்துக்குரிய விடயமாக இருக்கும் நிலையில் 10வயது பிள்ளை 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெறுவதையிட்டு பெற்றோர் கவலைப்பட வேண்டியதில்லை. அந்த பரீட்சையே அனுபவமாகக் கொண்டு குழந்தையை உரிய முறையில் பயிற்றுவித்தால் எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளை பெறக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

இது இவ்வாறிருக்க, நோயை அறிந்த பின்னரே வைத்தியர் அதற்கான மருந்தை வழங்குவது போல, குறிப்பிட்ட மாணவர் எந்த தரத்தில் இருக்கிறார் என்பதை இந்த பரீட்சையின் மூலம் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு பெற்றோர் செயற்பட முடியும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பாடத்திட்டம் மாணவர்களை பாதிக்கிறதா? இல்லையா? என்பது தொடர்பாக உங்கள் கருத்துக்களை எழுதுங்கள் என்று வானவில்லில் கேட்டிருந்தோம். அல்லவா? அதற்கு கல்முனைக்குடி - 04 ஐ சேர்ந்த என்.எம்.அனன் மேற்கூறியவாறு எழுதியிருக்கிறார்.

---

**பரிசு கொடுக்க மாட்டீர்களா?**

அன்பின் ஆசிரியரே,

குறுக்கெழுத்து போட்டி, சொற்சிலம்பம், ஆறு வித்தியாசங்கள் ஆகியவற்றுக்கு சரியான விடை எழுதுபவர்களுக்கு பணப்பரிசில் வழங்கினால் என்ன?

எஸ்.எஸ்.ரூமி
அம்பாறை.

இந்த விடயத்தை ஏற்கனவே பரிசீலிப்பில் எடுத்திருக்கிறோம் வானவில் அடுத்த சில மாதங்களில் மாதம் இருமுறை வெளிவருவதற்கான ஏற்பாடுகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு மாதம் இருமுறை வானவில் வெளிவரும் போது உங்கள் வேண்டுகோள் நிறைவேற்றப்படும்.

(ஆர்)

---

எங்கள் டவுனில் ஞாயிற்றுக்கிழமை நாள் சந்தை நடக்கும். அப்போதுதான் வானவில் பத்திரிகையும் வாங்க சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால் சில சமயங்களில் ஞாயிற்றுக்கிழமை சென்றால் வானவில் முடிந்து விடுகிறதே?

ஷகீலா
இங்கிரிய

இதன் காரணமாகத்தானே வானவில்லுக்கு சந்தா முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம். விபரங்களுக்கு 15ஆம் பக்கத்தைப் புரட்டுங்கள்.

6 மாதத்துக்கு அல்லது ஒரு வருடத்துக்குரிய மொத்த பணத்தை அதில் குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு Money Order செய்து விடுங்கள். வானவில் சஞ்சிகையில் சித்திரக் கதை, தொடர்கதை ஆகியவையும் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே தவறாமல் அதனை பெற்றுக்கொள்ள மறக்காதீர்கள்.

(ஆர்)

---

ஆசிரியருக்கு,

வானவில்லில் வெளியாகும் அனைத்து வண்ணங்களுமே super. கவிமுற்றம் பகுதி அசத்தல். அனைத்து கவிதைகளும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. ஆனால் படங்களை உயிரோட்டம் உள்ளவைகளாக தெரிவு செய்தால் மிக நன்றாக இருக்கும் SMS பூக்கள் பூத்து குலுங்குகின்றன. மிகவும் சிறப்பான பகுதியாக உள்ளது. இயற்கையான வானவில்லில் ஏழு வண்ணங்கள். இந்த வானவில்லுக்கு ஆயிரம் வண்ணங்கள். நத்தார் ஸ்பெஷல் இதழ்தான் நான் வாங்கிய முதல் வானவில் அன்றுமுதல் நான் முழுமையான வாசகியாக மாறிவிட்டேன். சிறுகதைகளுக்கு நன்றி. தொடர் கதைகளும் பிரசுரித்தால் நன்றாக இருக்கும்.

நஸீரா[illegible], வேப்பங்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளசுகள் முதல் காதல்...

(05ஆம் பக்கத் தொடர்)

''இதெல்லாம் அண்மைக்கால நவீன நாகரிகத்தின் ஒரு அம்சமாக அறிமுகமாகியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். இது போன்ற கொண்டாட்டங்கள் கலாசார சீரழிவுக்கு வழிவகுப்பதுடன், இன்றைய இளம் பருவத்தினரும் ஆண், பெண் பிள்ளைகளை பாரம்பரிய ஒழுக்கநெறிப் பாதையிலிருந்தும் திசை திரும்பச் செய்கிறது என்றே நான் கருதுகிறேன். எனக்கும் இளம் புதல்வியர் இருக்கிறார்கள். இவர்களையும் வைத்துக்கொண்டு, இதேபோன்ற சிறப்புத் தினங்களை எவ்விதம் வரவேற்க முடியும்?'' என்று பதிலளித்தார் அந்தக் குடும்பத் தலைவர்.

''பழந்தமிழ் இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் காதல் சம்பந்தமாக சொல்லப்பட்டுள்ளதே! இவ்விதமான நிலையில், காதலர் தினம் போன்ற அன்பை வெளிப்படுத்தும் கொண்டாட்டங்களை சமுதாயத்தில் சிலர் வரவேற்றும், சிலர் வெறுத்தும் கருத்துக்கள் சொல்கிறார்கள். இது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?'' என கல்லூரி ஆசிரியர் ஒருவரிடம் கேட்டோம்.

''பழந்தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள காதல் நிகழ்வுகள் புனிதமானவை. பக்தி இலக்கியம் சொல்லும் காதல் ஆன்மிக நெறியிலானது. இன்றைய நவீன காலத்தின் காதல் என்ற பெயரில் நடத்தப்படும் லீலைகள் ஆபாசமானவை, அருவருக்கத்தக்கவை. சாதாரண ஐந்தறிவு படைத்த தெரு நாய்களின் காதல் விளையாட்டுக்கள் அனைவராலும் பார்க்கக் கூடியதாக இருப்பது போலவே, ஆறறிவு ஜீவன்களின் காதல் லீலைகள் பகிரங்கமாகவே பல இடங்களில் அரங்கேறி வருகின்றன என்பதை வெட்கத்துடனும், வருத்தத்துடனும் சொல்லவேண்டும். கடலில் தத்தளிப்பவருக்கு ஒரு துரும்பு கிடைத்துவிட்டால், அதுவே அவர் பிழைத்துக் கொள்வதற்கு உதவுகிறது. அதுபோலவே, காதலர் தினம் என்ற ஒரு கொண்டாட்டம் கிடைத்துவிட்டால், இன்றைய இளம் சமுதாயத்தினர் அதுவே தங்களது இல்வாழ்க்கையின் ஆரம்பமாகவே நினைத்து விடுவார்கள் போலிருக்கிறது. ஒரு பகுதியினரின் வியாபார நோக்கம், இன்னொரு பகுதியினருக்கு விபரீதமாக அமைவதை எவருமே ஏற்றுக்கொள்ள முடியாது'' என்கிறார் அந்த ஆசிரியர்.




## நல்லூர் கந்தசுவாமி...

(23ஆம் பக்கத் தொடர்)

யாழ்ப்பாணத்துக்குள் புகுந்த சப்புமல் குமாரயா மதங்கொண்ட யானை போல், கண்டோரைக் கொன்றான். கட்டிடங்களை அழித்தான். நல்லூருக்குள் புகுந்தது படை. நல்லூர் கந்தசுவாமி கோவிலும் தரைமட்டமாகியது.

பதினேழு வருடம் வட இலங்கையை ஆண்ட இந்த சப்புமல் குமாரயா தன்னால் அழிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தை மறுபடியும் ஆக்கிக் காட்டினான். இடித்துத் தரை மட்டமான கட்டடங்களை கட்டி எழுப்பினான். அவனது படை எடுப்பால் இடித்துத் தள்ளப்பட்ட நல்லூர் கந்தசாமி கோவிலை இரண்டாவது முறையாக முன்பிருந்ததை விடவும் பெரிதாக, கோவிலைச் சுற்றி அகன்ற நெடுமதில்கள் எழுப்பிக்கட்டு வித்தான். ஆனும் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனும், ஒரு சிங்கள மன்னனுமாகிய சப்புமல்குமாரயா ஒரு சைவ கோவிலை தனது படை எடுப்பால் அழிந்த ஒரு சைவத் தேவாலயத்தை ஏன் மறுபடி கட்டி எழுப்பினான்?

யார் இந்த சப்புமல்குமாரயா?

மலையாள தேசத்திலிருந்து வந்த ஒரு பலசாலியான, வாட்போர் வீரன், தென்னிலங்கையை ஆண்ட பராக்கிரமபாகுவின் நம்பிக்கைக்குரியவனானான். அவனது திருமணவயதிலே, தனது குலத்தினளான ஒரு பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்வித்து தன்னுடன் அவர்களையும் சேர்த்துக் கொண்டான். அவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தையே நல்லூர் கந்தசாமி கோவில் புனருத்தாரணம் செய்வித்த சப்புமல் குமாரயா. இயற்பெயர் செண்பக பெருமாள்.

இவன் மலையாள தேசப் பணிக்கனுக்கும் சிங்களப் பிரபுக்கள் குடும்பப் பெண்ணுக்கும் பிறந்தவன். போர்த்துக்கேயரின் நீண்டதும் தொடர்ச்சியானதுமான யாழ்ப்பாண படை எடுப்பு தமிழ் மன்னர்களால் முறியடிக்கப்பட்டே வந்துள்ளது. 1620இல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். தமிழர் படையும் பறங்கியர் படையும் ஒன்றுடன் ஒன்று உக்கிரமாக மோதிக் கொண்ட இடம் இந்த நல்லூர் கந்தசாமிக் கோவில் சந்தியே. ஒரு பக்கம் கந்தசுவாமிக் கோவிலுக்கும் மறுபக்கம் வீரமாகாளியம்மன் கோவிலுக்கும் இடையில் இருந்த வெளியிலேயே இப்போர் நடந்திருக்கிறது. போரில்சேதமானது போக மீதமிருந்த கோவிலையும், அந்நிலைத்துடன் தகர்த்தெறிந்தனர் போர்த்துக்கேயர். சிவாலயங்கள், பௌத்த விகாரைகள் அனைத்தையும் இடித்துத் தரை மட்டமாக்கியதுடன் அவ்விடங்களில் கிறிஸ்துவத் தேவாலயங்களையும் நிர்மாணித்தனர். சங்கபோதி புவனேகபாகு கட்டிய கந்தாலயம் இருந்த இடத்தில் இன்றும் நிற்கிறது கிறிஸ்துவத் தேவாலயம். போர்த்துக்கேயரால் கந்தசுவாமி கோவில் இடிக்கப்பட்டிருந்தாலும், கிறிஸ்துவ தேவாலயம் அமைக்கப்பட்டிருந்தாலும் அதே வளவில் பிறிதோர் இடத்தில் சின்னதாக ஒரு மடாலயம் அமைத்து, வேலாயுதம் நட்டு, கூடி இருந்து கந்தபுராணம் படித்து மத வழிபாடு செய்து வந்தனர். உயரமாகக் கோபுரம் கட்டப்பட்டால் போர்த்துக்கேயர் அதை மீண்டும் இடிப்பர் என்னும் பயம் சைவ பக்தர்களிடம் இருந்தது.

கந்தபுராணம் படிக்கும் இந்தச் சின்ன மடாலயம் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மூன்றாவது உயிர்ப்பு(1734).

போர்த்துக்கேயருக்குப் பிறகு (1620) ஒல்லாந்தர் யாழ்ப்பாண ராஜ்யத்தைக் கைப்பற்றினர் (1658). ஒல்லாந்தர் காலத்திலும் மத விஷயங்களில் பெரிதான வித்தியாசங்கள் ஏதும் நடந்து விடவில்லை. கத்தோலிக்கக் கோவில்களை இடிப்பதிலும் புரட்டஸ்தாந்து கோவில்களைக் கட்டுவதிலும் கத்தோலிக்கர்களையும், பிற மதத்தினரையும் புரட்டஸ்தாந்து மதத்தினராக மாற்றுவதிலுமே கூடுதல் கவனம் செலுத்தினர் ஒல்லாந்தர்.

(தொடரும்)

## சியாத்துவின் பலாமரம்...

(12ஆம் பக்கத் தொடர்)

சியாத்துவின் இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. மரக்காலை அருகில் ஓடிய ஓடை வற்றிவிட்டிருந்தது. அதனாலே வயல்கள் எல்லாம் காய்ந்து கிடக்கின்றன. முழுச் சூழலும் பாழடைந்து போல் வருடக் கணக்கில் பயிரிடப்படாத வயல்களில் எருமை மாடுகள் மேய்ந்துக் கொண்டிருக்கின்றன. சியாத்து வீட்டுக்கு வர நினைக்கின்றான். கீழ் புறம், சிறு பராயத்தில் தானும் தனது நண்பர்களும் மாரிக்காலங்களில் மணிக் கணக்காக நீராடித்து விளையாடிய ஓடை காய்ந்து மண் குவியலாக இருப்பது தெரிகின்றது. ஆங்காங்கே சிறுசிறு குட்டைகளில் மீன்குஞ்சுகள் நெளிகின்றன. இன்னும் சில நாட்களில் அவைகளும் செத்துவிடக்கூடும். வீடு திரும்பிய சியாத்து படங்கு கட்டிலின் முழுநாளையும் கழிக்கின்றான். தனது மனவேதனையை யாரிடம் போய்ச் சொல்வது? மாலையில் தனது மூத்தமகன் பெரிதாக சத்தம் போடுவது கேட்கின்றது.

''இது என்னுடைய காணி. நான் நெனச்சத செய்வேன். நாளைக்கே நான் மரங்களையெல்லாம் வெட்டுவேன். அதபத்தி இங்க யாரும் கேட்க முடியாது. ஆமா நீ மரமுதலாளிகிட்ட போய் என்னா சொன்ன...''

திண்ணைக்கு வந்த சியாத்து படிக்கட்டில் குந்தி, வெற்றிலைப் போட ஆரம்பித்தான்.

''ஒன்னும் தெரியாத மாதிரி இந்தா குந்திக்கிட்டிருக்கிறாரு. என்ன காரணத்துக்காக மரமோல் முதலாளிகிட்ட போன.... நான் மரங்களுக்கெல்லாம் காசவாங்கிட்டேன்''

சியாத்து ஒன்றும் பேசவில்லை. மது போதையிலிருக்கும் அவனோடு வாய் கொடுத்தால் வேறு விபரீதங்கள் நடக்க இடமுண்டு.

''என்னா வாயில புட்டா? தொறக்கிற இல்ல. நீ என்னா வேணுமின்னாலும் செஞ்சிக்க. நான் பயப்பட போறதில்ல. மிச்சம் பேசுனா வீட்ட விட்டும் போக வேண்டி வரும்...''

உடனே சியாத்துவின் மனைவி சொல்கிறாள். ''ஐயோ மகனே அந்த மனுசன, அவர் பாட்டுக்கு இருக்க விடு...''

''இரு–இரு... பாட்டுக்கு இருக்கவுடுறேன். இந்த காணி, வீடெல்லாம் எனக்குச் சொந்தமானது. எனக்கும் என் பொண்டாட்டி புள்ளைகளுக்கு இருக்க நல்ல வீடு இல்ல. இன்னம் ரெண்டொரு நாளில எல்லோரும் வீட்ட விட்டு போயிறனும்... சொல்லிட்டேன் ஆமா...''

ஒன்றுமே பேசாமல் மீண்டும் படங்கு கட்டிலின் சாய்ந்துக் கொள்கிறான், சியாத்து. இலைகள் உதிர்ந்து பட்டுபோன மரக்கிளையொன்றிலிருந்து காகம் ஒன்று விகாரமாகக் கரைகின்றது. குசினியிருந்து ஓடிவந்த சியாத்துவின் மனைவி காகத்தை கல்லெறிந்து துரத்துகிறாள்.

''கெட்ட காலம் வந்திருக்கு. அது தான் காகம் கரையுது... இந்தா வெள்ளைப்பூடு அவிச்ச தண்ணி. இத கொஞ்சம் குடிச்சா மேலுக்கு நல்லா இருக்கும்...'' சியாத்து மௌனமாக வெள்ளைப்பூடு அவித்த நீரைப் பருகுகின்றான். சிறிது நேரம் யோசனையிலாழ்ந்திருந்தவன் எழும்பி தொரட்டி கம்பியை எடுத்துக் கொண்டு போய் பலாக்காய் ஒன்றைப் பிடுங்கிக் கொண்டு வருகின்றான்.

''மகளே இன்னைக்கு ருசியா பலாக்காய் கறிவைச்சிரு....''

படங்கு கட்டிலில் சாய்ந்தவன் மீண்டும் யோசனையிலிருக்கின்றான். இரவு சாப்பாட்டுக்குப் பின்னர், வெற்றிலை மென்றபடியிருந்தவன் ஒருவரிடமும் ஒன்றுமே பேசவில்லை.

பொழுது நன்றாக விடிவதற்கு முன்னரே, பெரியகயிறு, அரிவாள், கோடரி, வெட்டுக் கத்தி ஆகியவற்றுடன் இருவர் வீட்டுக்கு வருவது தெரிகின்றது. அவர்கள் கொண்டு வந்த சாமான்களை திண்ணையில் வைத்து விட்டுச் செல்கின்றனர்.

காலையில் தேனீர் கோப்பையுடன் வந்த சியாத்துவின் மனைவி, அவன் கட்டிலில் இல்லாததைக் கண்டு வெளியில் சுற்றுமுற்றும் தேடிப்பார்க்கின்றாள். சியாத்துவைக் காணவில்லை. காணியிலும் எங்கும் காணப்படவில்லை. நேரம் போய்க் கொண்டிருக்கின்றது. ஊரெல்லாம் வீடு வீடாகத்தேடியும், அகப்படவில்லை. பலரிடமும் விசாரித்து, தேடியுமாயிற்று. இன்றுவரை சியாத்து எங்கே போனான் என்பது தெரியவில்லை.

## மகன் 'தாய்'க்கு கட்டிய...

(10ஆம் பக்கத் தொடர்)

அச்சமயத்தில் பிரேமா க.பொ.த.மாணவி. அவருக்கு கணக்குப் பாடம் படிப்பிக்கத் தொடங்கினார். புத்தகங்கள், இனிப்புகள் போன்ற பரிசு பொருட்களையும் பிரேமாவுக்குத் தரத் தொடங்கினார். பிரேமாவுடன் அன்பு கொண்டுபழகினார்.

பிரேமாமீது சல்காதோ மாஸ்டருக்கு ஒரு கண் இருப்பது போன்ற ஒரு கதை பாடசாலையில் பரவியது. இதையடுத்து சல்காதோ மாஸ்டரே பிரேமாவின் தந்தை ஜூலியன் பெரேராவிடம் வந்து பெண் கேட்டார். முதலில் மறுத்த அவர் பின்னர் திருமணத்தை நடத்தி வைத்தார்.

சல்காதோவின் கதையைக் கேட்ட கோலூருக்கு விஷயம் பிடிபட்டது. அம்மாவை இழந்து தவித்த மகன் சல்காதோ ஒரு மாற்றம் வேண்டி நீர்கொழும்பு வந்தார். அந்தப் பாடசாலையில் முதல் தடவையாக பிரேமாவைக் கண்டதும் அவருக்கு தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் அந்த மாணவி இறந்துபோன அம்மாவின் முகச் சாயல் கொண்டவராக இருந்தாள். சில கோணங்களில் அச்சு அசலாக அம்மா மாதிரியே தோற்றமளித்தாள். இதனால் சல்காதோவுக்கு பிரேமா மீது எக்கச்சக்க ஈர்ப்பு ஏற்பட்டது. எப்போதும் அவருடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்ற தணியாத தாகம் தோன்றியது. எனவே இலவச கிளாஸ் எடுத்ததோடு அன்பளிப்புகளையும் வழங்கிவந்தார். ஒரு கட்டத்தில் அவளை பிரிந்து விட வேண்டியிருக்குமோ என்ற அச்சம் எழுந்ததால், அவளையே திருமணம் செய்து கொள்ளவும் செய்தார் சல்காதோ டீச்சர்.

திருமணத்தின் பின்னர் மனைவியை அம்மா என்றே அழைத்தார். பூபோல வைத்து பார்த்துக் கொண்டார். எல்லாத் தேவைகளையும் நிறை வேற்றி வைத்தார், அந்த ஒன்றைத் தவிர. ஏனெனில் அவர் திருமணம் செய்தது பிரேமா என்ற அழகிய இளம் பெண்ணை அல்ல. அவரைப் பொறுத்த வரைத் தன் தாயாரைத்தான் திருமணம் செய்திருக்கிறார். இனி, தாயுடன் எப்படி பாலியல் உறவு வைத்துக் கொள்வது? அதை நினைத்துதான் பார்க்க முடியுமா?

பிரேமா கட்டுப் பெட்டியான குடும்பத்தில் இருந்து வந்தவள் என்பதால், கணவனே ஆரம்பிக்கட்டும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தாள். கணவனோ ஒவ்வொரு இரவிலும் மறுபக்கமாகத் திரும்பிப்படுத்துக் கொண்டான். காரணத்தை அவளும் கேட்கவில்லை: உன்னில் என் அம்மாவைக் காண்கிறேன் என்று அவரும் சொல்லவில்லை.

சிக்கலைப் புரிந்து கொண்ட டாக்டர் கோலூர், பிரேமாவை வந்து தன்னைப் பார்க்குமாறு தகவல் அனுப்பினார். டாக்டர் கோலூர் பிரேமாவிடம் இந்த உளவியல் சிக்கலை புரியும்படி சொன்னார். மனைவி என்ற வகையில் கணவனின் இந்தத் தவறான புரிதலை, மன மாயையை உடைப்பது உன் கையில்தான் இருக்கிறது என்றார். மனைவி என்ற அந்தஸ்து சட்ட பூர்வமானது. தாம்பத்திய உறவை அனுபவிக்க எல்லா சுதந்திரமும் உனக்கு உள்ளது. கணவன் முன்பாக நீ உடை மாற்றிக்கொள். இரவில் மெல்லிய இறுக்கமற்ற ஆடைகளை அணிந்து கொள். கணவனுடன் சல்லாபமாகப் பேசு. அவன் அங்கங்களை வருடிக்கொடு. இதைச் செய்ய நீ வெட்கப்படத் தேவையில்லை. ஆறு வருடங்களாக புருஷன் உன் உணர்வுகளைத் தட்டி எழுப்புவான் என எதிர்பார்த்திருந்தாய். இனி நீ அவன் உணர்வுகளைத் தட்டி எழுப்பு. நான் உன் அம்மா அல்ல. சட்டபூர்வமான மனைவி என்பதை புரியவை. அவனை சாதாரண கணவனாக்குவது உன் கையில்தான் இருக்கிறது என்று அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தார்.

சுமார் ஒன்றரை வருடங்கள் கழிந்து கோலூரின் வீட்டுக்கு சல்காதோ தம்பதியினர் திரும்பி வந்தார்கள், குதூகலமாக, கையில் ஒரு ஆண் குழந்தையுடன்!

இந்த உண்மைச் சம்பவம் புனர்ஜென்மம் என்ற பெயரில் மலையாளத்தில் திரைப்படமாக வந்து சக்கை போடு போட்டது. பின்னர் தமிழிலும் இதே பெயரில் வெளியாகி வெற்றி பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வூட் விளையாட்டு மைதானம்:



# தாள் திறவாயோ?

**கடந்த இதழில் நுவரெலியா குதிரைப் பந்தய மைதானம் அபிவிருத்தி செய்யப்படாமல் பொட்டலாகக் கிடக்கிறது என்பதை இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். இதைப் படித்த ஒரு வாசகர் எம்முடன் தொடர்பு கொண்டார்.**

“நுவரெலியா மைதானம் மட்டுமா அபிவிருத்தி செய்யப்படாமல் வெறும் அறிவிப்புகளுடன் கிடக்கிறது? அப்படியே கீழே இறங்கி ஹட்டனுக்கு வாருங்கள். ஹட்டன் நுவரெலியாவைப்போல் அதிக குளிர் கொண்ட பிரதேசம் அல்ல. இங்கே இரவிலும் மக்கள் நடமாடுகிறார்கள். சனத்தொகையும் அதிகம். ஹட்டனுக்குப் பக்கத்தில் நோர்வூட் என்ற பொருத்தமான இடத்தில் நோர்வூட் மைதானம் 'சீல்பட்டு' கிடக்கிறது. அதையும் வந்து பாருங்கள்... அப்போதுதான் புரியும், மலையக இளைஞர்கள் விளையாட்டுகளில் முன்னேறி முன்னணி வகிக்கக் கூடாது என்று இந்த அரசியல்வாதிகள் கங்கணம் கட்டி செயல்படுகிறார்களோ என்ற எங்களது சந்தேகம் உண்மையானது என்று...” அவர் தனது ஆதங்கத்தை வார்த்தைகளால் கொட்டித்தீர்த்தார்.


நோர்வூட் ஒரு முக்கியமான மையம். ஹட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவை ஆகிய பிரதேசங்களில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கும் மேலும் குறிப்பாகச் சொன்னால் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பத்துக்கும் மேற்பட்ட பெரிதும் சிறிதுமான பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பயன்படக் கூடிய ஒரு பரந்த மைதானம் இது. மிகச் சாதாரண வசதிகளுடன் இருந்த இந்த மைதானம் இப்பகுதி மக்களால் விளையாட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய நிலையோ தலைகீழ். இதைச் சர்வதேச மைதானமாக்கப் போகிறேன் என்று சொல்லி அதற்கான ஆயத்தங்களையும் செய்தார்கள். பின்னர் எந்தக் காரணமும் சொல்லாமல் மைதானத்தை கைவிட்டு விட்டார்கள். இன்று இந்த மைதானம் பூட்டிக் கிடக்கிறது. யாரும் நுழைய முடியாது. செக்யூரிட்டி கார்ட் போட்டு நுழைவதற்கும் விளையாடுவதற்கும் தடை போட்டிருக்கிறார்கள். முன்னராவது உள்ளே சென்று விளையாட முடியும். அபிவிருத்தியின் பெயரால் இன்று அதற்கும் தடை. இதைத்தான் ஆங்கிலத்தில் 'சட்டியில் இருந்து அடுப்புக்குள்' என்பார்கள். இந்தப் பகுதிப் பெண்கள், 'உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணா' என்பார்கள் என்று விளக்கமாகச் சொன்னார் அந்த அன்பர்.

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பது போல, அது பாட்டுக்குக் கிடந்த நோர்வூட் மைதானத்தை சர்வதேச மைதானமாக அபிவிருத்தி செய்யப் போகிறோம் என்று 1998ம் ஆண்டு இம் மைதானம் மூடப்பட்டது. அன்று பூட்டிய பூட்டுதான் 2012லும் திறக்கப்படாமல் இருக்கிறது.

பூட்டப்பட்ட பின்னர் வேலைகள் எல்லாம் வெகு ஜோராகத்தான் ஆரம்பமானது. வெளிநாட்டு நிதி உதவியுடன் மைதானம் மேம்படுத்தப்படும் என்று அறிவிப்பு வெளியானதும் இப்பகுதி விளையாட்டு வீரர்கள் ரொம்பவே சந்தோஷப்பட்டுப் போனார்கள். அவுஸ்திரேலியாவில் இருந்து புல் கொண்டு வரப்பட்டு வளர்க்கப்பட்டது. கொழும்பு சுகததாஸ மைதானத்தைப் போல சுற்றி இருந்து பார்க்கும் வகையில் ஸ்டேடியம் அமையும் என்றார்கள். ஆனால் ஏனோ அது கைவிடப்பட்டது. பின்னர் பார்வையாளர் அரங்கு கட்டப்பட்டது. அதைப்பார்க்க நோஞ்சான் அரங்கு போலத்தான் தெரிகிறதே தவிர சர்வதேச தரம் கொண்ட மாதிரித் தெரியவில்லை.

ஒரு நீர்த்தாங்கி கட்டப்பட்டது. ஆழமான வடிகால் அமைக்கப்பட்டது. சுற்றிலும் வேலி அமைக்கப்பட்டது. உள்ளரங்கு ஒன்றும் அமைக்கப்பட்டு பூட்டப்பட்ட நிலையில் உள்ளது. கூடைப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டங்களுக்கென தனித்தனி மைதானங்கள் அமைக்கப்பட்டு அவற்றைச் சுற்றிலும் மின்விளக்குக் கம்பங்கள் அமைக்கப்பட்டன.

அவ்வளவுதான். அத்தோடு நோர்வூட் பகுதி மக்களின் சர்வதேச கனவு, கானல் நீரானது. கேட்டுக்கு வெளியே நின்று உள்ளே நோட்டம் விட்டால் சர்வதேச கனவு முடிந்து போன விஷயம் என்பதும் இது புத்துயிர்ப் பெறுவது




சாத்தியமானதல்ல என்பதும் முகத்தில் அறைந்தது மாதிரி நெஞ்சில் உறைக்கிறது.

இந்த மைதானம் அபிவிருத்தி செய்யப்படும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது விளையாட்டுத்துறை தொழில்நுட்பவியலாளர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டதாகவோ அல்லது இவர்கள் சேவையாற்ற அழைக்கப்பட்டதாகவோ தெரியவில்லை. மழை பெய்தால் மைதானத்தில் தண்ணீர் தேங்கி விடுகின்றது. இப்பகுதி அதிக மழை பொழியக் கூடிய மற்றும் தொடர்ச்சியாக பெய்யக் கூடிய ஒரு இடம். மழைக்காலம் ஆரம்பமானால் இம்மைதானம் தண்ணீர் தேங்கி சதுப்பு நிலமாக மாறி விடுகிறது.

இதற்குக் காரணம் என்ன?

ஒரு விளையாட்டு மைதானம் அமைக்கப்படும்போது நிலம் நட்சத்திர வடிவில் அல்லது சூரியக் கதிர் வடிவில் தோண்டப்படும். கரியும் கற்களும் கொட்டப்பட்டு நிலம் சமன்படுத்தப்பட்டு அதற்கு மேல் மண் போடப்படும். இதற்கு மேலேயே புல் வளர்க்கப்படும். அப்போதுதான் மழை நீர் நிலத்தடி கற்களினால் உறிஞ்சப்பட்டு கீழிறங்கும். நோர்வூட் மைதானத்தில் இம்முறை கையாளப்படவில்லை. இதன் காரணமாகவே தண்ணீர் மைதானத்தில் குளமாகத் தேங்கிக் கிடக்கிறது என்கிறார் விளையாட்டுத்துறை அனுபவம் வாய்ந்த ஒருவர்.

மைதானத்துக்கு வெளியே ஆழமான வடிகான் காணப்படுகிறது. இது மூடப்பட்ட நிலையில் இருக்க வேண்டும். பள்ளி மாணவர்கள் வந்து போகின்ற இடமாக இருப்பதால் வடிகால் திறந்து காணப்படுவது ஆபத்தில் முடியலாம்

மைதானங்கள் அபிவிருத்தி என ஆரம்பிக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டு விட்டன. இந்த அபிவிருத்தி சூழலில் சிக்கித் தப்பிப் பிழைத்த ஒரே மைதானம், ஹட்டன் டன்பார் மைதானம் மட்டுமே. அது இன்று ஓரளவு அபிவிருத்தி அடைந்த நிலையில் உள்ளது.

ஒரு மைதானத்துக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசியல்வாதிகளுக்கு புரிவதில்லையோ? என்றுதான் எண்ணத் தோன்றுகிறது இந்த மூன்று மைதானங்களின் கதியையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது!

மைதானம் என்பது உடற்கல்வியுடன் தொடர்புடையது. உதைப்பாந்தாட்டம் விளையாடுவதன் மூலமும் இறைவனை நெருங்கலாம் என்று ஒரு தடவை சுவாமி விவேகானந்தர் கூறிய போது பலரும் புருவங்களை உயர்த்தினர். உதைபந்தாட்டம் உடலை, தசை நார்களை வலுவாக்குகிறது. நிறைய பிராணவாயுவை உள்ளிழுக்க உதவுகிறது. சிந்தனை தெளிவடைவதோடு சோம்பலை அகற்றி உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. எனவே இதுவும் ஒரு சாதகம்தான் என விவேகானந்தர் விளக்கம் அளித்தார்.

இந்த விளக்கம் மலையக இளைஞர்களுக்கும் பொருந்தும். மலையகத்தில் விளையாட்டுகளில் திறமை காட்டக்கூடியவர்கள் பலர் உள்ளனர். ஏற்கனவே இது நிரூபிக்கப்பட்டும் உள்ளது. ஆனால் வசதிகளில் ஆகப் பின் தங்கிய நிலையில் காணப்படுவதும் மலையக விளையாட்டுத்துறைதான். அதற்கு ஒரு நல்ல உதாரணமே இந்த நோர்வூட் விவகாரம்.

பயன்பாட்டில் இருந்த ஒரு விளையாட்டு மைதானத்தை பூட்டி வைக்கும் அநியாயத்தை இங்கே பார்க்கிறோம். மேம்படுத்தப்படும் என்று சொல்லப்பட்ட



பரிதாபமாகக் காட்சி அளிக்கும் மைதானம்

என்று இப்பகுதிவாசி சுட்டிக் காட்டுகிறார்.

கால்பந்து, வலைப்பந்தாட்ட அரங்கு பகுதியில் அவுஸ்திரேலியாவில் இருந்து புல் கொண்டு வரப்பட்டு வளர்க்கப்பட்டது. ஆனால் போதிய பராமரிப்பு இல்லாததினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அந்தப் புல் எதிர்பார்த்த மாதிரி வளரவில்லை. ஆனால் வேறு மைதானங்களில் இப்புல் நன்கு வளர்ந்து பயன்தந்திருக்கிறது என்கிறார்கள் விஷயம் தெரிந்தவர்கள்.

சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மைதான அபிவிருத்தித் திட்டம் பின்னர் ஆறுமுகன் தொண்டமானின் இளைஞர் வலுவூட்டல் அமைச்சின் கீழ் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டு மீண்டும் கைவிடப்பட்டதாக அறிய முடிகிறது.

**டி.எம்.சிவகுமாரன்**

நோர்வூட் மைதானம் இப்போது ஈ காக்கை நுழைய முடியாதவாறு அடைக்கப்பட்டு விட்டது. கொஞ்சம் நஞ்சம் இருந்த விளையாடும் வாய்ப்பும் அற்றுப் போய்விட்டது. இரண்டாவது மைதானமான நுவரெலியாவில் யார் வேண்டுமானாலும் மைதானத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றாலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியமான விளையாட்டுத் திடல் சும்மாக் கிடப்பதும் கிடக்க வைப்பதும் வேதனையானது.

விசி.மைதானம் என அழைக்கப்படும் மூன்றாவது மைதானமான கொட்டகலை ரொசிட்ட பஜாரில் அமைந்துள்ள மைதானத்தை பெரிதாக்கி தேசியத்தரம் கொண்ட மைதானமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மைதானம் விசிவாக்கப்பட்டதுடன் கதை முடிந்துவிட்டது.

இப்படி, மூன்று நுவரெலிய மாவட்ட நுவரெலிய மற்றும் கொட்டகலை மைதானங்களும் கைவிடப்பட்ட நிலையில் கிடக்கின்றன. நோர்வூட் மைதானத்தின் எதிர்காலம் என்னவாக இருக்கும் என்பது எந்த மையெளிச்சக்காரருக்கும் புரியாத புதிராகவே உள்ளது. அந்த குறிஞ்சித் தெய்வத்துக்கே வெளிச்சம்!

எனினும் தேவை அப்படியேதான் இருக்கிறது. இன்று நாட்டின் ஏனைய பகுதிகளில் பல இளைஞர்கள் தோல் பைகளைத் தாங்கிய படி விளையாடுவதற்கான உடைகளுடன் பஸ்களில் பயணிப்பதைப் பார்க்க முடிகிறது. மலையகத்தில் இதைப் பார்க்க முடிவதில்லை. விளையாட்டு என்பது இன்று தொழிலாண்மை சார்ந்ததாகி வருகிறது. கிரிக்கெட் கோடிகளாகக் கொட்டுவதைப்போல உதைப்பந்தாட்டம், பெட்மின்டன், நெட்போல் போன்றவற்றையும் பணவருவாய் தரக் கூடிய ஆட்டங்களாக மாற்றியமைக்க விளையாட்டுத்துறை அமைச்சர் தீர்மானித்திருப்பதாக அவரே கூறியிருக்கிறார்.

இதற்கு மலையகத்தில் இருந்தும் இளைஞர் யுவதிகளை நாம் தயார் செய்ய வேண்டும். இது இன்னொரு பெயர் தரும், பணம் தரும் ஒரு சிறந்த துறை. விளையாட்டின் மீதான காதல், பரவலாக கல்வி ஆர்வத்தைத் தூண்டும் என்பதே உண்மை. மலையகத் தமிழ் சமூகத்தின் மீது ஏனையோருக்கு ஒரு அபிமானத்தைப் பெற்றுத்தரும். இப்படி, நன்மைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்!

சரி, தாள் திறப்பது எப்போது?

அதாவது, குறிப்பாக நோர்வூட் மைதானத்தின். பொதுவாக மலையக மைதானங்களின்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எதற்காக?

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் அதனால் நாட்டுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் தொடர்பாகவும் முழுமையாகவும், இந்த அண்மைக்கால சரித்திர பாடம் தொடர்பாகவும் அறிந்து கொள்வது இப்போது ஒரு தேவையாகியுள்ளது அத்துடன் இவ்வாறு கற்றறியும் பாடங்கள் எதிர்காலத்தில் இனங்களுக்கிடையிலான மோதல் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்வதுடன் சமாதான யுகமொன்றுடன், ஒற்றுமை மக்களுக்கு சுபீட்சம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதாகவும் அமையும் என்பது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் கருத்தாகும்.

**செயற்பாடு:**

எனவே 2002 பெப்ரவரி 21 ஆம் திகதிக்கும் 2009 மே 19 ஆம் திகதிக்கும் இடையில் இடம் பெற்றிருக்கக்கூடிய சம்பவங்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 2002 பெப்ரவரி 21 ஆம் திகதி அமுலுக்கு வந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை தோல்வியடைவதற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலை மற்றும் அதன் பின்னர் இடம் பெற்ற சம்பவங்கள், அதனையடுத்து 2009 மே 19 ஆம் திகதி வரை இடம் பெற்ற சம்பவங்கள்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக எந்தவொரு நபரோ, குழுவோ அல்லது அமைப்போ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இதற்கு பொறுப்பேற்குமா' நல்லிணக்க ஆணைக்குழு மேற்படி சம்பவங்களில் இருந்து இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்ய உதவும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை சர்வதேச மன்னிப்பு சபை, புகலிடத் தமிழர்கள் விமர்சித்துள்ளனர். எவ்வாறாக இருந்தாலும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டத்தின் ஆட்சி, சுதந்திர ஆணைக்குழுக்கள், தமிழ் மக்களின் உரிமைகள் ஊடக சுதந்திரம், கலகங்களினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி ஆக்கபூர்வமான விதப்புரைகளை முன்வைத்துள்ளது.



இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த இந்திய அமைச்சர் கிருஷ்ணாவுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடுகிறார்.

**பகிரங்க ஆவணம்:**

அது மட்டுமன்றி ஜனாதிபதி இந்த விதைப்புரைகள் அடங்கிய ஆணைக் குழுவின் அறிக்கையை ஒரு பகிரங்க ஆவணமாக பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார். அவர் இந்த அறிக்கையை முழுமை யாக வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் ஒரு சட்டபூர்வமான ஆவணமாக இதனை பாராளு மன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கிறார்.

இதற்கு முன்பு இருந்தது போல இந்த ஆவணங்கள் மூடு மந்திரமாக ஒளிந்திருக்க வில்லை அத்தோடு நின்று விடாது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பற்றி சர்வதேச சமூகத்தை அறிவூட்டும் செயல் முறையும் வெளிநாட்டு விவகார அமைச்சின் ஊடாக ஆரம்பித்திருக்கிறார். இதனால் சகல தரப்பினருக்கும் இந்த அறிக்கையை வாசித்து தத்தமது கருத்துக்களை தெரிவித்து உரையாடும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுத்திருக்கிறார். அத்துடன் அந்த விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கான பொறி-முறைகளை தாம் ஏற்படுத்தப் போவதா-கவும் உறுதி அளித்திருக்கிறார் அதன் பயனாக பாராளுமன்ற தெரிவிக்குழு போன்ற பரந்த நிருவன அமைப்பை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழு சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அமைக்கப் படவில்லை என்று சில சர்வதேச நிறுவனங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன. எனினும் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியும் அரசும் இந்த ஆணைக் குழுவை நியமித்திருக்கிறது.

இந்த ஆணைக்குழுவிலே அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் சட்டத் துறையில் நீண்டகால அனுபவம் பெற்றவர்கள். இலங்கையின் பல்லின சமூகத்தை பற்றி பலிக்கும் வகையில் அந்த நியமனங்கள் அமைந்துள்ளன. நமது நாட்டில் இருக்கும் இந்த ஆவணக் குழுவுக்கு நாட்டில் உள்ள நம்பகமான வழிகளில் இருந்து ஆதாரங்களை திரட்டி தீர்மானங்களை மேற்கொள்ள தேவையான மூலங்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் இருக்கிறது. எனவே சர்வதேச ரீதியான நியமங்களுக்கு ஏற்ப இது அமைக்கப்படவில்லை என்று கூறினாலும் இந்த ஆணைக்குழு தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான நியமங்களையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

---

இனப்பிரச்சினைக்கு தீர்வு

# இந்திய அமைச்சருக்கு ஜனாதிபதி உறுதிமொழி

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை காண்பதற்காக 13ஆம் திருத்தத்துக்கும் கூடுதலாக ஆராய்ந்து தீர்க்கமான நல்ல முடிவை எடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தன்னிடம் உறுதியளித்திருப்பதாகவும் இந்த உறுதிமொழி குறித்துதாம் பெரு மகிழ்ச்சியடைவதாகவும் இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கையை விட்டு செல்லுமுன் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் கிருஷ்ணா இதனை தெரிவித்தார்.

**நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை: இந்தியா வரவேற்பு**

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இந்தியா வரவேற்கிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசு களை இலங்கை அரசாங்கம் காலதாமதப்படுத்தாமல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறுகிறார்.

இலங்கை அரசாங்கம் அரசியல் ரீதியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா வும் தனது பங்களிப்பை வழங்கி ஒத்துழைப்பு தர தயாராக இருப்பதாக வும் அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்தார்.

**ஜனாதிபதி நல்ல பண்பாளர் இந்திய அமைச்சர் கிருஷ்ணா பாராட்டு**

இலங்கை ஜனாதிபதி ஒரு நல்ல பண்பாளர் என்பதை நான் புரிந்து கொண்டேன் என்று தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சர், கடந்த மாதம் அலரி மாளிகையில் பொங்கல் விழா நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த போதிலும் தான் மாலையில் தான் கொழும்பு வந்து சேருவேன் என்பதை அறிந்து கொண்ட ஜனாதிபதி அவர்கள் அந்த விழாவை நானும் கலந்து கொள்வதற்கு வகை செய்வதற்காக மாலை வரையில் ஒத்திவைத்தார் என்றும், இதனால் நான் மனம்நெகிழ்ந்த ஜனாதிபதியை பாராட்டினேன் என்றும் கூறினார்.

**மீனவர் பிரச்சினை மனிதாபிமான முறையில் கையாளப்பட வேண்டும்**

மீனவர் பிரச்சினை பற்றி பிரஸ்தாபித்த இந்திய அமைச்சர், மீனவர்களும் மனிதர்கள் என்பதை உணர்ந்து இலங்கை, இந்திய தரப்பினர் இரு சாராரும் அவர்களை மனிதாபிமான முறையில் நடத்த வேண்டுமென்றும், சமீபத்தில் நடந்து முடிந்த இலங்கை, இந்திய கடற் றொழில் பற்றிய கூட்டத்தொடரில் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மேலும் தெரிவித்தார்.

**ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்து**

இந்திய வெளியுறவு அமைச்சரின் விஜயத்தை முன்னிட்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும இடையில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இலங்கையும், இந்தியாவும் வரலாற்று காலம் முதல் ஆரம்பகால நாகரீகயுகத்தில் இருந்து நட்புறவுடன் இருந்து வரும் இரண்டு நெருங்கிய நாடுகளாக விளங்குகின்றன. எனவே, எங்கள் நாடுகளுக்கிடையில் தோன்றக்கூடிய பிரச்சினைகளை நாம் எங்களுக்கிடையிலான நட்புறவுக்கு முக்கியத்துவமளித்து பேச்சுவார்த் தைகளை முன்னெடுப்பதன் மூலம் தீர்த்து வைக்கமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருக் கிறோம் என்று இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறினார்.

**இனப்பிரச்சினைக்கு தீர்வுக்கு காலக்கெடுவிதிக்கக் கூடாது**

பத்திரிகையாளர் மாநாட்டின் போது ஒரு பத்திரிகை ஆசிரிரியர் இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக ஒரு காலக்கெடு இருக்கிறதா? என்று கேட்டார்.அதற்கு பதிலளித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இது போன்ற உணர்வுபூர்வமான அரசியல் தீர்வுகளை தீர்த்து வைப்பதற்கு காலக்கெடு விதிப்பது கடினமான விடயமென்று கூறினார். நாம் இந்த விடயம் தொடர்பாக சகல தரப்பினருட னும் மனம் விட்டு பேச வேண்டும். அந்த பேச்சுவார்த்தைகளின் மூலம் தெரிவிக்கப்படும் கருத்துக்களை அடிப்படையாக வைத்து, நாம் சில யோசனைகளை முன்வைத்து, உரையாடுவதன் மூலம் ஒரு நிரந்தர தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு உதவ முடியுமென்பதில் நாம் அசையாத நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று அவர் கூறினார்.

**பாராளுமன்ற தெரிவுக்குழு: முடிவு காண சிறந்த மேடை**

பாராளுமன்ற தெரிவுக்குழுவே இனப் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவை காணக்கூடிய ஒரு சிறந்த மேடையாக விளங்குகிறது. எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்த வாய்ப்பை நழுவ விடாமல் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தங்கள் உறுப்பினர்களின் பெயரை முன்மொழிய வேண்டும். இதன் மூலமே எங்கள் நாட்டின் நீண்டகாலம் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காணமுடியும் என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

இந்தியா இலங்கையின் ஒரு நெருக் கமான நட்பு நாடு. கடந்த காலத்தில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் இந் தியா எங்களுக்கு உதவி செய்திருக் கின்றது. இந்த நட்புறவை எதிர் காலத்திலும் பாதுகாத்து நீடிக்க முடியு மென்று நாம் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இலங்கை இந்திய மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர் முன் உரையாடுகையில் கூறினார்.

**இலங்கை - இந்திய நட்புப்பாலம் வலுவடையும்**

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடை யிலான நட்பு பாலத்தை மேலும் வலுவூட்டுவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் இந்த விஜயம் தொடர்பாக ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டன. 40 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற் கான முதலாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் கைச்சாத்திட்டனர்.

விவசாயதுறை அபிவிருத்தி செய்வ தற்காக இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் விவசாய அமைச்சின் செயலாளர் டபிள்யூ சகல சூரியவும் இங்குள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தாவும் கைச்சாத்திட்டனர்.

மூன்றாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவுக்கும் இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பல்பிட்டவும், இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஜே.எஸ்.சர்மாவும் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

வடபகுதியின் இரயில் சேவையை மீளமைப்பதற்காக இந்திய அரசாங்கம் 382.37 மில்லியன் டொலர் கடனுதவிக் கான நான்காவது புரிந்துணர்வு ஒப்பந் தத்தில் எமது திறைவேரி செயலாளர் டாக்டர் பி.பீ.ஜெயசுந்தரவும், இந்திய எக்ஸிம் வங்கியின் தலைவரும், முகாமைத்துவ பணிப்பாளருமான ரி.சி.ஏ.ரங்கநாயகமும் கைச்சாத்திட்டனர்.

ஐந்தாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தம்புள்ள நீர்விநியோக திட்டத்திற்கு இந்தியாவின் தேசிய ஏற்றுமதி காப்புறுதி திட்டத்தின் கீழ் 60.69 மில்லியன் டொலர் கடனுதவி கொடுக்கப்படும். இதில் டாக்டர் பீ.பி.ஜெயசுந்தரவும், ரி.சி.ஏ.ரங்கநாதனும் கைச்சாத்திட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதி : காதலின் கொலைவெறி பக்கம்

காதலும், பாலுணர்வும் எவ்வளவு மகிழ்ச்சியையும் உல்லாசத்தையும் தருமோ அதே போல் அதன் அடுத்த பக்கம் மரணத்தையும் வேதனையையும் அள்ளித் தரும். குறிப்பாகப் பெண்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

கணவன் இறந்தால் அல்லது வேறொருவன் தன்னை அடைய முற்பட்டால் பெண்கள் தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொள்வது இந்தியாவெங்கும் ஒரு சமயத்தில் நடைமுறையில் இருந்த கொடூரமான ஒரு வழக்கமாகும். இதை பொதுவாக சதி என அழைக்கிறார்கள். இது வடமொழிச் சொல். தமிழில் உடன் கட்டை ஏறுதல் என்கிறோம். தீக்குளித்தல் என்றும் அழைக்கலாம். இதற்கு தெய்வீக சாயம் பூசப்படுகின்ற போதிலும் இது தற்கொலை முயற்சியே தவிர வேறில்லை.


ரூப்கன்வர் தன் கணவருடன்

ராஜாராம் மோகன்ராஜ் என்பவரே சதி முறைக்கு சட்ட ரீதியாக தடை கொண்டு வந்தார். இன்று இந்தியாவில் உடன் கட்டை ஏறுதல் தண்டனைக்குரிய குற்றம். ஆனால் பண்டைய இந்தியாவில் சதிமாதாக்கள் போற்றுதலுக் குரியவர்களாகவும் சிறு தெய்வங்களாகவும் மதிக்கப்பட்டனர்.

இராமாயணத்தில் சீதை தீக்குளிப்பதாக வருகிறது. மத்தியகால ஐரோப்பாவில் சூனியக்காரிகளைத் தேடி வேட்டை நடைபெற்ற போது சூனியக்காரிகளைப் பிடித்து கல்லைக் கட்டி ஆற்றில் வீசுவார்களாம், சூனியக்காரி என்றால் அவள் நீரில் மிதப்பாளாம். உடனே அவளைப் பிடித்து எரியூட்டி கொன்று விடுவார்கள். மிதக்காத அப்பாவிப் பெண்கள்? அதோகதி-தான். சூனியக்காரிகளையும் கடும் தண்டனை விதிக்கப்பட்டவர்களும் தீவைத்து கொளுத்தப்படுவது அன்றைய ஐரோப்பாவில் வழமை யானது. அமெரிக்கக் கண்டத்தில் வாழ்ந்த செவ்விந்தியாகளிடம் எரிமலைகளின் சீற்றத்தைத் தணிப்பதற்காக கன்னிப்பெண்களை குமுறும் எரிமலைக்குள் தள்ளி விடும் வழக்கம் இருந்தது.

இந்தியாவில் இப்போதும் கூட மிக இரகசியமாக உடன்கட்டை ஏறுதல் நடக்கத்தான் செய்கிறது. 1987ம் ஆண்டு செப்டெம்பர் 04ம் திகதி ராஜஸ்தான் மாநிலத்தின் டெயோரலா என்ற சிற்றூரில் 18 வயதேயான ரூப்கன்வர் என்ற யுவதி, தன் கணவனின் சிதையில் ஏறி உயிரை மாய்த்துக் கொண்டார். இச்சம்பவம் இந்தியாவெங்கும் அதிர்ச்சியலையை ஏற்படுத்தியது. அதிர்ந்துபோன அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி, கடும் நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டார்.


கணவர் உடலை மடியில் கிடத்தியபடி மனைவி அமர்ந்திருக்க வேண்டும்

ஒவ்வொரு வருடமும் ரூப்கன்வர் ஊடகங்களின் ஊடாக நினைவுபடுத்தப்படுகிறார். சதிமுற்றாக நடைபெறக் கூடாது என்பதை வலியுறுத்தும் சமூக மற்றும் மகளிர் இயக்கங்கள் ரூப்கன்வரை ஒரு அடையாளமாக நிறுத்தி ஊடகங்களின் ஊடாக நிறைவுபடுத்தி வருகின்றன.

'சத்யவிரதா' (சத்திய விரதம்) என்பதே சதி என அழைக்கப்படுகிறது. மகாபாரதம் இராமாயணம் ஆகிய இதிகாசங்களிலும் உடன்கட்டை ஏறுதல் பற்றி குறிப்புகள் வருகின்றன. கி.மு.4ஆம் நூற்றாண்டில் மகா அலெக்சாந்தரின் படை வீரர்கள் பஞ்சாப் பிரதேசத்தை அடைந்தபோது அம்மக்கள் உடன்கட்டை ஏறும் பழக்கத்தைக் கொண்டிருந்ததை அவர்கள் அறிந்து கொண்டதாக குறிப்புகள் உள்ளன.

உடன்கட்டை ஏறுதல் இப்போது வட இந்திய மாநிலங்களில் அவ்வப்போது இரகசியமாக நடைபெற்று வந்தாலும் ஒரு காலத்தில் இந்தியாவெங்கும் இது கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. சென்னையிலும் தஞ்சாவூரிலும்



உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்திருக்கிறது. 1680ஆம் ஆண்டில் சென்னை கவர்னர் உடன்கட்டை ஏறுதலைத் தடை செய்ததாகக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

சித்தூர் அரசர் ராணா ரத்தன் சிங் தான் போரில் தோல்வியடையப் போவதையும் தன் மனைவி பத்மினி, மொகலாய மன்னன் அலாவுதீன் கில்ஜியிடம் சிக்கப் போவதையும் உணர்ந்து கொண்டார். கோட்டையினுள் பெரும் தீ வளர்க்கப்பட்டது. அலாவுதீன் கில்ஜியின் கையில் சிக்க விரும்பாத பத்மினி தீயில் பாய்ந்து தன்னை மாய்த்துக் கொண்டார். பின்னர் ஏனைய ராணிமார், அந்தப்புரத்து அழகியர், அமைச்சர்கள் மற்றும் ஏனைய பிரதானிகளின் மனைவிமார் மற்றும் மகள்மார் அனைவரும் தீயில் பாய்ந்து தம் உயிரை மாய்த்துக் கொண்டனர். சுமார் 600 பெண்கள் தீயில் தம்மைப் பொசுக்கிக் கொண்டதாக கூறப்படுகிறது. சித்தூர் கோட்டையைக் கைப்பற்றிய அலாவுதீன் கில்ஜி, இராணி பத்மினியை அடைவதற்காகக் கோட்டையெங்கும் சல்லடை போட்டுத் தேடினான். இறுதியில் அவனுக்குக் கிடைத்தது கருகிய பெண்களின் உடல்கள் மட்டுமே!



1801ஆம் ஆண்டு திருவாங்கூர் மகாராஜா மரணமடைந்த போது அவரது இரு மனைவிமாரும் சதி செய்து கொண்டனர். உடன்கட்டை ஏறி முடிந்ததும் மகாராஜாவின் வேலையாட்கள் ராணிமாரின் மிகுதி எலும்புகளைப் பொறுக்கி பொடியாக அரைத்தனர். பின்னர் இந்த எலும்புப் பொடி சோறுடன் கலக்கப்பட்டு 12 பிராமணர்களுக்கு உணவாகக் கொடுக்கப்பட்டது.

உடன்கட்டை ஏறும் பெண்ணுக்கு வலி தெரியாது என்று ஒரு ஐதீகம் உண்டு. சிதையில் ஏறியதும் அவரது உடல் குளிர்ந்து போய்விடுமாம். தீயால் உடல் கருகும் போது அவருக்கு வலிக்காதாம். மேலும் பற்றி எரியும் தீ அப்பெண் அணிந்திருக்கும் ஆடைகளை பொசுக்கி அவரை நிர்வாணமாக்கி விடாதாம். ஆனால் இக் கூற்றுக்கு எல்லாம் ஆதாரம் கிடையாது.

1301இல் சுல்தான் அலாவுதீன் கில்ஜிரன்தம்பூர் கோட்டையை முற்றுகையிட்டார். கோட்டைக்குள் சிக்கிக் கொண்ட ராஜபுதன அரசர் அமீர் தேவா தான் முஸ்லிம் படைகளிடம் வீழ்ச்சி காணப்போவதை நன்கு உணர்ந்து கொண்டார். ஒரு நாள் இரவு கோட்டைக்குள் தீ வளர்க்கச் சொல்லிய அமீர்தேவா, தன் குடும்பப் பெண்களையெல்லாம் உடன்கட்டை ஏறச் செய்தார். மறுதினம் மிகுதி ஆண்களுடன் களத்தில் கில்ஜியின் படையைச் சந்தித்து அமீர்தேவா உயிர் துறந்தார்.

இந்தியாவில் அரச அதிகாரியாகக் கடமையாற்றிய சரித்திர ஆசிரியர் பிலிப்மேசன் வங்காளத்தில் நடைபெற்று வந்த தீக்குளிப்பைப் பற்றி குறிப்பிடு கையில், பத்தில் ஒன்பது பெண்கள் அச்சத்துடனும் நடுக்கத்துடனும் தான் உடன்கட்டை ஏறினர் என்கிறார். கணவனின் உடலோடு மனைவியின் உடலை சேர்த்துக் கட்டிய பின்னரே சிதைக்குத் தீமுட்டப்பட்டது என்கிறார் இவர்.

ஒரு தடவை தீக்குளிப்புக்கு விதவை ஒருவர் கட்டாயப்படுத்தப்பட்டார். சிதை பாதி எரிந்து கொண்டிருந்த போது மழை சோவெனக் கொட்டி தீயை அணைத்து விட்டது. அவ்விதவையும் தனக்கு இறைவன் கருணை காட்டிவிட்டார் என நினைத்து சிதைக்கு வெளியே பாய்ந்து புதரில் ஒளிந்து கொண்டார். ஆனால் வெறிபிடித்த கூட்டம் அப்பெண்ணை தேடிப் பிடித்து கையையும் காலையும் சேர்த்துக் கட்டி எரியும் சிதையில் மீண்டும் தூக்கிப் போட்டு தமது வெறியைத் தணித்துக் கொண்டது.

1980ம் ஆண்டு உத்தர பிரதேசத்தில் 35 வயதான ஆர்தேவி என்ற பெண் உடன்கட்டை ஏறிய போது பொலிசார் தலையிட்டு அதைத் தடுத்து அப்பெண்ணைக் கைது செய்தனர். பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டதும் அவர் மீண்டும் உடன்கட்டை ஏறமுயற்சித்தார். ஆர்தேவி தீக்குளிக்க முயற்சிக்கிறார் என்ற செய்தி எட்டியதும். நூற்றுக்கணக்கானோர் அவரை சூழ்ந்து கொண்டு வாளிவாளியாக நெய்யை தலையில் ஊற்றி தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்து 'வெற்றிகர'மாக சதியை நிறைவேற்றி வைத்தனர்.



## ராஜாராம் மோகன்ராய்

வங்கப் பெருநிலத்தில் சதியை சட்ட ரீதியாக முதன்முதலில் ஒழித்துக் கட்டிய பெருமை கவர்னர் வில்லியம் பென்டிங்கை சாரும். எனினும் இவருக்கு உறுதுணையாக நின்று உழைத்தவர் ராஜா ராம் மொகன்ராஜ் என்ற வங்கத்து சிங்கம்.

இந்தியர்களின் சமய மற்றும் கலாசார விடயங்களில் தலையிடுவதில்லை என்ற அடிப்படையிலேயே இந்தியாவை பிரிட்டிஷ் அரசு ஆண்டு வந்தது. இதனால் உடன்கட்டையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. 1803ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் புதுடில்லியின் 30 மைல் சுற்று வட்டாரத்தில் 438 விதவைகள் உடன்கட்டை ஏறினாராம். ராம்மோகன் ராயோ, இது முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்.

ராம்மோகன் ராய் உயர்குலத்தவர். இந்து சமயத்தில் புலமை கொண்டவர். உடன்கட்டை இந்து சமயத்துக்கு முரணானது என்பது அவரது கொள்கையாக இருந்தது. தன் சகோதரனின் மனைவியை அவளது உறவினர்கள் பலாத்காரமாக உடன்கட்டை ஏறச் செய்ததைக் கண்ட அவர் இக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என விரும்பினார். இதை சட்ட ரீதியாகத் தடை செய்வது சமூக அமைதியின்மையை ஏற்படுத்தலாம் என்று வெள்ளையர் கருதினர். அதைத்தான் பார்த்துக் கொள்வதாகக் கூறிய ராம்மோகன் ராய், இந்து பண்டிதர்கள் மத்தியில் எதிர்த்து பிரசாரம் செய்து வந்தார்.

கவர்னர் பென்டிங்க் தடை சட்டம் கொண்டுவந்த போது அதற்கு பின் புலமாக ராயே விளங்கினார். ஒரு பெண் தானாக முன்வந்து தீக்குளிக்க முற்பட்டால், அதற்குத் தூண்டிய உறவினாகள், ஒரு தற்கொலை முயற்சிக்கு உதவிய குற்றத்துக்காகத் தண்டிக்கப்படுவார்கள் என்று இச்சட்டம் கூறியது.


இச் சட்டத்தை எதிர்த்து லண்டன் பிரிவி கவுன்சில் என்று அழைக்கப்பட்ட மேன்முறையீட்டு மன்றத்துக்கு சதி ஆதரவாளர்கள் மேன் முறையீடு செய்தனர். உடனே ராய் லண்டன் சென்று, இந்த சட்டத்துக்கு ஆதரவாக வாதாடி, வெற்றியுடன் நாடு திரும்பினார்.

பின்னர் 1860ம் ஆண்டு இது முழுமையான சட்டமானது. 1833இல் சதிக்கு எதிராக பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்த ஒரு சட்டத்தில் இந்திய சிற்றரசுகள் பிரிட்டிஷ் அரசிடம் ஏதேனும் உதவி கேட்கும் போது அதைச் செய்வதற்காக நிபந்தனையை விதித்தது. உதவி பெறும் சிற்றரசுகள் தமது எல்லைகளுக்குள் உடன் கட்டை ஏறுவதை முற்றாகத் தடை செய்ய வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

1825ம் ஆண்டு வங்க மாநிலத்தில் மட்டும் 650 விதவைகள் உடன்கட்டை ஏறினாராம். சுதந்திர இந்தியாவில் 30கும் அதிகமான உடன் கட்டை ஏறல் நடைபெற்றிருப்பதாக கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கிறது. இந்த உடன் கட்டை ஏறும் வழக்கம் உத்தர பிரதேசம் மற்றும் ராஜஸ்தானிலேயே பரவலாகக் காணப்பட்டது. இந்தியாவில் மொத்தம் 140 சதி கோவில்கள் உள்ளன. இதில் 80 கோவில்கள் ராஜஸ்தானில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை



# எட்டு மில்லியன் ஆண்டுகளாக வாழ்ந்துவரும் ஒட்டகச்சிவிங்கி

இரட்டை குளம்புள்ள ஆடு, மாடு, குதிரை போன்ற மிருகங்களிலேயே மிக உயரமான மிருகம் ஒட்டகச் சிவிங்கி மாத்திரமே. இது ஒரு தாவர உண்ணி. புல், இலை தழைகளைச் சாப்பிடும். இதன் கழுத்து ஏனைய மிருகங்களின் கழுத்துகளை விட 150 தடவை உயரமானது. இவ்வளவு நீண்ட கழுத்து வேறு எந்த மிருகத்துக்கும் கிடையாது. ஏன் ஒட்டகச்சிவிங்கிக்கு மட்டும் இத்தனை நீண்ட கழுத்து அமைந்திருக்கிறது? அவ்வாறு அமைந்ததற்கான உயிரியல், சுற்றுச் சூழல் காரணிகள் யாவை என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் பல உயிரியல் விஞ்ஞானிகளால் முன் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் சரியான காரணம் யாருக்கும் தெரியாது.

ஒட்டகச் சிவிங்கி ஆபிரிக்க கண்டத்தில் மட்டுமே காணப்படுகிறது. வடக்கு ஆபிரிக்காவில் இருந்து தெற்கு ஆபிரிக்கா வரையிலான கானகப் பகுதிகளில் உள்ள கோரைப்புல் வெளிகளில் இவை கூட்டம் கூட்டமாக வசிக்கின்றன. பெரும்பாலும் அக்ரேஷியா என அழைக்கப்படும் மரங்கள் காணப்படும் இடங்களில் இவை வசிக்கின்றன. ஏனெனில் இம்மரத்தின் இலைகளை இவை விரும்பி உண்கின்றன.



ஒட்டகச்சிவிங்கி ஜிராபிடே என்ற விலங்கு குடும்பத்தைச் சேர்ந்தது. இக் குடும்பத்தில் இரண்டு பிரிவு விலங்குகளே அடங்குகின்றன. ஒன்று ஒட்டகச் சிவிங்கி, இரண்டாவது ஒகாபி. இது ஒட்டகம், வரிக் குதிரை மற்றும் சிவிங்கி ஆகியவற்றின் தோற்றத்தைக் கொண்டிருக்கிறது.(படம் பார்க்க). ஒட்டகச் சிவிங்கிகளில் ஒன்பது இனங்கள் உள்ளன. உங்கள் பார்வைக்கு ஒரே மாதிரித் தோற்றம் அளித்தாலும் உயரம், வாழும் இடங்கள், தோற்றம், அளவு, நிறம் என்பனவற்றை வைத்து உயிரியலாளர்கள் ஒன்பதாக பிரித்துள்ளனர். 2007ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் ஆறு பிரிவுகள் இருப்பதாகவே தெரியவந்துள்ளது. எனினும் அழிந்து வரும் உயிரினங்கள் என்ற பிரிவில் ஒட்டச் சிவிங்கிகள் இல்லை என்பது ஒரு ஆறுதலான விஷயம்.

ஆபிரிக்கர்கள் ஒட்டகச்சிவிங்கி மாமிசத்தை ஒரு விசேட உணவாக சமைத்து உண்கின்றனர். விசேட விருப்ப உணவாக அது ஹோட்டல்களில் பரிமாறப்படுகிறது. மனிதர்களைத் தவிர சிங்கம், சிறுத்தை, ஹைனா எனப்படும் கழுதைப்புலி என்பனவும் சிவிங்கிகளை அடித்து சாப்பிடுகின்றன.

நன்கு வளர்ந்த சிவிங்கிகளில் ஆண் அயிரத்து 200 கிலோ எடையும் பெண் 850 கிலோ எடையும் கொண்டதாக விளங்குகின்றன. இவை 16 அடி முதல் 20 அடிவரை வளரும். மொத்த உயரத்தின் அரை வாசிப்பாகத்தை இதன் கழுத்தே எடுத்துக் கொள்கிறது.

ஒட்டகச் சிவிங்கிகள் எட்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்ததற்கான பாறைப்பதிவு சான்றுகள் உள்ளன. இவ்வளவு காலமாக மிருகங்களின் மற்றும் மனிதர்களின் தாக்குதல்களுக்கும், இயற்கை மாற்றங்களுக்கும் தாக்குப் பிடித்து இவை வாழ்ந்து வந்திருப்பதே ஒரு சாதனை தான்!

சிவிங்கிகளின் கண்கள் வர்ண வித்தியாசங்களை அடையாளம் காணக் கூடியவை. இதன் நாக்கு 20 அங்குல நீளம் கொண்டது. இலை தழைகளைப் பற்றிப் பிடித்து உருட்டி, சுருட்டி இழுப்பதற்கு மேல் உதடு பயன்படுகிறது. கொம்புகள் இரத்த ஓட்டம் கொண்டவையாக இருப்பதால் வெப்ப மாற்றங்களை இவற்றினால் உணர முடிகிறது.

கி.மு. 46 இல் ஜூலியஸ்சீசர் இதை ரோமுக்கு கொண்டு சென்று மக்கள் பார்வைக்கு வைத்தார். அரபிய தீர்க்க தரிசிகள் மிருகங்களின் அரசி என அழைத்தனர்.

சிவிங்கிகள் காடுகளில் இருபது வருடங்களும் மனித வளர்ப்பில் 30 வருடங்கள் வரையும் உயிர் வாழ்கின்றன.





## தாயாக...



சிவிங்கிகளில் பெண் சிவிங்கிகள் தமது குட்டிகளுடன் ஒரு குழுவாக வசிக்கின்றன. வயதுக்கு வந்த ஆண்கள் தனியாக வாழ்கின்றன. இனப்பெருக்கக் காலத்தில் ஆணும் பெண்ணும் ஒன்று சேர்கின்றன. பெண் சிவிங்கிகளின் கர்ப்பகாலம் 400 நாட்களாகும். பெரும்பாலும் ஒரு தடவையில் ஒரு குட்டியை மட்டுமே பிரசவிக்கின்றன. எப்போதாவது இரண்டு குட்டிகளை பிரசவிக்கும்.

தாய் நின்றபடியே பிரசவிக்கின்றது. கீழே விழும் குட்டியை நக்கி தலையால் உடலை உயர்த்தி நிற்கச் செய்ய தாய் உதவுகிறது. எழுந்து நிற்கும் குட்டி உடனடியாக மடிதேடி பால் குடிக்கும். தாய்க்கும் சேய்க்கும் உறவு நெருக்கமானது. பிறக்கும் போதே ஐந்து அடி உயரம் கொண்டதாகக் குட்டி விளங்குகிறது. முதல் இரண்டு வாரங்களாக தாய் தன்னருகே வைத்து காப்பாற்றும். சில சமயங்களில் தந்தை குட்டிக்கு உதவலாம். குட்டி 13 மாதம் வரை பால் குடிக்கும். மேலும் மூன்று முதல் ஐந்து மாதங்கள்வரை தாயுடனேயே குட்டி இருக்கும். குட்டிகளை கழுதைப் புலி, காட்டுநாய் என்பன தாக்க முனைவதுண்டு.

ஆங்கிலத்தில் ஜிராப் (Giraff) என சிவிங்கி அழைக்கப்படுகிறது. AL-ZIRAFAH என்ற அரபு வேர்ச் சொல்லில் இருந்தே இப் பெயர் உருவானது. 1590 களில் Giraffa என இத்தாலி மொழியில் அழைக்கப்பட்டு வந்தது. 16ம் நூற்றாண்டில் இது ஜிராப் என ஆங்கிலத்தில் உருமாறியது.

பொதுவாகவே தாவர பட்சணிகளின் இரைப்பை பெரியதாகவும் மூன்று அல்லது நான்கு பகுதிகளைக் கொண்டதாகவும் இருக்கும். இலை தழை மற்றும் பட்டைகள் உயர் நார்த்தன்மை கொண்டவை. அவற்றை இரை மீட்டு அசை போட்டு உணவை சமிபாட்டுக்கு ஏற்ற வகையில் கூழாக்க வேண்டிய தேவை இருப்பதால் இவற்றின் இரைப்பை பல பிரிவுகளாக அமைந்துள்ளன.

தினமொன்றுக்கு 29 கிலோ உணவு உண்ணும். எனினும் ஏழு கிலோ உணவு கிடைத்தாலும் சமாளித்துக் கொள்ளும். வாவுல் என சிங்களத்தில் அழைக்கப்படும் மகிழம் பழத்தை விரும்பி உண்கின்றன. இது அதிகம் தண்ணீர் அருந்தும் மிருகம் அல்ல. நீர் அருந்தாமல் இருந்து பின்னர் நீர் கிடைக்குமானால் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நீர் அருந்தும் வழக்கம் கொண்டவை.


சிவிங்கி உடலை கூர்ந்து பார்த்தால் அது பல வர்ணங்களால் ஆனது என்பது தெரிய வரும். அதன் ரோமங்களில் 11 வகையான இரசாயனங்கள் இருப்பதால் மஞ்சள், மண் நிறம், கருப்பு, ஒரென்ஜ் எனப் பல வர்ணங்களைத் தருவதோடு ஒளிரும் தன்மையையும் பெறுகின்றன. மரங்களிடையே மறைந்து நிற்கும்போது எதிரிகளின் கண்களில் இருந்து தப்பிவிட இப்புள்ளிகள் உதவுகின்றன.

இது தான் ஒண்டு தன் வேலை ஒண்டு என்றிருக்கும் மிருகம். வித்தியாசமான ஒலிகளை விரும்புவதில்லை. நீங்கள் மிருகக் காட்சிச்சாலைக்கு சென்றால் அநாவசிய ஒலிகளை எழுப்பாதீர்கள்.





கிராபிக்ஸ்தான்! சிவிங்கி மரம் ஏறாது!



இதன் தலை அதிக பருமன் கொண்டதல்ல. மண்டை ஓடு இடைவெளி கொண்டதாக அமைந்துள்ளது. உடல் நிறையை சம நிலையில் பேணும் பொருட்டே தலை இவ்விதம் அமைந்துள்ளது. நிற்கும் போதும் தண்ணீர் அருந்தும் போதும் உடல் பருமனை சமநிலைப்படுத்தும் வகையில் கால்களை அகற்றி வைத்திருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 on February, 2012.